# தமிழரசு

1-11-1980 50 காசு





சோடியம் ஆவி சாலை விளக்குகள்
ஏற்றி வைக்கும் விழா
சென்னை (15.10.1980)



# தமிழரசு.


1—11—1980

மலர் : 11 இதழ் : 9




உள்ளே...


| | பக்கம் |
|---|---|
| உயிரைக்காக்க உதவுவோம் ... ... | 2 |
| வண்ணக்கைத்தறி வளர்ப்போம் ... ... | 7 |
| மதுரைச் செய்திகள்-மதுரச் செய்திகள் ... | 9 |
| சீரான வாழ்வுக்குச் சிறுசேமிப்பு ... ... | 10 |
| ஓவியம் என்பது பேசாத கவிதை ... ... | 13 |
| பாரதியின் தமிழ்மொழிப் பற்று ... ... | 19 |
| புரட்சிக் காவியத்தின் புதிய அத்தியாயம் ... | 23 |
| மாணவர் பக்கம் ... ... | 30 |
| முதுமலையில் ஒருநாள் ... ... | 33 |
| திருத்தணியில் ஒரு முன்மாதிரி மருத்துவ முகாம் | 37 |
| உலகெலாம் தமிழ்ப்பரப்பும் ஒப்பற்ற நிறுவனம் ... | 45 |










# உயிரைக்காக்க உதவுவோம்!

## மாண்புமிகு முதல்வர்

"இன்று நாகரிகம் என்னும் பெயரில் நாம் கைக்கொள்ளும் பழக்க வழக்கங்கள், உண்ணும் உணவு யாவும், நம் உடல் நலத்தைப் பாதுகாக்கத் தக்கதாக இல்லை. சத்தில்லாத உணவை உண்ணுகிறோம். காபி, டீ போன்ற கேடு விளைவிக்கும் பானங்கள் அருந்துகிறோம். சிலர் புகை பிடிக்கிறார்கள். இவை நமது உடல் நலத்தைச் சிறிது சிறிதாகக் கெடச் செய்து, நம்மை நோய்க்கு இருப்பிடமாகச் செய்து விடுகிறது. உடற்பயிற்சி என்பது நமது அன்றாட வாழ்க்கையில் ஒரு அம்சமாக இல்லை. இப்படிப்பட்ட இயந்திர வாழ்க்கையில் இன்று மனித இனத்தை அழித்துக் கொண்டிருக்கும் கொடிய நோய் காச நோய்.

உலக நாடுகள் இந்த நோயை எதிர்த்துப் போராடுவதில் முனைந்து செயல்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டுள்ளன. நமது இந்தியத் துணைக் கண்டத்தில் காசநோய் ஒரு பெரிய ஆட்கொல்லியாக இருந்துவருகிறது. அறுபத்து மூன்று கோடி மக்கள் தொகை கொண்ட நமது நாட்டில் சுமார் 90 லட்சம் பேர் காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது. அதாவது ஆயிரம் பேர்களில் பதினைந்து பேர் காச நோயாளிகள். இந்த 90 லட்சம் பேர்களில் 25 லட்சம் பேர், பிறருக்கும் இந்த நோயைத் தொற்றவைக்கும் நிலையில் உள்ளனர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் காச நோய் காரணமாக ஆண்டுதோறும் ஐந்து லட்சம் மக்கள் சாவைத் தழுவுகின்றனர். தமிழகத்தின் 4½ கோடி மக்களில் 10 லட்சம் பேர் காச நோய்க்கு உள்ளாகி இருக்கிறார்கள். இவர்களில் 2½ லட்சம் பேர், முழு காச நோயாளிகளாக உள்ளனர். இது



## காசநோய் வில்லைகள்




மகிழ்ச்சி தரத்தக்க ஒன்றல்ல. பல துறைகளில் நாட்டு முன்னேற்றத்துக்காகவும் மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் மனித இனத்தின் வளத்துக்காகவும் பாடுபட்டு வரும் இந்நேரத்தில், மக்களில் ஒரு பகுதியினர் காசநோயால் அவதியுற்று வருவது பெரிதும் வேதனைக்குரிய செய்தியாகும். எனவே இந்த நிலையை மாற்றியே தீரவேண்டும். போர் முனைப்புடனும், தற்காப்பு உணர்வுடனும், நாம் அனைவரும் செயல்பட்டு நமது மக்களை, இந்தக் கொடிய நோயின் பிடியிலிருந்து, விடுவித்தாக வேண்டும்.

தமிழகத்தில் அனைத்து அரசு மருத்துவமனைகள், காச நோய் நிலையங்கள், ஆகியவற்றில் இந்த நோயுற்றவர்களுக்கு இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இப்படி சுமார் 9½ லட்சம் பேர் சிகிச்சை பெறுகிறார்கள். தமிழகத்தில், காசநோயால் ஆண்டுதோறும் நாற்பத்தையாயிரம் (45,000) உயிரிழப்புகள் ஏற்படுவதாகத் தெரிகிறது.

ஒரு காலத்தில் காசநோய், தீராத வியாதி என்ற நிலையிருந்தது. இன்று அந்த நிலை மாறிவிட்டது. அறிவியல் ஆராய்ச்சியாளர்களின் முயற்சியால் இந்நோயை எந்தக் கட்டத்திலும் கட்டுப்படுத்திவிட முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இப்பொழுது இந்த நோய்க்கிருமிகளை மனித உடலில் இருந்து விரட்டி, அழித்து, நோயை அறவே குணப்படுத்திவிட முடியும் என்பதோடு மட்டுமல்லாமல், நோய் வராமல் தடுத்திடவும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை எளிதாகவும் இலவசமாகவும் கிடைக்கின்றன.

நாம் இவைகளையெல்லாம் பயன்படுத்தி இக் கொடிய நோய்க்கெதிராகப் போராடி வருகிறோம். இந்த நோய் வராமல் தடுப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். பச்சிளம் குழந்தைகள், பள்ளிச் சிறுவர்கள், சிறுமிகள் ஆகியோருக்குக் காசநோய்த் தடுப்பு மருந்தான பி.சி.ஜி. அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 163 லட்சம் பேர்களுக்கு இத்தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காகப் புதிய கொள்கைகளையும், வழி முறைகளையும் வகுத்துச் செயல்பட்டு வருகிறோம்.

இப்பிரச்சினையை நாடு தழுவிய வகையில் அணுகி, நமது முயற்சிகளை முறைப்படுத்தி, ஆவன செய்ய இந்திய அரசு 1962 ஆம் ஆண்டில் சிறந்த திட்டமொன்றை வகுத்துச் செயல்படுத்தத் துவங்கியது. காசநோயால் பீடிக்கப்படாதவர்களை, அந்நோய்க்காளாகாமல் தடுப்பது, ஏற்கெனவே நோய் தொற்றியிருப்பவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தக்க சிகிச்சை அளித்து



19.4.80-ல்

புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய காசநோய்த் தடுப்புக் கழக ஆண்டு மாநாட்டில், அக் கழகத்தின் தலைவர் திரு. எஸ். ரங்கநாதன், ஐ.சி.எஸ்., அவர்கள் பரிசுக்குரிய கேடயத்தை தமிழ் மாநில காசநோய்த் தடுப்பு அலுவலர் டாக்டர் ஜி. சந்திரசேகரனிடம் வழங்குகிறார்.

நோயைத் தீர்க்கும் தீவிரப் பணியில் ஈடுபடுவது ஆகிய இரண்டு செயற்பாடுகளும் அத்திட்டத்தின் அடிப்படை அம்சங்களாகும். காச நோயாளிகளைக் கண்டுபிடித்து, சிகிச்சையளித்து அவர்களைக் குணப்படுத்துவதன் மூலம் அவர்கள் நலம் பெறுவதோடு, அவர்களால் பிறருக்கு நோய் தொற்றக்கூடிய அபாயமும் அகற்றப்படுகிறது. ஏனெனில் ஒரு காச நோயாளி மூலம்தான், அந்நோய் பிறருக்குப் பரவுகிறது. காசநோயாளி இருமும் போதும், தும்மும்போதும் எண்ணற்ற காச நோய்க் கிருமிகள் வெளிப்பட்டு, காற்றில் கலந்து அருகில் உள்ளவர்கள் சுவாசிக்கும் போது அவர்களது உடம்பிலும் தொற்றிவிடுகிறது. இருக்கும் வரையில் சமுதாயம் இந்த நோயின் ஆபத்திலிருந்து நீங்கிவிட்டதாகக் கொள்ள முடியாது. இதை நாம் அனைவரும் உணர வேண்டும். நகரங்களில் வாழ்வோரும் கிராமங்களில் வாழ்வோரும், குறிப்பாக ஏழை எளிய மக்கள், இந்த நோயின் தன்மை பற்றிய உண்மைகளை உணர்ந்து கொள்ளும் வகையில், விரிவான, விரைவான பிரச்சாரம் செய்யப்படவேண்டும். இந்தப் பணியைக் காசநோய்க் கழகம் முழு மூச்சுடன் செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டில், எல்லா மாவட்டங்களிலும், மாவட்டக் காசநோய் நிலையங்களும் அவற்றைச் சார்ந்து, கிளை நிலையங்களும் உள்ளன. மற்றும் மாநிலத்தின் எல்லா மருத்துவமனைகளிலும் ஆரம்பச்சுகாதார நிலையங்களிலும் காசநோய்க்கு இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் முற்றிய நிலையில் உள்ளவர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற அரசு காச நோய் மருத்துவமனைகள், சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இவை தவிர தனியார் மருத்துவமனைகள், கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்திலும் மற்றும் இதர அரசு மருத்துவமனைகளிலும் காசநோயாளிகளுக்கென 3583 படுக்கை வசதிகள் தமிழகத்தில் உள்ளன.

காசநோயாளிகள் மருத்துவமனைகளில் தங்கித்தான் சிகிச்சை பெற வேண்டுமென்பதில்லை. அவரவர்களின் இல்லங்களில் இருந்துகொண்டே, மருத்துவ ஆலோசனைகளை அவ்வப்போது பெற்று மருந்துகளை வேளை தவறாமல் முறையாகப் பயன்படுத்தி வந்தால் எளிதில் குணம் அடையலாம். தொடர்ச்சியான ஓய்வோ, உயர்ரக உணவோ தேவையில்லை. சாதாரணமாகக் கிடைக்கும் சத்துள்ள உணவுகளே போதுமானதென்று ஆராய்ச்சியின் பயனாய்க் கண்டறிந்துள்ளார்கள். இந்த விவரங்களைப் பாமர மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். காச நோய் சிகிச்சை சாதாரண மனிதனின் கைக்கு எட்டாத ஒன்று என்ற நிலை, இப்போது இல்லை என்பதையும், ஏழை எளியவர்களும் தக்க சிகிச்சையை எளிதாகப் பெற்று சிரமமின்றிக் குணம் அடையலாம் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இந்த அரிய பணியில் காசநோய்க் கழகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி வருவது பாராட்டுக்குரியது.

1939 ஆம் ஆண்டில் இந்திய காசநோய்க் கழகம் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு காசநோய்க் கழகமும் துவங்கப்பெற்று சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. 1950 முதல் 1979 வரை இக்கழகம், காசநோய் முத்திரை 10 பைசா, 20 பைசா வில்லைகள் விற்பனையின் மூலம் ரூ. 95 இலட்சம் வரை திரட்டியுள்ளது.

இந்தப் பணம் ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த காசநோயாளிகளுக்குச் சிகிச்சைக்காகப் பொருளுதவி புரியவும், காச நோய் மருத்துவ நிலையங்கள், சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவற்றை அமைக்கவும், விரிவாக்கவும், சிகிச்சை நிலையங்களுக்குத்தேவையான எக்ஸ்ரே போன்ற கருவிகள் வழங்கவும் காசநோய் பற்றிய விவரங்களைப் பொதுமக்களிடையே திரைப்படம், விளம்பரங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து பரப்புவதற்காகவும், காசநோய்க்கழகத்தால், பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய தன்னியக்க நிறுவனம் ஒன்று தனித்து நின்று, இரக்கத்திற்குரியவர்களைப் பிணியிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு நல்வாழ்வளிக்கும் சீரிய பணியில் ஈடுபட்டிருப்பது, போற்றிப் பாராட்டத்தக்க அரிய செயலாகும். எனவே இக்கழகம் ஆற்றி வரும் அரும்பணியில் அதற்குத் துணை நிற்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். காச நோய்த் தடுப்பு முத்திரை வில்லைகளை 20 காசு கொடுத்து வாங்குவதன் மூலம் இந்த நோயால் அழியும் மனித உயிரைக் காப்பாற்ற நமக்குரிய சிறிய பங்கைச் செய்கிறோம் என்ற உணர்வினை நாம் அனைவரும் பெறவேண்டும். பெரிய தொகைகளைத்தான் அளிக்க வேண்டுமென்பதில்லை. சிறு தொகைகளே போதும்.

நாலரைக் கோடி தமிழக மக்கள் அனைவரும் இந்த இயக்கத்தில் தங்கள் பங்கைச் செய்தால், இக்கழகத்திற்குக் கணிசமான தொகை கிடைக்கும். கேளிக்கைக்காகவும், காபி, டீ, அருந்துவதற்கும், புகை பிடிப்பதற்கும், வெற்றிலை போடுவதற்காகவும் ஒவ்வொருவரும் எவ்வளவோ செலவிடுகிறீர்கள். ஒரு சிறிய தொகையைக் காசநோய்க் கழகத்துக்கு வழங்குவது உங்களுக்குச் சிரமமில்லை. எனவே இந்தப் பணியில், இந்த விற்பனை இயக்கத்தில் உங்களது சிறிய பங்கைச் செய்யுமாறு உங்களனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் அளிக்கும் சிறிய தொகை உங்கள் உடன் பிறப்புகளின் உயிரைக் காக்க உதவுகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ள மாநில-மாவட்ட காசநோய்த் தடுப்புக் கழகத்தார் அயராது பணியாற்றி, இப்பணியில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னணியில் நின்று, கடந்த 11 ஆண்டுகளாக வெற்றிக் கேடயத்தை ஈட்டித் தந்துள்ளார். எனவே காசநோய்க் கழகத்தாருக்கும், அவர்களது வெற்றிக்குக் காரணமாயிருந்து வந்துள்ள உங்களனைவருக்கும் என் நன்றியைக் கூறி இக்கழகம் தனது பணியில் தொடர்ந்து வெற்றி பெற உங்களது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க. வணக்கம்.

**(மாண்புமிகு முதல்வர் அவர்களின் இவ்வுரையை, 14-10-80ல் சென்னை தொலைக் காட்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் படித்தார்கள்.)**

"தேசிய குடும்பநல மாத விழாவை வழக்கம்போல் இந்த ஆண்டும், தமிழக அரசு சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகின்றது. மக்கள்தொகைப் பெருக்கம் எப்படி இருக்கிறது. அதனாலே விளையக்கூடிய சமுதாய, பொருளாதாரச்சிக்கல்கள் எவை, எவை, என்பது பற்றி எல்லாம், மக்களுக்குப் பல்வேறு விதமான பிரச்சார முறைகளின் வாயிலாக, எடுத்துச் சொல்லி, விளக்கி, இரு குழந்தைகளுடன் கூடிய சிறு குடும்பம் அமைத்து வாழ வேண்டும் என வலியுறுத்திச் சொல்வதற்குதான், தேசிய குடும்ப நலத்திட்ட மாத விழா எடுக்கப்படுகின்றது.

மக்கள் அனைவரும் சிறு குடும்ப நெறி ஏற்க முன்வர வேண்டும். குறிப்பாக, தாய்க்குலம், இத்திட்டத்திற்கு நல் ஆதரவு தர வேண்டும் என்று நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கருத்து தெரிவித்து உள்ளார்கள். இந்தக் கருத்துக்கு ஏற்ப இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழ்நாட்டில்தான் குடும்பநல பிரச்சாரத்திற்கு என்று, அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்ட குடும்பநலத் திட்ட பிரச்சாரக்கூட்டம் நடத்தப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. அந்தத் திட்டத்தை வெகுவாகப் பாராட்டிய இந்திய அரசு, பிற மாநிலங்களும் இம்முறையைப் பின்பற்றுவது நலம் எனக் கூறியது.

டில் 1971-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கட்தொகைக்கணக்கின் படி, இந்தியா 54.7 கோடி மக்களைக் கொண்டதாக இருந்தது.

கடந்த பத்து ஆண்டுகளில், எந்த அளவு மக்கள்தொகைப்பெருக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனைஅறிய தற்போது கணக்கெடுப்பு நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் 1971-ஆம் ஆண்டு மக்கட்தொகை 4 கோடியே 12 இலட்சம் இருந்தது. 1981-ல் 4 கோடியே 70 இலட்சம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவு பெருகிவரும் மக்கள் தொகை நாட்டில், சமுதாயத்தில் ஏராளமான பிரச்சனைகளை நாம் அறியாமலேயே உருவாக்கி கொண்டு வருகிறது. இதைத்தான் நமது



# குடும்ப நலத் திட்டத்தில்-மகத்தான வெற்றி காண்போம்!

## மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே

குடும்ப நலத்திட்டம் என்ற கோட்பாடு தனிப்பட்ட எந்த நபருடைய அல்லது கட்சியினுடைய கொள்கை அல்ல. இது நாடு முழுமைக்கும் உண்டான சமுதாயக் கொள்கை. அனைவரும் ஒருமித்த கருத்துடன் ஏற்றுச் செயல்படுத்த வேண்டிய கொள்கை. எனவே, இதில் அரசியல், சாதி சமய, இனவேறுபாடுகளுக்கோ வேற்றுமைகளுக்கோ இடமில்லை. ஆகையால் எவ்வித வேறுபாடும் இன்றி, நாட்டு

இன்றைக்கு மக்கட்தொகைப் பெருக்கம், வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. இது உலகத்தில் உள்ள மிகப்பெரும் பிரச்சனை. உலக மக்கள் தொகை கி. பி. 2,000 ஆண்டில் 600 அல்லது 700 கோடியை எட்டிவிடும் என்றும், இதனால் உலகில் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள் எழக்கூடும் என்றும், பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நம்நாட்டைப் பொறுத்த மட்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''மக்கள் தொகைப் பெருக்கம் மதுவைபோல் கேடு பயக்கும்'' என்று சொன்னார்கள்.

தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் குடும்பநலத் திட்டத்தைக் காலங்காலமாக பரப்பி வந்ததன் காரணத்தால்தான், தமிழ்நாட்டில் இத்திட்டம் தங்கு தடை இன்றி வெற்றிப் பாதையை நோக்கி, நடைபோட முடிந்தது. சமீபத்தில் வட மாநிலங்களில் இருந்து வந்த, குடும்ப நல விளம்பர அலுவலர்கள் குழு ஒன்றுடன்

நான் பேசிய நேரத்தில், அவர்கள் என்னிடத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் சட்டமன்றத்துக்குள்ளேயும், வெளிமேடைகளிலும், குறிப்பாக திருமணங்களிலும், குடும்பநலத் திட்டத்தை ஏற்க வேண்டியதன் அவசியம் பற்றி முதலமைச்சரும், அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும் எடுத்துச்சொல்லி வருகின்றார்கள். இது மகிழ்ச்சிக்குரியது என்று என்னிடத்தில் சொன்னார்கள். அவர்களுக்குத் தந்தை பெரியார் அவர்கள் 1924-25ம் ஆண்டிலேயேதமிழகத்தில்செய்து வந்த குடும்பநலப் பிரச்சாரத்தையும் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களையும் கூறி, அவரோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் மேடைகள்தோறும் இத்திட்டத்தைப்பற்றி செய்து வந்த பிரச்சாரம் குறித்து எடுத்துச்சொல்லி, அவைதான் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மற்றவர்களும், குடும்ப நலத் திட்டம் பற்றி தடையின்றி எல்லா மட்டத்திலும் பேசுவதற்குவாய்ப்பை அளித்துள்ளது என்று சொன்னேன்.

அமைச்சர் என்ற முறையில் மட்டும் இல்லாமல், மருத்துவர் என்ற முறையில் ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இந்தக் குடும்பநலத் திட்ட நிரந்தரச் சிகிச்சையை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஏதோ வேண்டாத நிலைமைகள் எல்லாம் உருவாகின்றன என்ற, உண்மைக்குப் புறம்பான வதந்திகள் பரவியிருக்கின்றன. இவைகள் போக்கப்பட்டாக வேண்டும். நான் நிச்சயமாகச் சொல்லுவேன், குடும்பநலத் திட்ட நிரந்தரச் சிகிச்சை செய்து கொள்வதால், இத்தகைய நிலைமைகள் ஏதும் ஏற்படுவதுஇல்லை. குடும்பநலத் திட்டம் என்று சொன்னால் நிரந்தரச் சிகிச்சை மட்டும்தான் என்று பொருள் கொள்ளக்கூடாது. எத்தனையோ விதமான தற்காலிக முறைகளும் இருக்கின்றன.

அண்மையில் குடும்பநலத் திட்டத்திற்குப் புதுமொழி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதை ஆங்கிலத்தில், ''Not before twenty Not after thirty, two is plenty'' என்று கூறுகிறார்கள். இதனுடைய கருத்து, பெண்கள் இருபது வயதுக்கு முன்பாக திருமணம் செய்து கொள்ளக்கூடாது. முப்பது வயதுக்குள் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளைப் பெற வேண்டும். அதற்கு மேல்பிள்ளை பெறுவது என்பது கூடாது. குடும்பங்களில் இரண்டு குழந்தைகள் என்பதே அதிகமாகும் என்பதுதான் இந்தப் புதுமொழியின் பொருளாகும்.

குடும்பநலத்திட்டம் சிறப்பாக வெற்றிபெற வேண்டுமானால் தாய்க் குலத்தைச் சார்ந்தோர் அதிக அக்கறை காட்டவேண்டும். அவர்கள்தான் குடும்பத்தில் பிரச்சனைகளைத் தாங்குகின்ற சுமைதாங்கிகளாக இருக்கின்றார்கள். அடுத்த குழந்தை வேண்டுமா வேண்டாமா என்று முடிவெடுக்கும் முழு உரிமையைத் தாய்மார்கள் பெற்றாக வேண்டும். அந்தநிலை உருவாகி விடுமானால் நிச்சயமாக இத்திட்டம் வெற்றி பெற்றுவிடும்.

குறிப்பாகத் தொழிலாளத் தோழர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தொழில் அதிபர்கள் நிரந்தர அறுவைச் சிகிச்சை ஏற்கும் தொழிலாளர்களுக்கு, அரசு அளிக்கும் ஊக்கத் தொகையுடன், தங்கள் நிதியில் இருந்தும், தனி ஊக்கத்தொகை அளித்து வருகின்றனர். தொழிலாள நண்பர்களே! ஒரு தொழிலாளியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம் அவருக்கு மாத வருமானம் ரூ. 300 என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு ஆறு குழந்தைகள் இருந்தால் என்னவாகும்? ஏழ்மையும், வறுமையும், பற்றாக்குறையும், நோய் நொடிகளும்அவரது குடும்பத்தைச்சுற்றி முற்றுகையிடும். இதையெல்லாம் காணும் தொழிலாளி நிம்மதி இல்லாத வாழ்வை நடத்த வேண்டி வரும். அதே நேரத்தில் அளவாக இரண்டே குழந்தைகளுடன் சிறு குடும்பம் அமைத்துக் கொள்ளும் ஒருவர் வருமானத்துக்குள் வளமாக வாழும் வாய்ப்பு கிடைக்கும். நல்ல சத்துணவு, சிறந்த கல்வி, உடை முதலியவற்றைக் குழந்தைகளுக்கு நல்கிட முடியும். நல்ல உயர் கல்வி அளிப்பதன் மூலம் தங்கள் குழந்தைகளைப் பெரிய உத்தியோகங்களுக்கு அனுப்பலாம். சமுதாய அந்தஸ்தைத் தங்களைவிட தங்கள் குழந்தைகளுக்கு உயர்த்தித்தரலாம். தொழிலாளத் தோழர்களுக்கும், தாய்மார்களுக்கும் குறிப்பாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன். குடும்பநலத் திட்டத்தை அறியாத அல்லது ஏற்காத ஒரு ஏழை, அளவுக்கு மேல் குழந்தைகளைப் பெற்று, மேலும் ஏழையாகின்றான். அதே நேரத்தில் வசதிபடைத்த ஒருவர் ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்று, தனது வசதி வாய்ப்புகளை மேலும் பெருக்கிக்கொள்கின்றான். எனவே, தொழிலாளத் தோழர்கள் இத்திட்டத்தை முழுமையாக ஏற்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக்குடும்பநலத்திட்டத்தை எவ்விதமான கட்டாயமும் இன்றி துன்பமும் இன்றி (Family Planning without tears) நாம் செயல்படுத்த வேண்டும் என்பதில் தமிழ்நாடு, அரசு, தனி அக்கறை காட்டி வருகிறது. எனவே, தமிழகத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கென உள்ளஆரம்பசுகாதார நிலையம் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் வரை, அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ள வாய்ப்புகளை அனைவரும் பயன்படுத்திக் கொண்டு ''சிறு குடும்பநெறி'' வெற்றி பெற செய்ய வேண்டும். ''உழவும் தொழிலும் ஓங்கச் செய்வோம். மழலை இரண்டே போதும் என்போம்'' என்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் பொன்மொழியினை ஏற்று அரசிற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விளம்பரங்களின் வாயிலாகவும், பிரச்சாரத்தின் மூலமாகவும், மனம் மாறி, நம்பிக்கையோடு இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள வருகின்றவர்களை அன்போடு அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவத் துறையைச் சார்ந்த அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்கு நம்முடைய கடமைகளை ஆற்றி, குடும்பநலத் திட்டத்தில், இலக்கு மீறிய வெற்றியை, தமிழகத்தில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அனைவரையும் வேண்டுகிறேன்.

சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டு வந்த, தேசிய குடும்பநல மாத விழா, இன்றுடன் நிறைவு பெறுகிறது. மாத விழாதான் நிறைவு பெறுகின்றதே தவிர, குடும்பநலத் திட்டப் பணிகள் தொய்வில்லாமல் தொடர்ந்து விறுவிறுப்பாக நடந்தாக வேண்டும். மாத விழா மூலம் நாடு முழுமையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டம் பற்றிய விழிப்புணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு நடப்பு ஆண்டில் இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று, தமிழக அரசின் சார்பிலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன்.

[சென்னை வானொலி
16—10—80]



நாட்டின் பெருமையை வளர்க்கக் கல்வி அத்யாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாகவும் வாழத் தொழில் அபிவிருத்தி அவசியம்.



வளரும் தமிழகம்

# வண்ணக் கைத்தறி வளர்ப்போம்!

## மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் திரு எஸ்.என். இராசேந்திரன்

தமிழ் நாட்டிலுள்ள 5.56 லட்சம் கைத்தறிகள் ஏறக்குறைய 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் சுமார் 30 இலட்சம்பேரை வாழ வைக்கின்றன. இந்த $5\frac{1}{2}$ இலட்சம் கைத்தறிகளில் சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள 1069 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கி வருகின்றன. இவை ஆண்டொன்றுக்கு 93 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்கின்றன.

கைத்தறித் துணிகள் என்றவுடனே, பதனிடப்படாத பண்டைய வடிவங்களிலேயே உற்பத்தி செய்யப்படும் சேலைகளும் வேட்டிகளுமே எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாக இருந்த காலம் ...டு. மாறி வரும் மக்களின் ரசனை...க்கும் போட்டியிட்டு முன்னேறிவரும் பஞ்சாலைத் தொழிலுடன் கைத்தறித் தொழிலும் நிலைத்து நிற்க வேண்டுமெனில், அத்தொழிலை நவீனப் படுத்துவதுடன் நெசவு முறைகளில் புதிய உத்திகளைப் புகுத்துவதும் அவசியம் என்பதைக் கைத்தறி நெசவாளர்களும், மத்திய, மாநில அரசுகளும் உணர்ந்துள்ளனர். மக்கள் விரும்பிவாங்கும் வகையில் கைத்தறித் துணிகளில் புதிய டிசைன்களை அறிமுகப்படுத்துவதுடன், அதன் தரத்தை உயர்த்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று உணர்ந்து பல்வேறு திட்டங்களை தமிழநாடு அரசு கைத்தறி மற்றும் நெசவுத் துறை மூலம் அமல்படுத்தி வருகின்றது.

கைத்தறித் தொழிலை நவீனமாக்குவதன் மூலம் நவீன வடிவங்களுடன் பல்வேறு வண்ணங்களில் நல்ல தரமான கைத்தறித் துணிகளின் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நெசவாளர்க்கும் உடல் சிரமத்தைக் குறைப்பதுடன், அதிக வருவாயை ஈட்டித்தரும் விதத்தில் இருக்குமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டமொன்று ரூ. $15\frac{1}{2}$ இலட்சம் செலவில் 1979 -80ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. நடப்பு ஆண்டிலும் இத்தகைய திட்டம் ஒன்று $15\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவில் அமல் செய்யப்படுகிறது.

நெசவாளர்கள் தொன்று தொட்டு ஒரே விதமான டிசைன்களையும், ஒரே விதமான ரகத் துணிகளையுமே உற்பத்திசெய்து வந்தனர். இதன் காரணமாக கைத்தறித் துணிகள் விற்பனை குறைந்து, சரக்கு தேக்கம் ஏற்பட்டது. இவ்வாறான நிலையைத் தளர்த்தும் வகையிலும், நெசவாளர்களுக்கும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வேலை கொடுத்து, ஒரு நியாயமான நிரந்தர ஊதியத்தைக் கிடைக்கச் செய்யவும், கைத்தறித்துணிகளின் உள்நாட்டு, வெளிநாட்டு விற்பனையைப் பெருக்கும் விதத்திலும் மத்திய அரசும், மாநில அரசும் பலதிட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன மத்திய அரசு, சென்னையிலும், காஞ்சிபுரத்திலும் கைத்தறி நெசவாளர்கட்குப் புதிய டிசைன்களை உருவாக்குவதற்கும் துணி உற்பத்தியில் பல முன்னேற்றங்களைக் காண உதவிபுரிவதற்கும் இரு ''வடிவமைப்பு மற்றும் பணி நிலையங்களை'' நடத்தி வருகிறது.

தமிழக முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு 1977-78ம் ஆண்டில் மதுரையில் ரூ.$3\frac{1}{2}$ இலட்சம் செலவில் ஒரு வடிவமைப்பு மற்றும் பணி நிலையத்தைக் கோ- ஆப்டெக்ஸ் மூலம் அமைத்தது. இந்த வடிவமைப்பு மற்றும் பணிநிலையம் மதுரை மற்றும் முகவை மாவட்டத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 872 டிசைன்களை அவற்றின் உற்பத்தியில் அறிமுகப்படுத்தவென விநியோகித்துள்ளது. 1979-80ம் ஆண்டில் இதே போன்ற ஒரு வடிவமைப்பு மற்றும் பணிநிலையம் திருச்சியில் ரூ. 3.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று நடப்பு ஆண்டில் கோவை மற்றும் சேலத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் இரண்டு வடிவமைப்பு மற்றும் பணி நிலையங்களும் 1981-82ம் ஆண்டில் திருநெல்வேலி மற்றும் கும்பகோணத்தில் 2 பணி நிலையங்களும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வடிவமைப்பு நிலையங்களின் சேவை கைத்தறித் துணிகளின் தயாரிப்பில், தரத்தில் மற்றும் விற்பனையில் மட்டுமின்றி நெசவாளர்களின் வாழ்விலும் கூட ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கும் எனக் கூறினால் அது மிகையாகாது.

கைத்தறிகளை நவீனப்படுத்தல் மூலமும், உற்பத்தியை மக்கள் தேவைக்கேற்பத் திருத்தி அமைத்தல் மூலமும் கூட்டுறவு இயக்கத்திலுள்ள கைத்தறிகளில் இப்பொழுது டெரி டவல் போன்ற

ஏற்றுமதி ரகங்களும், பாலியஸ்டர் சட்டைத்துணிகளும், சேலைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வருடம் தீபாவளிக்காக ''சில்டான்'' ''சில்கோன்சா'' போன்ற புதுரகப் புடவைகள் கைத்தறியில் உற்பத்தியாகி கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் மூலம் விற்பனைக்கு வெளிவந்துள்ளன.

கைத்தறித் தொழிலை நவீனமாக்குதல் எவ்வளவு முக்கியமோ, அதுபோன்று கைத்தறித் துணிகளை விற்பனை செய்யக் கையாள வேண்டிய விற்பனை முறைகளும் மிக முக்கியமானதாகும். தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உற்பத்தியின் மதிப்பு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 60 கோடியாகும். இதில் சுமார் 50 சதவீதத்தை மாநிலச் சங்கமான கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து விற்பனை செய்துவருகின்றது. இந்த நிறுவனம் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கென தமிழ்நாட்டில் 240 விற்பனை நிலையங்களையும், நாட்டின் இதர மாநிலங்களில் 180 விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் விற்பனையாகும் கைத்தறித் துணிகளின் விற்பனை அளவு 1977-78ல் ரூ. 28 கோடியாக இருந்தது, 1979-80ல் ரூ. 36 கோடியாக உயர்ந்துள்ளது.

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்க வாங்குவோரின் கண்களையும், கருத்துக்களையும் கவரும் விதத்தில் இந்த விற்பனை நிலையங்களை அழகுபடுத்துவது மிக முக்கியமாகும். இதன் பொருட்டு கோ-ஆப்டெக்சின் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரங்களில் மட்டுமின்றி, கிராமங்களிலும் கூட இம்மாதிரியான விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனை நிலையங்கள் ஒவ்வொன்றாக நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டில் புதிய விற்பனை நிலையங்களைத் திறக்கவும், ஏற்கனவே உள்ளவற்றை நவீனப் படுத்தவும் தமிழ்நாடு அரசு ரூ. 56½ இலட்சம் நிதியுதவி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அளித்துள்ளது. இந்த நிதியுதவி கொண்டு 32 புதிய விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டதுடன் 29 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டன. இவ்விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல் மூலம் மட்டும் கைத்தறித் துணிகளின் விற்பனை அதிகரித்து விடுமெனக் கூறமுடியாது. ஏனெனில் இவ்விற்பனை நிலையங்களில் பணியாற்றும் விற்பனையாளர்கள் வாங்குவோரின் ரசனைகளை அறிந்து, அவர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்று, துணிகளை விற்பனை செய்வது இன்றியமையாததாகும். இதற்கென விற்பனை நிலையங்களில் பணியாற்றும் விற்பனையாளர்கட்குத் தனியே பயிற்சியளிக்கும் திட்டமொன்றும் அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது நடைமுறையிலிருக்கும் ''அரசு ஊழியர்களுக்குக் கடன் முறை விற்பனைத் திட்டமும் கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருக்கப் பெரிதும் உதவுகிறது. இதுதவிர, இதர பெரிய தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் கடன் முறை விற்பனைத்திட்டம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் அமல்படுத்தப் பட்டு வருகிறது.

மேலும் பத்திரிகை, வானொலி இவை மூலம் நல்ல விளம்பரங்கள் கொடுத்து கைத்தறித் துணியின் விற்பனையை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத்திட்டங்களின் மூலம் கைத்தறித் துணி விற்பனையில் மிகப் பெரிய சாதனையை கோ-ஆப்டெக்ஸால் அடைய முடிந்துள்ளது.

சமூகத்திலுள்ள எல்லாப் பிரிவினரும் விரும்பும் வகையில் இப்பொழுது பல வண்ண ரக கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் மக்கள் மேலும் மேலும் கைத்தறித் துணியைப் பெருமளவில் வாங்கி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வாழ்வளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

**(சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. 19-10-1980)**

---

## பார்த்தோம் படித்தோம்

'கிராமக் களஞ்சியத்திட்டம்' என்னும் என்னுடைய கட்டுரைக்குச் சித்திரம் வரைந்தவர், திட்டத்தின் ஒரு கட்டத்தை அழகாக விளக்கி வரைந்துள்ளார்.

—முனைவர் சாலை இளந்திரையன், புதுடில்லி.

பேரறிஞர் அண்ணா சிறப்பு மலர் அற்புதமான தொகுப்பு. அருமையான படைப்பு.

—ப. மூர்த்தி, பெங்களூர்.

'ரோகிணி' பற்றிய கட்டுரை மிக அருமை!

—எம். ஷம்மிகுமார், வேலூர்.

'தமிழரசு' பல்வேறு வகையிலும் சிறப்பாக உள்ளது.

—வி. சந்திரன், சென்னை.30.

அண்ணா இல்லம் பற்றிய கட்டுரை படித்தேன். அண்ணாவின் மீதான பாசம் தூண்டப்பட்டு, என்னைக் கண்ணீர் மல்க வைத்தன!

—கோ. இராமலிங்கம், சென்னை-28.

1.10.80 இதழின் நடுப்பக்கத்தில் அண்ணாவின் நினைவு இல்லச் சிறப்பு எங்களை வெகுவாகக் கவர்ந்தது.

—பெ. மு. கு. சுந்தரராசன், திருவில்லிபுத்தூர்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களின் 'தமிழகத்தில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டம்' என்ற கட்டுரை மிக நன்றாக இருந்தது.

—எஸ். எஸ்[illegible]ாசன், தென் எலப்பாக்கம்.

வனவிலங்கு வார விழாவைப் பற்றிய அட்டைப்படம் மட்டுமில்லாமல், அழகான கட்டுரையையும் கண்டேன்.

—எஸ். சௌந்தரராசன், நி. பஞ்சம்பட்டி.

காந்தியடிகளின் அமுதமொழி என் இதயத்தைக் கவர்ந்தது. இதுபோல் பெரியோர்களின் அமுதமொழிகளையும் வெளியிடவேண்டுகிறேன்.

—கே. பி. முருகேசன், திண்டுக்கல்.

மதுரையிலுள்ள வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம், தண்ணீர் வற்றி வறண்டு கிடக்கும் காட்சியைப் பலர் பார்த்திருக்கலாம். ஆனால், இனிமேல் அக் காட்சியையாரும்காணமுடியாது. வைகையில் கிணறு வெட்டி அங்கிருந்து குழாய்மூலம் தண்ணீர் கொண்டுவந்து தெப்பக்குளம் எப்பொழுதும் நீர் நிறைந்ததாக அமைந்திருக்க மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலய நிருவாகிகள் திட்டம் வகுத்துள்ளனர்.

இத்திட்டம் ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு மதுரையில் நடைபெறுவதற்கு முன்னர் நிறைவேற்றப்படும்.

* * *

● மதுரை திருப்பரங்குன்றம் கோவிலுக்குப் பின்பக்கம் உள்ள மலையில் ஆறுபடை வீடுகளில் மீதியுள்ள ஐந்துபடை வீடுகளுக்கு உரிய ஆலயங்களைக் கட்ட திட்டமிட்டுள்ளார்கள்.

திருப்பரங்குன்றம் வரும் பக்தர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் ஆறுபடை வீடுகளுக்குச் செல்ல வாய்ப்பளிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

* * *

● மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்திற்குத் தங்கரதம் செய்யப்பட்டு வருகிறது. இத் தங்கரதப் பணிகள் உலகத்தமிழ் மாநாட்டுக்கு முன்னர் நிறைவேற்றப்படும்.

● மதுரைக் கோவிலில் வழக்கமாக மீனாட்சித் திருக்கல்யாணம் ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய மண்டபத்தில்தான் நடைபெறும். செல்வந்தர்களும், அரசு அதிகாரிகளும் அனுமதிச்சீட்டு பெற்று பார்த்து வருவதாக ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டு வந்தது. எனவே, அதை மாற்றி ஆடிவீதியில்மீனாட்சிதிருக்கல்யாணத்தை நடத்த இவ்வாண்டு கோயில் நிருவாகிகள் திட்டமிட்டபொழுது சிலர் எதிர்த்தனர்.

திருக்கல்யாணத்தை வீதியில் நடத்தக்கூடாது. திருமணம் நடக்கின்றபொழுது சூரியஒளி படக்கூடாது என்றும் குரல் எழுப்பினார்கள்.

இதற்குக் கோயில் நிருவாகத்தினர் அளித்த பதில் இதுதான்:

"ஆடிவீதி"என்பது பெயரில்வீதி வருகிறதே தவிர அது வீதியல்ல. கோயிலுக்கு மட்டுமே சொந்தமான இடம். மதில் சுவர்களுக்கு உட்பட்டது. ஒரு மனிதனுக்குச் சிரசே பிரதானம் என்றாலும் கையும் காலும் அவசியம்தான். அதுபோல கோவில் மதில் சுவருக்கு உட்பட்ட இடம் அனைத்தும் புனிதமானதுதான்.

"நல்ல முறையில் மேடை அமைத்து திருக்கல்யாணம் நடக்கின்ற இடம், இலட்சம் பேர் இருந்து பார்க்கின்ற இடம். அனைத்தும் கொட்டகை அமைத்து, சூரிய ஒளியே படாமல் நல்லமுறையில் அமைக்கப்பட்டது. அதையும்விட சூரிய ஒளிபட்டால் எந்தத் தவறும் இல்லை. சூரியனையே பகவானாக வணங்குவது நமது நாடு.

நூறு ஆண்டுகளாகத்தான் இந்த இடத்தில் திருக்கல்யாணம் நடந்து வந்திருக்கின்றதே தவிர இதற்கு முன் வேறு இடத்தில் தான் நடந்து வந்திருக்கின்றது. அதுவும் தவிர இடத்தை மாற்றுவதற்கு மதுரை ஆலய சிவாச்சாரியார்கள், ஆலய ஜோதிடர், மதுரை ஆதீனம், வாரியார் சுவாமிகள் முதலிய அனைவரையும் கேட்டறிந்து ஆகம விதிகளுக்கு புறம்பில்லை என்றும், ஆடி வீதியில் நடத்தலாம் என்றும் அனுமதி கொடுத்தபின்தான் ஆடி வீதியில் நடத்துவது பற்றி முடிவு செய்யப்பட்டது.

"ராமன் காட்டிற்குச் செல்கிறான். அப்பொழுது மக்கள் எல்லாம் ராமனைப் பின் தொடர்கின்றனர். மக்களைப் பார்த்து ராமன் சொல்கிறான். அயோத்திக்குச் செல்லுங்கள் என்று. அப்பொழுது மக்கள் சொல்கின்றனர் 'ராமன் இருக்கும் இடம் தான் அயோத்தி' என்று. ராமனால் அயோத்திக்கு சிறப்பே தவிர, அயோத்தியினால் ராமனுக்குச் சிறப்பில்லை. இடத்தால் மீனாட்சிக்குச் சிறப்பில்லை: மீனாட்சிக் கல்யாணம் நடந்தால் அந்த இடம் புனிதமடைகிறது என்று தெரிவித்தார்கள். அதன்படி ஆடி வீதியில் திருக்கல்யாணம் இவ்வாண்டு நடைபெற்றது.

இதனால் ஏழை, எளியவர்கள், செல்வந்தர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் பக்தர்கள் அனைவரும் கண்டு களித்தனர். திருக்கல்யாணத்தைக் காண கோயில் நிருவாகத்தினர் செய்த ஏற்பாட்டை நல்லவர்கள் அனைவரும் பாராட்டியுள்ளனர்.

● மதுரைக் கோவிலின் சார்பில் மதுரை திருப்பரங்குன்றத்தில் நாலரை இலட்சம் ரூபாய் செலவில் பெண்கள் பள்ளிக்குக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

● மதுரை நகரில் பதினைந்து இலட்ச ரூபாய் செலவில் யாத்திரிகள் தங்கும் விடுதியும், பதினைந்து இலட்ச ரூபாய் செலவில் பணியாளர்கள் குடியிருப்பதற்கான வீடு கட்டவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

● உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அறநிலையத்துறை சார்பில் உள்ள ஆலயங்கள் பங்கேற்கும் அரும்பொருட்காட்சி சீரிய முறையில் நடைபெறும்.



# சீரான வாழ்வுக்கு சிறுசேமிப்பு!

மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு துணைத் தலைவர்

திரு **எஸ்.எஸ். இராஜேந்திரன்** அவர்கள்

தமிழரசுக்கு அளித்த சிறப்புப் பேட்டி

**கேள்வி:** தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறையின் தோற்றம் - நோக்கம் இவைகளைப் பற்றி விவரங்கள் கூற இயலுமா ?

பதில் : தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை, 1965 முதல், ஒரு முது நிலை ஐ. ஏ. எஸ். அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு தனித்துறையாக ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. அதற்கு முன், கருவூலக் கணக்குத்துறை இயக்குநரின் கீழ், சிறுசேமிப்புத் துறை செயல்பட்டு வந்தது.

இத்துறையின் முக்கிய நோக்கம்.

1. மக்களிடையே சிறுசேமிப்பின் அவசியத்தை உணர்த்துதல்.

2. சிறு சேமிப்பின் மூலம் மாநிலத்தில் வசூலித்த தொகையிலிருந்து, நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு உபயோகித்தல்.

**கேள்வி:** சிறுசேமிப்புத் திட்டங்களில் என்னென்ன வகைகள் இருக்கின்றன?

பதில் : சிறுசேமிப்புத் திட்டத்தில் 11 வகையான திட்டங்கள் உள்ளன.

1. பப்ளிக் பிராவிடன்ட் பண்டு. (Public Provident Fund)

2. கியூமிலேட்டிவ் டைம் டெப்பாசிட். (Cumulative Time Deposit)

3. தேசிய சேமிப்புப் பத்திரம் (2வது வெளியீடு) (National Savings Certificates)

4. தேசிய சேமிப்பு பத்திரம் (3வது வெளியீடு) (National Savings Certificates)

5. போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பேங்க் (Post Office Savings Bank)

6. தேசிய வளர்ச்சிப் பத்திரம் (National Development Bond)

7. தேசிய சேமிப்புப் பத்திரம் (நான்காவது வெளியீடு) (National Savings Certificates)



8. தேசிய சேமிப்புப் பத்திரம் (ஐந்தாவது வெளியீடு) (National Savings Certificates)

9. தேசிய சேமிப்பு ஆண்டுத் தொகைத் தரும் பத்திரம் (National Savings Annuity Certificates)

10. ரெக்கரிங் டெபாசிட் (Recurring Deposit)

11. டைம் டெபாசிட்: (Time Deposit)

1. ஆண்டு
2. ஆண்டு
3. ஆண்டு
5. ஆண்டு.




**கேள்வி:** சிறுசேமிப்பு முறையினால் ஏற்படும் நன்மைகள் என்ன?

பதில் : சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல, சிறுகச் சிறுகச் சேமித்து ஒரு குறித்த காலத்திற்குப் பிறகு ஒரு பெரும் தொகையை அதிக வட்டியுடன் திரும்பப் பெறலாம். பிள்ளைகளின் மேல் படிப்பு, திருமணம் போன்ற காரியங்களுக்கு உரிய நேரத்தில் கைகொடுக்கும். சேமிப்பின் மூலம் ஒருவன் சிக்கனமாக வாழக்கற்றுக் கொள்கிறான். வரவுக்கு மீறி செலவு செய்வதையும் தவிர்க்கிறான். சிறுசேமிப்பு மூலம் ஈட்டப்பட்ட பணம் நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுகிறது.

**கேள்வி :** சேமிப்புப் பழக்கம் பற்றிய பிரச்சாரங்கள் நகரங்கள் மட்டுமின்றி, கிராமப்புறங்களிலும் தீவிரப்படுத்தப்படுகிறதா?

பதில் : சிறுசேமிப்புத் திட்டங்களைப் பாமர மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், ஆண்டுதோறும் மாநிலம் முழுவ



தும் 100 சிறு சேமிப்பு நாடகங்கள் நடத்தப்படுகின்றன. மற்றும் தற்போது ஆறு மாவட்டங்களில் சிறு சேமிப்பு சினிமா மூலம் கிராம மக்களுக்குச் சிறுசேமிப்புத்திட்டம் விளக்கப்படுகிறது. அனைத்துக் கிராமங்களிலும் சிறுசேமிப்பின் அவசியத்தை உணரும் பொருட்டு, விளம்பர ஊர்தி இல்லாத மாவட்டங்க்ளுக்கு ஆண்டுக்கு மூன்று மாவட்டம் வீதம் சிறுசேமிப்பு படத்துடன் கூடிய விளம்பர ஊர்தி வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறுசேமிப்புத் திட்டம் பற்றி இளம் பருவத்திலேயே மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஆண்டுதோறும் மாவட்டம் வாரியாகப் பள்ளி கல்லூரி வாரியான சிறு சேமிப்பு நாவண்மை போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**கேள்வி :** **புதிய திட்டங்கள் — எதிர்காலத் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

பதில் : சிறுசேமிப்புத் திட்டங்களைக் கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் பரவலாக்கவும் தீவிரப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இன்னும், மக்கள் உள்ளத்தில் பதியும் வண்ணம் தீவிரப் பிரச்சாரம் [illegible] திட்டம் உள்ளது.

**கேள்வி :** **சிறுசேமிப்பில் தமிழ்நாடு சாதனை புரிந்துள்ளதா?**

பதில் : 1978-79-ல் தமிழ்நாட்டில் எப்போதும் இல்லாத ஓர் உயர் அளவில் 11 மாவட்டங்கள் சிறு சேமிப்பு இலக்கினை மிஞ்சி, ஊக்கத்தொகை பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இச்சாதனை மூலம் சிறுசேமிப்பின் அவசியத்தை தமிழக மக்கள் எந்த அளவு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

**கேள்வி :** **இத்திட்டத்தில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உள்ளதா?**

பதில் : நிச்சயமாக உள்ளது. சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் 1977-78-ல் அதாவது, நான் முதன் முதலாகப் துணைத்தலைவராகத் பொறுப்பேற்ற ஆண்டில் 10,50,244 பேர் மேற்படித் திட்டத்தில் சேர்ந்து அகில இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட அதிகப்படியான பேர் சேர்த்த பெருமை தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது. தொடர்ந்தும் முன்னணியில் இருந்து வருகின்றது.

**கேள்வி :** **சேமிக்கும் பழக்கம் குறித்து தங்கள் துறையின் சார்பில் ஆற்றிவரும் பணிகள் என்னென்ன?**

பதில் : இத்துறையின் முக்கிய நோக்கம் மக்களிடையே சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்தையும் உணர்த்தி தங்கள் பிற்காலத் தேவைக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் மக்களைத் தயார்ப்படுத்துவதே. அதன் அடிப்படையில் செய்தித்தாள் விளம்பரம், சிறுசேமிப்பு நாடகம், சிறுசேமிப்பு நாவண்மைப் போட்டி, மகளிர் ஆடவர்களை

ஏஜெண்டாக நியமனம் செய்து நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவுகிறது.

**கேள்வி :** தங்கள் காலத்தில் ஏதேனும் புதுமையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

**பதில் :** ஒவ்வொரு ஆண்டும் கணிசமாக சிறுசேமிப்பு மூலம் பணம் ஈட்டி, வளர்ச்சிப் பணிகளுக்குத் தந்துள்ளோம். சிறுசேமிப்பின் அவசியத்தை எழுத்தாளர்கள் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கும் பணியைச் செய்து வருகிறோம். இதற்காக 'அமுதசுரபி' பத்திரிகை வாயிலாக கூட கதைப் போட்டி ஒன்று கூட நடத்தியுள்ளோம்.

**கேள்வி :** சிறுசேமிப்பின் அவசியத்தை சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் அளவுக்கு திரைப்படங்களை எடுக்கும் திட்டம் உண்டா?

**பதில் :** சிறுசேமிப்பு பற்றி மக்களைக் கவரும் வகையில் திரைப்படம் எடுக்கும் கருத்து பற்றி தமிழக முதல்வர் அண்ணன் புரட்சித் தலைவருடன் பேசி வருகிறேன்.

**கேள்வி :** 'சிறுசேமிப்பு' குறித்துப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் பாடமாகக் கொண்டு வர அரசிடம் கலந்து பேசும் திட்டமுண்டா?

**பதில் :** இது பற்றி பரிசீலிக்கப்படும்.

**கேள்வி :** எந்தெந்த சேமிப்புத் திட்டங்களில் வருமான வரி விலக்கு முழுமையாக அளிக்கப்படுகிறது?

**பதில் :** 10 ஆண்டு CTD. மற்றும் 15 ஆண்டு PPF. கணக்குகளுக்கு வருமான வரிச்சட்டத்தின் கீழ் (Section 80-C of Income-Tax Act) வரி விலக்கு அளிக்கப்படுகிறது. மற்றும் மேற்கண்ட கணக்கில் பெறப்படும் வட்டி அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படுவதோடு, செல்வ வரியிலிருந்தும் முழுதும் விலக்கு அளிக்கப்படுகிறது. தேசிய சேமிப்புப் பத்திரம் இரண்டு மற்றும் மூன்றாவது வெளியீடுகளுக்கு கிடைக்கும் வட்டித் தொகை அனைத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. மற்ற அனைத்து தேசிய சேமிப்பு கணக்குகளுக்கும் ஆண்டிற்கு ரூபாய் 3,000 வரையிலான வட்டிக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.



# ஓவியம் என்பது பேசாத கவிதை!



வண்ணப் பறவை சிறகடித்துப் பறக்கிறது!

என்ன இன்பமூட்டும் எழில் பூங்கா கண்ணில் தெரிகிறது!

கண்ணைக் கவரும் காட்சிகளோ திரும்பும் திசையெல்லாம்!

சென்னை அண்ணாசாலையிலுள்ள 'வி.டி.ஐ' என்று புகழப்படும் விக்டோரியா டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டுக்குள்' (Victoria Technical Institute) நுழைகிறோம். அங்கேதான் இந்த வண்ணக் கோலத்தைப் பார்க்கிறோம்.



''கையெழுத்து நன்றாக இருக்க வேண்டியதும் படிப்பின் ஒரு பகுதி என்பதை அறியட்டும். குழந்தைகளுக்கு எழுத்துக்களை எழுதுவதற்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால், சித்திரம் வரையக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றுஇப்பொழுது கருதுகிறேன். பூக்கள், பறவைகள் போன்றவைகளைக் குழந்தை பார்த்தே தெரிந்து கொள்ளுவதைப்போல, எழுத்துக்களையும் அது பார்த்தே தெரிந்துகொள்ளட்டும். பொருள்களைப் பார்த்து அவற்றை வரையக் கற்றுக்கொண்ட பிறகு, எழுத்துக்களை எழுதக் கற்கட்டும். அப்பொழுது அக்குழந்தையின் கையெழுத்து அழகாக அமையும்'' இதைச் சொன்னவர் அண்ணல் காந்தியடிகள்.

காந்தியடிகள் சொன்ன இந்தக் கருத்துக்கும், இங்கே நடக்கின்ற ஓவியக் கண்காட்சிக்கும் ஒரு பொருத்தம் இருக்கிறது.

ஆம். காந்தியடிகள் பிறந்த நாளையொட்டித்தான் ஆண்டுதோறும் இந்நிலையத்தின் சார்பில், ஓவியப் போட்டி நடக்கின்றது. அந்த ஓவியங்கள்தாம் இங்கே காட்சியளிக்கின்றன.!

சின்னஞ்சிறு விரலில் பிறக்கின்ற அந்தச் சித்திரங்கள்-ஓவியங்கள்-கலை நுணுக்கமான வேலைப்பாடுகள் - எல்லாம் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.

ஓரிடத்தில், பன்னிறப் பறவைகள் சிறகடித்துப் பறக்கின்ற ஓவியத்தைப் பார்க்கின்றோம்.

பி.வி.கிரி



அதை அப்படியே காவியம் தீட்டலாம் போல இருக்கிறது. ஆம். 'ஓவியம் என்பது பேசாத கவிதை கவிதை என்பது பேசும் ஓவியம்'' என்றார் ஒரு மேலை நாட்டுக் கவிஞர். அது எத்துணைப் பொருத்தம்!

காடு, மலை, பூங்கா-ஓவியங்கள் எல்லாம் நம் கண்ணைக் கவர்கின்றன. அதைப் படைத்தவனை நம் மனம் பாராட்டுகின்றது! பார்த்துக் கொண்டே போகிறோம்.

கீதாவுபதேசம் - சரிகையினால் ஆன(வி) சித்திர வேலைப்பாட்டைப் பார்க்கிறோம். இன்னொரு இடத்திலும் இதே கீதாவுபதேசக் காட்சி கண்ணில் படுகிறது. இது, மரத்தில் புதைக்கின்ற ஒரு வகையான வேலைப்பாடு (Rose Wood Inlay Work) இதன் விலை எவ்வளவுதெரியுமா? ரூ. 10,750!

சந்தன மரத்தாலான தசாவதாரக் காட்சியை எப்படிச் சித்திரித்திருக்கிறார், அந்தச் சித்திரக்காரர்!

நவநீதக்கிருஷ்ணன், முருகன், கணேசன், கலைவாணி இப்படி, பல ஓவியங்கள் வண்ணத்தால், எம்ப்ராய்டரியினால், மரத்தால் உருவகம் பெற்றுள்ள பாங்கைப் பார்க்கிறோம். படைப்பாற்றல் மிக்க அந்த ஓவியனின் கற்பனையை - திறமையை அவை வெளிப்படுத்துகின்றன.

வண்ணம் குழைத்து ஓவியம் தீட்டுவது ஒரு வகை. பல வண்ண மரங்களைக் கொண்டு உருவாக்குவது மற்றொரு வகை. இதை 'Colour Wood Relief' என்று சொல்வார்கள். இந்த வகையில் உருவான இயற்கைக் காட்சி ஒன்றைப் பார்த்துப் பிரமிக்கிறோம். இதை வாங்கி வீட்டில் வைத்து அழகு பார்க்கலாம் என்று மனம் துடிக்கிறது. விலையைப் பார்க்கிறோம். அம்மாடி! 15,000 ரூபாய்!

அங்கே - இருபக்கமும் துவார பாலகர்கள் போல நிற்கின்ற மரச் சிற்பங்கள் கண்ணில் படுகின்றது. கோயிலுக்குள் வந்து விட்டோமா என்ற பிரமையே ஏற்படுகிறது.



கண்ணனை வேண்டும் மீரா- மரத்தால் (Rose Wood) நுண்ணிய வேலைப்பாடுடன் கூடிய அந்த எழில்மிகு சித்திரமும் வேங்கை மரத்தாலான மிக மிக நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்களும் சிற்பியின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன.

பார்த்துக் கொண்டே போகிறோம். கல், களிமண், உலோகம், மரம், துணி, கண்ணாடி, எனாமல், எம்ராய்டரி, வர்ணம், சரிகை இவற்றாலான சித்திரங்கள் - சிற்பங்கள் நம் கண்ணையும் கருத்தையும் வெகுவாகக் கவர்கின்றன.

திரௌபதை துகிலுரிதல், கிருஷ்ணலீலா, தமயந்தி அன்னத்தைத் தூது விடுதல், போன்றவை நம் சிந்தைக்கு விருந்தூட்டுகின்றன.

எல்லாவற்றையும்விட நம்மை கவர்வது, சந்தன மரத்தாலான 'மிகச் சிறிய' அளவிலான (Sandal Wood Miniature) ராமர் பட்டாபிஷேகம், பஞ்சமுகக் கணபதியும் தான். இதைச் செதுக்குவதற்கு உருவாக்குவதற்கு சிற்பி அதற்கான பூதக்கண்ணாடியைப் போட்டுக் கொண்டு வேலை செய்ய வேண்டுமாம்.

இந்த ஓவியக் கண்காட்சியில் மொத்தம் 217 ஓவியப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும், காந்தி ஜெயந்தியையொட்டி இந்த ஓவியப் போட்டி நடத்தப்படுகிறது. இப் போட்டியில் தென்னிந்தியா



முழுவதிலுமிருந்து - தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஓவியர்கள் கலந்து கொண்டு தத்தம் கைவண்ணத்தைக் காட்டுகிறார்கள்.

துணியில் வண்ணம் தீட்டும் கலை தான் 'கலம்காரி' என்பது. இதை ஆந்திர நாட்டைச் சேர்ந்



தவர்கள் அதிகம் செய்கின்றனர். மரத்தில் புதைக்கும் கலையில் கர்நாடகமும் எல்லாக்கலைகளிலும் தமிழ்நாடும் சிறந்து விளங்குகின்றன.

இந்தக் கண்காட்சியில், ரூ. 75 முதல் ரூ. 32,000 வரை விற்பனைக்கு ஓவியங்கள் -சிற்பங்கள் உள்ளன.

யாளி ஒன்று. அதன் வாயில் பெரிய யானைத் தந்தம். அந்தத் தந்தத்திலே அரிய சித்திர வேலைப்பாடு. இதன் விலை தான் ரூ. 32,000!

பதினோராவது தடவையாக இந்தக் கண்காட்சி இப்போது நடைபெறுகிறது. இதில் பங்கு கொண்டுள்ள ஓவியங்கள் முதல், இரண்டு, மூன்று பரிசுகளைப் பெறும். அவை முறையே ரூ.1000, 500, 250 ஆகும். இவைதவிர ஐந்து சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.



ஓவியங்கள் விற்பனை செய்யப்பட்டால் ஓவியருக்கும் அத்தொகையில் பங்குண்டா?

உண்டு. ஒரு ஓவியம் விற்பனை செய்யப்பட்டால், அதில் 15 சதவிகிதம். வி.டி.ஐ. எடுத்துக் கொள்ளும். மீதியை ஓவியருக்குத் தரும்.

கண்காட்சியில் இடம்பெறும் ஓவியங்களைத் தவிர, இங்கே நாள்தோறும் விற்கப்படும் கலைப் பொருட்களுக்கும் நல்ல ஆதரவு இருந்து வருகிறது. நம் நாட்டவர் மட்டுமல்லாது, வெளிநாட்டவரும் இங்கே அதிக அளவில் வருகின்றனர். அங்குள்ள பொருட்களை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்! நம் நாட்டின் கலைப்



பெருமை வெளிநாடுகளில் பட்டொளி வீசிப் பறப்பதுடன், அந்நியச் செலாவணியும் கணிசமாக நமக்குக் கிடைக்கிறது!

இந்தியாவின், குறிப்பாக தமிழ்நாட்டின் கைவினைஞர்களின் கலைப்பொருட்கள் மேலைநாட்டினரின் இல்லங்களை அலங்கரிக்கின்றன. என்றால், அதில் நமக்கெல்லாம் பெருமைதானே?

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

— மருது

**22—9—80**

இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப் பணித்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து இவ்வாண்டு மேற்கொள்ளும் இத்திட்டத்துக்கு இதுவரை ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**23—9—80**

புதுக்கோட்டை மாவட்டம் புனர்குளத்தில் 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும், தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை விரைவில் திறக்கப்படும். இதன்மூலம் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என வேளாண்மைத் தொழில்கள் இணையகத் தலைவர் திரு. வியாகத் அலிகான் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசப்பட்டு இறைவைப் பாசனத் திட்டம் ரூ. 6.68 இலட்சம் மதிப்பில் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் சுமார் 500 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும். ஏறத்தாழ 435 டன் உணவு உற்பத்தி அதிகரிக்கும். மாண்புமிகு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள்.

**24—9—80**

தமிழ்நாட்டில் ஏற்கெனவே 11 ஆயிரம் பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேலும் 4 ஆயிரம் முதியோருக்கு உதவித் தொகை வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் கூறியுள்ளார்.

**26—9—80**

ஏற்றுமதி செய்வதற்கான ஆயத்த(ரெடிமேடு) துணிவகைகளைத் தயாரிக்கத் தமிழ்நாட்டில் தனித்தொழில்பேட்டைகளை அமைக்க ஆலோசித்து வருவதாக மாண்புமிகு பொதுப்பணி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ்.என். ராசேந்திரன் அவர்கள் சென்னையின் நிருபர்களிடம் தெரிவித்தார்.

**27—9—80**

மன்னார்குடி-ஒரத்தநாடு திருவோணம் சாலையில், வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ், ரூபாய் 10.86 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள நான்கு மூழ்கும் பாலங்களை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**28—9—80**

தூத்துக்குடி உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்க 500 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார்.

**29—9—80**

ஓய்வுபெறும் காவல்துறையினருக்கு வீடு கட்டித் தருவதற்கு அரசு ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் தனி வாரியம் அமைகிறது.




**25—9—80**

இரண்டு கோடி ரூபாய் செலவில் தந்தை பெரியார் அறிவியல் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளதாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்துள்ளார்.



**30—9—80**

தமிழ்நாட்டிலுள்ள 384 பஞ்சாயத்து யூனியன்களில் 69 பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் 1981-ம் ஆண்டுக்குள் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் கூறினார்.





# குடிசைகள் கோபுரங்களாகின்றன!

**- ஜி. ஆனந்தன்**

மனிதர்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுவதே ஒரு மக்கள் அரசின் தலையாய கடமையாகும்.

அதிலும் அடிப்படை உரிமைகள் என்று சொல்லப்பட்டவை உண்ண உணவு-உடுக்க உடை. இருக்க வீடு இவை. அவற்றை கிடைக்கச் செய்திட வேண்டும்.

அந்த வகையில் மக்கள் அரசாக இன்று திகழ்ந்து மணம் பரப்புகின்ற நம் தமிழக அரசு தனது கடமைகளை குறைவின்றி நிறைவாகச் செய்து கொண்டிருக்கிறது. மக்கள் நலத் திட்டங்களினால் நிறைவான அளவுக்குவறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள - சாமான்யர்கள் சமுதாயத்தின் அடித்தட்டில் இருப்பவர்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள்

இது ஒரு குடிசை மாற்று வாரியப் பகுதியின் குடியிருப்பில் நடந்த உரையாடல்:

குடும்பத் தலைவன்: அப்பாடா பாடுபட்டு வர்ற மனுஷன் பாய் பிரிச்சுப்படுக்க இப்பத்தான் ஒரு நல்ல இடம் கிடைச்சிருக்கு.

தலைவி: ஒண்டுக் குடிசையிலே உட்கார இடமில்லாம - உட்கார்ந்து கிட்டே தூங்கிய காலமெல்லாம் மறந்து போகலே....

தலைவர்: அந்தக் கேவலமான நிலைமையை மாத்தின புண்ணியவான் அண்ணாவை என்னால் மறக்கவே முடியாது.

தலைவன்: ஆமாங்க! அண்ணா ஒரு தெய்வம் என்று கூடச் சொல்லலாம். இல்லாட்டி ஏழைகளின் மனசை புரிஞ்சிக்கிட்டு இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்யமுடியுமா?

தலைவி: ஏங்க உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நாம் புளியந்தோப்பிலே சேரிப்பகுதியிலே குடிசைப் போட்டுட்டு இருந்தோமே. அப்போம் எல்லாம் திடுதிப்பென்று நெருப்பு வச்சு கொளுத்துவோனுக என்று நம்ம வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டது போலல்லவா இருந்தது. ஏண்டா சாமி! மழை வருது என்று பயந்தநேரம் அது.

தலைவன்: அப்படித்தானே கோமளம் நம்மவீடு தீப்பிடிச்சு எரிஞ்சி போச்சு! உடனே நாம இடத்தை விட்டு வெளியேறி - எதிர்த்தாப்பலே குடியேறினோம்.

தலைவி: இப்பவும் எனக்கு நல்லா ஞாபகமிருக்கு அந்த நேரத்திலேதான் அந்த தீப்பிடிக்காத வீடுகளை குடிசையிலே இருக்கிற மக்களுக்காக கட்டித் தரணும்னு திட்டம் போட்டு நிறைவேற்றினார்.

தலைவன்: அண்ணாவின் அரசு கட்டிக் கொடுத்த வீடு-இன்னைக்கு கோபுரமாக உயர்ந்திருக்கு. குப்பை மேட்டிலே—குடிசையிலே இருந்த நாம இப்ப கோபுரமா உயர்ந்திருக்கிற வீட்டிலேயே நாலாவது மாடியிலே சுகமாக இருக்கிறோம்.

தலைவி: ஏணிப் படிகள் சினிமா பாத்தீங்களா? அதுபோல..நமக்கெல்லாம்....

தலைவன்: ஏணிப் படியா இல்ல கோமளம் மாடிப்படியா மாறி நமக்கெல்லாம் உயர்வு தந்தவர் அண்ணா.

தலைவி: உப்பிட்டவரை உள்ளளவும் மறக்காதேன்று சொல்லுவாங்க...

வீடு கொடுத்தவர்களையும் ஜென்ம ஜென்மத்துக்கும் மறக்கவேகூடாது.

தலைவர்: வீடு கொடுத்து நமக்கு வசதி செஞ்ச அரசாங்கத்தை நம்மாலே மறக்க முடியுமா !சரி நான் கொஞ்ச நேரம் தூங்கிட்டு வேலைக்குப்போகணும் என்னை புறவு எழுப்பு.

இத்துடன் உரையாடல் முடிகிறது.

இப்படி ஒரு குடும்பத்தில் மட்டுமல்ல. ஒவ்வொரு குடும்பத்து மக்களும் அரசைப் பாராட்டிப் புகழும்நிலை இருக்கிறது.

ஆகவே,

மக்களின் ஆசைகளை - அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற இந்த அரசு ஒரு நல்லரசாக திகழ்கிறது.

சென்னை மாநகரில் 1,428 குடிசைப் பகுதியில் 9,94,000 குடிசைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். அதாவதுசென்னை மாநகரின் மக்கட்தொகையில் 38 சதவீதம் குடிசைப் பகுதியில் வாழ்கின்றனர். இப்பகுதியில குடிநீர், கழிவுநீர் கழிப்பிடம், தெரு மின்விளக்கு சரியான நடைபாதை முதலிய அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த அளவில் தான் உள்ளன என்பது தெரிந்ததே.

சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளை மாற்றி அமைத்து, குடிசைவாழ் மக்களுக்கு குடியிருக்க குறைந்த வாடகையில் நல்ல வீடுகள் அளித்தும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தியும் குடிசை மாற்று வாரியம் கடந்த பத்தாண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

வாரியம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1977ஆம் ஆண்டு முடிய கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் 20,939.

செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 2155 இலட்சம்.

*1977-78, 1978-79, 1979-80* இம் மூன்று ஆண்டுகளில் கட்டி

முடிக்கப்பட்ட குடியிருப்புகள் 8504. செலவிடப்பட்டதொகை ரூ. 970 இலட்சம். புதிதாக திட்டமிடப்பட்டுள்ள குடியிருப்பு கள் 4188. செலவிடப்படும் தொகை ரூ. 348. இலட்சம். நடப்பிலுள்ள குடியிருப்புகள் 3,712. அவைகளின் மதிப்பு ரூ. 366 இலட்சம்.

### சுற்றுப்புற மேம்பாட்டுத்திட்டம்

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட இயலாத குடிசைப் பகுதி களில் குடிநீர் வழங்குதல், பாதை கள் போடுதல், கழிவுநீர் கழிப் பிடங்கள் கட்டுதல், மின் விளக் குப்போடுதல் போன்ற அடிப் படை வசதிகள் செய்துதரப்படு கின்றன. இத்திட்டத்திற்காக 1977ஆம் ஆண்டு வரை 478 குடிசைப் பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டன. அதற்கான செலவிடப்பட்ட தொகை ரூ. 410.93 இலட்சம். 1977 முதல் 1980 மார்ச் முடிய இத்திட்டம் 310 குடிசைப் பகுதிகளில்81,168 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. செலவிடப்பட்ட தொகை ரூ. 153.42 இலட்சம். புதிய திட்டங் கள் மூலம் பயனடையும் குடும் பங்கள்.....30,000. தோராய மதிப்பீடு ரூ.50.00 இலட்சம்.

### உலக வங்கித் திட்டம்:

சில பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்தி செயல் முறையில் உள்ளது. இப் பகுதிக ளில் அடிப்படை வசதிகள் அமைப் பதன்றி, சாலைகள், தொழிற் கூடம், பள்ளிகள், மருத்துவ மனை போன்ற வசதிகள் ஏற் படுத்தி கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் இதுவரை பயன டைந்த குடும்பங்கள் 18,388. செலவிடப்பட்ட தொகை ரூ.337 இலட்சம்.

நடைபெற்றுக் கொண்டிருக் கும் திட்டத்தின் மூலம் பயனடை யும் குடும்பங்கள் 9,844. அதற் கான மதிப்பீடு ரூ. 157.00இலட் சம். சென்னை பெருநகர் வளர்ச் சிக் குழும[illegible]த்தின் இரண்டாம் திட் டத்தில் [illegible]லம் பலன் பெறவிருக் கும் குடும்பங்கள் 50,000. இதன் மதிப்பீடு ரூ. 2370 இலட்சம்.

### சமூக நலப் பணிகள்:

குடிசை வ[illegible] மக்களின் கல்வி வசதியைப் பெருக்கவும், சுற்றுப் புறத்தையும் வீட்டையும் எவ் வாறு சுத்தமாக வைத்துக்கொள் ளவேண்டும் என்பதை அறிவுறுத் தவும் ஒவ்வொரு பகுதியிலும் தமிழ்நாடு செய்தித்துறை மூலம் திரைப்படக் காட்சி காண்பிப்ப தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி, முதியோர் கல்வி; குழந்தைகள் காப்பகம், சத்துணவுத் திட்டம், சேமிப்புத் திட்டம், மருத்துவ வசதி போன்றவைகள் சமூகநல உதவியாளர்களைக் கொண்டு அவ்வப்போது போதித்து வரு கின்றது. இதற்காக வாரியம் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

### ஏகாம்பரம் முனுசாமி தெரு

மயிலாப்பூர் தொகுதியில் 130-வது வட்டத்தில் பக்கிங்காம் கால்வாய் ஓரமாய் அமைந்துள்ள இப்பகுதியில் 360 குடியிருப்புகள் கட்ட ரூ. 34.88 இலட்சம் செலவில் கட்ட தீர்மானிக்கப்பட் டது. ஆனால் 188 குடியிருப்பு களே ரூ. 17.44 இலட்சம் செல வில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதி குடியிருப்புகள் பொது மக் கள் ஒததுழைப்பின்மையால் எடுக்க முடியவில்லை.

### அசோக் நகர் ஆர். 3 காவல் நிலையத் திட்டம்:

இத்திட்டப் பகுதி தியாகராய நகர் தொகுதியில் 114 வட்டத் தில் அசோக் நகர் ஆர் 3 காவல் நிலையத்தின் பின்புறம் அமைந் துள்ளது. இத்திட்டம் சுமார் 9 மனைகள் கொண்ட நிலப்பரப் பில் 80 குடியிருப்புகள் கொண்ட அடுக்கு மாடி கட்டடங்கள் ரூ. 6.12 இலட்சம் மதிப்பில் கட்டு வதற்கு வாரியம் 1.8.78 அன்று ஒப்புதல் அளித்தது. இதற்கு ஹட்கோவிலிருந்து நிதி உதவி பெறப்பட்டது. தற்போது இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு திறப்புவிழாவும் நடைபெற்றது.

இதிலுள்ள ஒவ்வொரு குடியி ருப்பிலும் பூட்டுவதற்கு வசதி யுடைய பல்நோக்கு அறை ஒன் றும், போதுமான அடுக்குத் தட்டுகளுடன் (அலமாரி) அமைக் கப்பட்டுள்ளது. இதைத் தவிர ஒரு சமையல் அறை, குளியல் அறை, கழிவிடம், தண்ணீர் வசதி, கழிவுநீர் போக்கு வசதி, சாலை வசதி ஆகியவையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடியிருப்புக்கும் 1.9.80 முதல் ரூ. 20 வாடகை யாக வசூலிக்கப்படும்.

### காமராஜ் காலனி — லலிதாபுரம் திட்டப்பகுதி:

சென்னை தியாகராய நகர் பேருந்து நிலையம் அருகாமை யிலுள்ள காமராஜ் காலனியில் முதற்கட்டமாக 328 குடியிருப் புகள் ரூ. 41.38 இலட்சம் செல வில் 77ஆம் ஆண்டு கட்டி முடிக் கப்பட்டன. இரண்டாவது கட்ட மாக 160 குடியிருப்புகள் ரூ. 12.67 இலட்சம் செலவில் வீடமைப்பு மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக (ஹட்கோ) கடன் உதவியுடன் கட்ட தீர்மானிக்கப்பட்டு, 112 குடி யிருப்புகள் மட்டும் ரூ. 8.58 இலட்சம் செலவில் கட்டப்பட் டுள்ளன. அறுவை செங்கற்கள், அச்சமயம் கிடைக்காததினால் மீதமுள்ள குடியிருப்புகள் கட்ட இயலவில்லை.

ஒவ்வொரு குடியிருப்பும் பூட் டுவதற்கு வசதியுடைய பல நோக்கு அறை ஒன்று, சமையல் அறை, குளியல் அறை, மற்றும் கழிவிடம் கொண்டு உள்ளது. தண்ணீர் வசதி கழிவு நீர் வசதி ஆகியவையும் கொண்டு கொடுக் கப்பட்டுள்ளது. சாலை வசதி மற்றும் மின் விளக்கு வசதியும் அமைத்துக் தரப்பட்டுள்ளது.

### கீரைத் தோட்டம்

சென்னைத் துறைமுகத்தின் வடபகுதியில் மீன் பிடிக்கும் துறைமுகம் கட்டும் வேலை நடப் பதால் ஏற்பட்ட கடல் அரிப்பி னால் சுமார் 285 மீனவர் குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களை வேறிடத்தில் குடி யமர்த்த அரசு விரும்பியது. அதற்காக கீழ்க்கண்ட 4 திட்டங் கள் வகுக்கப்பட்டுள்ளன.

| | | ரூ. |
|---|---|---|
| மீனவர் நகர் | 673 | 82.54 |
| கடற்கரை நகர் | 756 | 57.49 |
| நாகூரான் தோட்டம் | 648 | 49.66 |
| கீரைத் தோட்டம் | 324 | 21.85 |
| | 2400 | 214.54 |

அவ்வாறு ஆர்ஜிதம் நில செய் யப்பட்ட பகுதிகளில் ஒன்று கீரைத் தோட்டம் என்ற திட்டப் பகுதியாகும். இது தண்டையார் பேட்டையில் மாநகராட்சி எண். 3ல் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் அமைந்துள் ளது.

இத்திட்டம் ஹட்கோ நிதி உதவியுடன் 324 குடியிருப்புகள் 44 மனைகள் கொண்ட பரப்பள வில் ரூ. 21.85 இலட்சம் செல வில் கட்ட வாரியம் 21.4.79ல் ஒப்புதல் அளித்தது. அதில் 200 குடியிருப்புகள் ரூ. 15.34 இலட் சம் செலவில் கட்டி முடிக்கப்பட் டுள்ளன. மீதமுள்ள 124 குடி யிருப்புகள் தொடங்கும் தறுவா யில் உள்ளன.



# பாரதியின் தமிழ்மொழிப் பற்று

## சீனி விசுவநாதன்

''இயன்றவரை தமிழே பேசுவேன்; தமிழே எழுதுவேன்; சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்''
—மகாகவி பாரதியின் சங்கற்பம்.

விடுதலைப் போர்க்களத்தில் தமிழையே வலிமைமிக்க போர்க் கருவியாகப் பயன்படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய அதே நேரத்தில் தமிழ்மீது பற்றுக் கொள்ளவும், சாமான்ய மக்களும் அதிலே பயிற்சி பெறவும் வழிகாட்டியவர் மகாகவி பாரதியார் என்பது வரலாறு.

'தமிழ் இயக்கம்' தோன்றாத காலத்தில் - 'எங்கும் தமிழ்-எதிலும் தமிழ்' என்ற கோஷம் எழுப்பப்படாத நேரத்தில் பாரதியார் தம் நெஞ்சிலே தமிழ்ச் சக்தியை நிறுத்தி, தமிழிலே சிந்தனை செய்யுமாறும், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனவும், தமிழ் மக்களைத் தூண்டினார். மகாகவி பாரதியாரே யாவார்.

எல்லா மட்டங்களிலும், எல்லாக் கட்டங்களிலும் ஆங்கில மொழியே அரியாசனமும், சரியாசனமும் பெற்றிருந்த நிலையில் பாரதி ''இயன்றவரை தமிழிலே பேசுவேன்; தமிழிலே எழுதுவேன்; சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்'' என்று சங்கற்பம் செய்து கொண்டார். இங்கே 'இயன்றவரை' என்று கையாண்டிருக்கும் சொல்லாட்சி சிந்தனைக்குரியது. இச்சொல்லாட்சி அவர்காலத்தின் சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாகவே கொள்ளலாம்.

தமது இளமைப் பருவத்திலேயே பாரதியார் 'தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும்' என்ற கொள்கையில் உறுதி உடையவராகவே இருந்தார். இதையே வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ் வளர்ப்பதையே தம் வாழ்வின் தர்மமாகக் கொண்டார் எனலாம்.

தமது தந்தை காலமானபின் பாரதி காசிமாநகரம் சென்றார் அல்லவா? காசிவாசம் பாரதிக்கு அரசியல் உத்வேகத்தையும் உணர்ச்சிகளையும் ஊட்டியது. தேச சேவைக்கனல் அவர் உள்ளத்தில் மூண்டது. தேச சிந்தனையே அவர் சிந்தனையாயிற்று. இந்தச் செய்தியை, அப்போது கடயத்தில் வசித்துக் கொண்டிருந்த செல்லம்மாவிடம், அவருடைய உறவினரான விசுவநாதன் என்பவர் சொன்னார். செல்லம்மா பதறிப்போய் பாரதிக்குக் கடிதம் எழுதினார்.

''நீ எனது காரியங்களில் இத்தனைப் பயம் படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. விசுவநாதன் அனாவசியமாக உனக்குப் பயத்தை விளைவித்திருக்கிறான். நீ இந்தமாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்'', என்று எழுதினார். ஆம்; தன்னைப் பற்றிச் சிந்திப்பதைவிடத் தமிழைப் படித்து இன்புறுவதைப் பெரிதும் விரும்பினார் பாரதி. தமிழ் துன்பத்தை நீக்கும்மருந்து என்பதை இதன் மூலம் தம் மனைவிக்குப் புலப்படுத்தினார்.

பாண்டிச்சேரியில் வாசம் புரிந்து கொண்டிருந்த சமயத்தில் பாரதியின் இளைய சகோதரர் திரு விசுவநாதன் என்பார் ஆங்கிலத்தில் பாரதிக்கு ஒரு கடிதம் எழுதினார். தமது சகோதரரின் கடிதத்திற்குப் பதில் எழுதுகையில் பாரதி,

''எனக்கு இனிமேல் இங்கிலீஷில் காகிதம் எழுதாதே. நீ எழுதும் தமிழ் எத்தனைக் கொச்சையாக இருந்தபோதிலும், அதைப் படிக்க நான் ஆவலுறுவேன்'' என்று குறிப்பிட்டார். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடிய தன் எதிரொலிகளையே இங்கு காண்கிறோம்.

பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் காணப்படும் வாய்மை மணக்கும் வாசகங்கள் இவை:

''தமிழ் - தமிழ் -தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால், புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை புதிய புதிய இன்பம்-தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்

டும். தம்பி-நான் ஏது செய்வேனடா! தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது.''

இப்படியெல்லாம் பாரதி எழுதி தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவையை நம்மவருக்கு உணர்த்தினார்.

பாரதியின் மாசற்ற தமிழ் பக்தியை விளக்க மேலும் சில சான்றுகள் காண்போம்:

''பாஞ்சாலி சபதம்'' என்றொரு காவியத்தை எழுதி, 1912 இல் வெளியிட்டவர் பாரதி. அதன் முகவுரையில்,

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு -இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான்''— என்று குறித்துள்ள குறிப்பு நம் சிந்தனைக்கும் கவனத்துக்கும் உரியது.

'தமிழ் வாழ்க -தமிழ் வளர்க' என்று முழக்கம் செய்துவிட்டால் மட்டும் போதாது. தாய்மொழி வாழ வளரச் செய்வதற்கான ஆக்கப் பூர்வமான முயற்சிகளிலும் நம்மவர்கள் ஈடுபட வேண்டும் என்பதுதான் பாரதியின் விருப்பமாக இருந்திருக்கிறது.

''இங்கிலீஷ் படித்த வக்கீல்களும், இங்கிலிஷ் பள்ளிக்கூட வாத்தியார்களும், தமது நீதி ஸ்தலங்களையும், பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறியவுடனே இங்கிலீஷ் பேச்சை விட்டுத்தாம் தமிழரென்பதை அறிந்து நடக்க வேண்டும்... எங்கும்,எப்போதும் இந்தப் 'பண்டிதர்கள் இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினால், உடனே தேசம் மாறுதலடையும். கூடியவரை இவர்கள் தமிழிலெழுதக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று ''தமிழின் நிலை'' என்ற கட்டுரையில் எழுதி, நமது ஜனத் தலைவர்கள் இங்கிலீஷில் யோசிப்பதையும், பேசுவதையும் நிறுத்தினாலொழிய தமிழ்மொழிமேன்மைப்பட வழியில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார்.

இன்னும் சற்று அழுத்தமாக ''இங்கிலீஷ் படித்த தமிழ் மக்கள் முக்கியமாக, வக்கீல்களும் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனத்திலும் தமிழரசியைக் கொலுவிருக்கும்படி செய்து வணங்கவேண்டுமென்றும், அதுவே இப்போதுள்ள ஸ்திதியில் தமிழ் வளர்ப்புக்கு மூலசாதனமாகுமென்றும் அறிக்கையிட்டுக் கொள்கிறேன்'' என்று 'நூலாசிரியர் பாடு' என்ற கட்டுரையில் புலப்படுத்தியுள்ளார்.

ஆக, பாரதியார், தமிழ், என்றுமே புவிமிசை புகழில் ஓங்கி இருக்கும் படியான செயல்களில் ஆங்கில மொழியில் வல்ல தமிழ்ச் சான்றோர்களை உளமார ஈடுபடுமாறு வேண்டுகிறார் எனத் தேர்கிறோம்.

தமிழரசியைக் கொலுவிருக்கும்படி செய்து வணங்கவேண்டும் என்று பாரதியார் அறைகூவியழைத்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? அவர் காலத்தில் - தமிழ்ப்பத்திரிகைகள் தமிழ் நடையை விட்டுவிட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கத்தையும், போக்கையும். கையாண்டாமைதான். அதாவது, பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு தலைப்பும் ஆங்கிலமும்,தமிழும் கலந்தே எழுதப்பட்டது. ''தமிழ்நாட்டின் விழிப்பு'' என்ற கட்டுரையிலே 'பத்திரிகைகளின் நிலைமை'யைக் குறித்து அவர் எழுதுகிறார்—

''எனக்கு நாலைந்து முக்கியமான தமிழ்ப் பத்திரிகைகள் வருகின்றன. அவற்றுள் ஒன்று வாரப் பத்திரிகை. அது பழுத்த சுதேசீயக் கட்சியைச் சேர்ந்தது. ஆனால், தக்க பயிற்சியில்லாதவர்களால் நடத்தப்படுவது. பத்திரிகையில் ஒவ்வொரு வியாசத்துக்கும் தமிழ் மகுடத்துக்கு மேலே இங்கிலீஷ் மகுடமொன்றும் சூட்டியிருக்கிறது. ''ருஷ்யாவின் நிலைமை - 'Situation in Russia'', 'தாய்ப்பாஷையின் மூலமாகக் கல்வி பயிற்றல்'' The Vernaculars as media of instruction' ஆகா! நான் மாற்றி எழுதுகிறேன். தமிழை முதலாவது போட்டு, இங்கிலீஷை பின்னே போட்டேன். இந்தப் பத்திரிகைகளில் அப்படியில்லை. இங்கிலீஷை முன்னேபோட்டு, தமிழைக் கீழே போட்டிருக்கிறது. 'அமெரிக்க ஸ்திரி' பார்த்தாயா? என்னைத் தெரியாமலே என்கை முதலாவது தமிழ் வார்த்தை எழுதுகிறது. 'American women - அமெரிக்க ஸ்திரி', 'Our Matadhipati s -நமது மடாதிபதிகள்' என்று எழுதியிருக்கிறது''.

தமக்கு வந்த பத்திரிகைகளில் காணப்படும் அலங்கோலங்களைச் சுட்டிக்காட்டுவதோடு, நமது மொழியின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு, அன்னியமொழியின் வசனநடையைப் பின்பற்றும் வழங்கத்தைக் கண்டிக்கவும் செய்தார் ,பாரதி.



பாரதியார் தம் கைப்பட எழுதிய சில சங்கற்பங்கள்

## தமிழ்நாடு அரசின் சிறுசேமிப்புத் துறையும் 'அமுதசுரபி' இதழும் இணைந்து நடத்திய

### சிறு சேமிப்பு சிறப்பு வாக்கியப் போட்டியில் பரிசு பெற்றவை.

சிறிதளவும் தொல்லை
சேமிப்போர்க்கு இல்லை.
—எல். ஏ. பெர்னாண்டோ.

குருவிபோலச் சேமித்தால்
குபேரன்போல வாழலாம்.
—என். ராகவன்.

ஆயிரம் செலவுகள் இருக்கட்டும்
ஆயினும் சேமிப்பு பெருகட்டும்.
எஸ். என். ராஜாராம்.

சிறுசேமிப்பை நாடுங்கள்
சிறந்த வாழ்வைத் தேடுங்கள்.
குமாரி டி. ஜெயந்தி.

சேமிக்கும் பெண்மணி
தேசத்தின் கண்மணி.
குமாரி ஜி. அமுதா.

சிக்கனம் வீட்டைக் காக்கும்
சேமிப்பு நாட்டைக் காக்கும்.
—ம. மணி.

கட்டுரைத் தலைப்புகளை மட்டுமே வெளியிட்டபோது, தமது ஆற்றாமையையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்திய பாரதி, பின்னொரு சமயத்தில்- விஞ்ஞான கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் யோசனை கூற சேலத்தில் ராஜாஜி அவர்கள் தமது நண்பர்களின் உதவியோடு 1916-ல் 'தமிழ் சாஸ்த்திர - பரிபாஷை சங்கத்தாரின் பத்திரிகை' என்பதாக ஒரு பத்திரிகையைத் துவக்கி, முதல் மாதப் பத்திரிகை இங்கிலீஷில் வெளியிட்டபோது,

''ஆரம்பத்தில் தமிழில் எழுதாமல் தமிழருக்கு வேண்டிய இக்காரியத்தை இங்கிலீஷ் பாஷையிலே தொடங்கும்படி நேரிட்டதற்கு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சொல்லும் முகாந்திரங்கள் எனக்கு முழுநியாயமாகத் தோன்றவில்லை'' என்று தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார்.

''அநேகமாக, இரண்டாம் சஞ்சிகையிலேயே தமிழ்ப்பகுதி சேருமென்று கேள்விப்படுகிறேன். அங்ஙனம், தமிழர்சேர்ந்து நடக்கும் சாஸ்த்ரப் பத்திரிகையினால் தமிழ்நாட்டாருக்கு மிகப்பெரிய பயன் விளையுமென்பதில் சந்தேகமில்லை'' என்றும் எழுதி, தமது ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார்.

பத்திரிகாசிரியர்களும், தனிப்பட்ட நபர்களும் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி, தமிழ்ப்பணி மேற்கொள்ள வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்திய பாரதி, அரசினரே தமிழ் வளர்ப்புப் பெயரால் தவறு செய்தால் கண்டிக்காமல் இருப்பாரா! வேண்டியவர் - வேண்டாதவர் என்றில்லாமல் தமிழின் பெயரால் செய்யப்படுகின்ற விரும்பத்தகாத போக்குகளை வன்மையாகக் கண்டித்த பெருமை பாரதிக்கே உரிமை! பாரதியாரின் அளவுகடந்த தமிழ்மொழிப் பற்று நண்பர்களை மட்டுமல்ல -பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் சாடியது!

அன்றைய பிரிட்டிஷ் அரசு, பத்திரிகை படிப்போருக்காகவும் பொது மக்களுக்காகவும் சில சமயங்களில் துண்டுப்பிரசுரங்களைத் தமிழில் வெளியிட்டு வந்தது. அந்தத் தமிழ்த் துண்டுப் பிரசுரங்களில் இடம் பெற்றிருந்த இலக்கணத் தவறுகளையும் பிரயோகத் தவறுகளையும் கண்டு பாரதியின் தமிழ் நெஞ்சம் பதறியது; வருந்தியது.

குடிமகன் என்ற வகையில் மட்டுமல்லாது, தமிழ் வளர்ப்பில் நேரும் குற்றங் குறைகளை நேர் செய்ய வேண்டும் என்ற ஆர்வலன் என்ற முறையிலும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்.

''பொதுவாக, ராஜாங்கத்தாரின் கெஜட்டுகள், நியாய ஸ்தல மொழி பெயர்ப்புகள் முதலிய முக்கியமான தமிழ்ப் பிரசுரங்களில் வழுக்கள் நிறைந்ததாய், சாதாரணத் தமிழருக்கு அர்த்தமாக வழியில்லாத தமிழ் மொழியையே வழங்கி வருதல் பிரசித்தம். எனினும், மக்களுக்கு அர்த்தம் தெரியாமல் 'கெஜட்' வர்த்தமானங்கள் பிரசுரிப்பதைக் காட்டிலும், கட்சிப் பிரதிநிதிகளும், தர்க்கங்களும் நடத்தி மக்களுக்கு அபிப்பிராய மாறுதலுண்டாகும்படி சர்க்கார் வக்கீல் வேலை செய்ய வந்த இடத்தில் மக்களுக்கு விளங்காத, இலக்கணத் தவறுகள் நிறைந்த பாஷையை வழங்குதல், நூறு மடங்கு அதிக பரிகாசத்துக்கு இடமாகுமென்பதை ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்''.

எதையும் பட்டவர்த்தனமாக எடுத்துச் சொல்லும் பாங்கே இங்கும் காணப்படுகின்றது.

இங்ஙனம், பல்வேறு சந்தர்ப்பங்களில் தமக்குள்ள ஆழ்ந்த தெளிந்த மொழிப்பற்றை வெளிப்படுத்திய பாரதி, தாம் காணும் 'தமிழபிமானி' யார் என்பதையும் அறிமுகப்படுத்தியும் உள்ளார்.

''தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலேயே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ்பாஷையில் கற்றுக் கொடுக்கும் படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும்போதும் இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழ் அபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழபிமாமானி.''

பிறமொழிப் பகையின்றி, மொழி வளர்ச்சிக்கு வழிகாட்டிய பாரதிப் பாவலரின் வழிநின்று தமிழபிமானியாக நாம் பணிபுரிவோமாக! வாழிய செந்தமிழ்.!

# வில்லிவாக்கம் தொழிற்பேட்டை



சிறுதொழில்களையும் கிராமத் தொழில்களையும் உருவாக்கி ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசின் மையக் கொள்கையாக இருந்து வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சிறு தொழில்கள் - கிராமத் தொழில்கள் மூலம் அதிகமான பேருக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது. ஏராளமான பேர் வேலையற்று இருப்பதையும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் வேலையின்றி வாழ வழியின்றி வருந்துவதையும் கண்டுள்ள இந்த அரசு குறுகிய காலத்திற்குள் அவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கின்ற வகையிலே அரசின் அனைத்துத் தொழில் திட்டங்களும் அவற்றில் செய்யப்படுகின்ற முதலீடுகளும் அமையவேண்டும் என்ற தெளிவான முடிவை எடுத்துள்ளது.

சிறுதொழில்கள் வளர்ச்சிக்கும் கிராமத் தொழில்கள் வளர்ச்சிக்கும் முதலிடம் அளிக்கும் போது அதே சமயத்தில் பெரிய-நடுத்தரத் தொழில்களும் வளர்ச்சிபெற அரசு உரியமுயற்சிகளை எடுத்து வருவதை நாம் கண்கூடாகக் காணுகிறோம்.

பொட்டல் காடு பொன்விளையும் பூமியாக....

சென்னை அருகேயுள்ள வில்லிவாக்கத்தில் புதிதாக அமைக்கப்படும் தொழிற்பேட்டையின் துவக்கவிழா 2.10.80 அன்று சிறப்பாக நடைபெற்றது.

10 ஆண்டுகளுக்கு முன்பு நரி ஊளையிட்டுத் திரிந்த இந்தப் பொட்டல் காட்டில் புதிதாக 'சிட்கோ' நிறுவனம் தொழிற்பேட்டையைத் துவக்கி பாலைவனப் பகுதியை சோலைவனப் பகுதியாக்கி பொன்விளையும் பூமியாக மாற்றிக் காட்ட உள்ளது. இப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட இடங்களில் தொடர்ந்து சிறுதொழில்களை நிறுவி வேலை வாய்ப்பின்றி அவதிப்படுகிறவர்களுக்கு உதவி செய்யவே இந்தத் தொழிற்சாலைகளை 'சிட்கோ' நிறுவியுள்ளது.

வில்லிவாக்கம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையின் திறப்புவிழா நிகழ்ச்சிக்கு மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் வீட்டுவசதி வாரியத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த அமைச்சர் அவர்கள் தமது உரையில் ''குடிசையில் வாழ்பவர்கள், இங்கே கட்டிக் கொடுக்கப்படும் புதிய வீடுகளுக்கு வர விருப்பம் தெரிவித்தால் இங்கே அமைந்துள்ள தொழிற்பேட்டைப் பகுதியில் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும். இந்தப் பகுதியில் குடிசை போட்டிருக்கும் இடத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்திடம் (எம்.எம்.டி.ஏ'') ஒப்படைத்துவிட்டு வந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். இங்கேயும் வீட்டை, வாங்கிவிட்டு, அங்கேயும் குடிசையைப் போடுகின்ற நிலைமை இருக்கக் கூடாது. குடிசையே இருக்கக் கூடாது என்ற நோக்கத்தில்தான் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன'' என்று குறிப்பிட்டார்.

சென்னை நகர மேம்பாட்டுத் திட்டம் முதல் பகுதியின் கீழ் உருவாகியுள்ள வில்லிவாக்கம் தொழில்பேட்டையைத் துவக்கி வைத்த மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில்,' 10 ஆண்டுக்காலமாக இயங்கிவரும் சிறுதொழில் நிறுவனம் (சிட்கோ) மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 3 ஆண்டுகளில் மகத்தான திருப்பத்தை உருவாக்கி இருக்கிறது. கிராமப்புறத்திலும் பின்தங்கிய இடங்களிலும் சிறுதொழில்கூடங்களை நிறுவி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அரும்பாக்கத்தில் 42 தொழிற்கூடங்களும் வில்லிவாக்கத்தில் 48 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டுள்ளன மேலும் கொடுங்கையூரில் 30 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தொழிற்கூடங்கள் அமைய 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மூன்று இடங்களிலும் தொழிற்கூடங்கள் அமைப்பதின் மூலம் 3,000 பேருக்கு நடப்பு ஆண்டில் வேலைவாய்ப்பு கிடைக்கும். சிறுதொழில்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், மூலப் பொருட்கள் கிடைக்காததால் உள்ள சிரமம் ஆகியவைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். கடிதமும் எழுதி வருகிறார். இதனால் இப்போது தமிழ்நாட்டில் சிறுதொழிலின் வளர்ச்சி பிரகாசமாக உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

—ஜி. ஆனந்தன்.

# புரட்சிக் காவியத்தின் புதிய அத்தியாயம்

**ப. சுவாமிநாதன்**
**மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்**
**செய்தி–மக்கள் தொடர்பு) திருச்சிராப்பள்ளி.**

நாட்கள்.....மாதங்கள்....... ஆண்டுகள் ஓடுகின்றன. நினைவுகள் வேகமாகப் பின்னோக்கிச் சுழல்கின்றன. நக்சல்பாரி இயக்கம் பற்றி நாடெங்கும் பரவலாகப் பேசப்பட்ட சமயம். இந்திய நாட்டின் சமூக அமைப்பு பொருளாதார உறவு முறை,புரட்சி பற்றிய மக்களின் மனப்பாங்கு ஆகியவற்றை விவரித்த கட்டுரையாளர் ஒருவர் கட்டுரையை முடிக்கும்முன் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். ''The Revolutionary Force here lies not in the Proleteriat's but in the Secretariat.''

''இங்கு 'இந்தியாவில்' புரட்சிக்கான சக்தி பாட்டாளி வர்க்கத்திடம் இல்லை. அது அரசு தலைமைச் செயலகத்தில்தான் அடைபட்டுக் கிடக்கின்றது'' என்பதுதான் அவர் குறிப்பிட்டிருந்த கருத்தாகும்.

அரசின் முற்போக்குச் சிந்தனையின் வேகம் உணர்ந்து அந்த வேகத்திற்கேற்ப நிர்வாக இயந்திரம் செம்மையாகச் சுழன்றாலே அமைதி வழியில் மாபெரும் மாற்றங்களை நாட்டில் கொண்டு வர முடியும் என்பது அந்த எழுத்தாளரின் நம்பிக்கையாகும்.

தமிழக அரசின் திட்டங்களையும் செயல் முறைகளையும் எண்ணிடும்போது ஏட்டாளரின் கருத்து இந்திய நாட்டிற்கு ஏற்புடையதென்றே கருதத் தோன்றுகிறது. தலைமைச் செயலகத்தை புரட்சியின் கேந்திரமாக மாற்றி அரசு இயந்திரத்தைப் போர்க்காலப் பாணியில் இயங்கச் செய்து மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சித் தோன்றிட உழைத்து வருகிறது, தமிழக அரசு.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருச்சி மாவட்டத்து நிகழ்ச்சி தமிழகத்தில் சமத்துவ சமுதாயம் விரைவில் உருவாகிட பாடுபடும் நமது அரசின் பெரும் பணிக்கும், முற்போக்குச் சிந்தனையின் வேகத்திற்கும் சான்று பகருவதாக இருக்கின்றன.



# திருச்சி மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலந்து கொண்ட விழா நிகழ்ச்சிகள்







1 ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் வெற்றிபெற்ற இந்தியக் குழுவின் தலைவர் திரு பாஸ்கரன் அவர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்தல் (2.10.80)

2 திருச்சியில் காவலர்களுக்கு மலிவு விலை உணவுப் பொருட் களை வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தல் (2.10.80)

3 துறையூரில் வளர்ச்சித் திட்டத்தைத் துவக்கி வைத்து, ஆதரவற்ற மகளிருக்கு தையல் இயந்திரம் வழங்குதல் (2.10.80)

4 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் திருச்சி மண்டல தொழிற்பட்டறையில் கூடுதல் கூண்டு கட்டும் பணிமனை யினைத் துவக்கி வைத்தல் (2.10.80)

5 துறையூரில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டடம், பள்ளிக் கட்டடங்கள், தாய்-சேய்-நல விடுதி ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டுதல் (3.10.80)






மாண்புமிகு முதல்வர் அக்டோபர் இரண்டு, மூன்று ஆகிய இரண்டு நாட்கள் திருச்சி மாவட்டத்தில் இடையறாத பயணம் மேற்கொண்டார். இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைத் தழுவுகின்ற வளர்ச்சித் திட்டங்களைத் துவக்கி வைத்தார்.

ஏன்—பொன்னி நதி தீரத்தில் புரட்சிக் காவியத்தின் புதிய அத்தியாயங்களை எழுதினார் என்று குறிப்பிட்டால்கூட மிகையாகாது.

முதல்வர் அவர்களின் பயணத்தின் முதல் நாள் நிகழ்ச்சி அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள். அன்பு நெறியைப் போதித்து, அமைதி வழியில் போரிட்டு, நாட்டுக்கு விடுதலைப் பெற்றுத்தந்த அண்ணல் காந்தியின் பிறந்த நாள்.

''வறுமையில் வாடுகின்ற ஏழைகளின் முகங்களை நினைவுகூர்ந்து பாருங்கள்! நீங்கள் தீட்டுகின்ற திட்டங்கள் அவர்களை உயர்த்த எந்த வகையில் பயன்படப் போகின்றன என்று உங்கள் நெஞ்சுக்குள் நீங்களே வினா எழுப்பிக் கொள்ளுங்கள்'' என்ற அண்ணலின் கருத்தை நெஞ்சினில் நிறுத்தி, அண்ணலின் வழியில் அரும்பணிகள் ஆற்றிவரும் தமிழக முதல்வர் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து விட்டு தனது நிகழ்ச்சியைத் தொடர்ந்தார்கள்.

திருச்சி காதி கிராப்ட் அலுவலகத்தில் காந்தி ஜெயந்தியை ஒட்டி கதர் விற்பனையைத் துவக்கி வைத்தல் - மாண்புமிகு முதல்வரின் முதல் நிகழ்ச்சி. மாண்புமிகு கல்வி அமைச்சர் விழாவிற்குத் தலைமை ஏற்றார். மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் பேசியதற்குப் பின்னர் கதர் விற்பனையைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதல்வர், கதர் தோன்றியதற்கான காரணத்தை எடுத்துரைத்தார். கதர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற கிராம மக்களின் நலம் பேணிட இத்தொழிலை நசிந்து போகாமல் காப்பது அவசியம் என்று தெரிவித்தார்கள்.

''1967ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது, கதர் உற்பத்திக்கு ஊக்கம் தராமல் அழித்துவிடுவார் என்று சிலர் கருதினார்கள். ஆனால், எதையும் அழிக்க எண்ணாத எதிரிகளையும் அணைத்துச் செல்லும் மனம் படைத்த அண்ணா அவர்கள் கதர்த் தொழிலையும் காப்பாற்றுவோம், கைத்தறியையும் வளர்ச்சியடையச் செய்வோம் என்று சொல்லி அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டார். இந்த அரசைப் பொறுத்தவரை அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த அதே அணுகுமுறையைத்தான் கொண்டுள்ளது'' என்று திட்டவட்டமாக அறிவித்தார். ''வாழ்க'' என்று வாழ்த்தொலிஎழுப்பி முதல்வரின் அறிவிப்பை வரவேற்றது, கூடியிருந்த மக்கள் கூட்டம்.

அடுத்த இதழில்...
'கூட்டுறவு வாரவிழா'
சிறப்புக் கட்டுரைகள்
இடம் பெறும்

இரண்டாவது நிகழ்ச்சி, பிரதேச இராணுவப் படை மைதானத்தில் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய ஆக்கிக் குழுவினரையும், குழுவின் தலைவர் திரு. பாஸ்கரனையும் பாராட்டுவதற்காக நடத்தப்பட்ட விழா. ''வாட்டர்லூ (Walerloo) போரின்வெற்றி ஈட்டன் (Eton) மைதானத்தில் பெறப்பட்டது'' என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவதுண்டு. ஒரு நாட்டின் வீரத்திற்கும் வெற்றிக்கும் விளையாட்டுத்துறை எப்படி அடிப்படையாக இருக்கின்றது என்பதற்கு அந்தக் கூற்று ஓர் எடுத்துக்காட்டு.

தமிழகம் விளையாட்டுத் துறையில் சிறக்க வேண்டுமென்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட நமது முதல்வர் அவர்கள் பங்கேற்ற அந்த விழா வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பாராட்டு விழாவாக மட்டுமல்ல; எதிர் காலத்தில் வெற்றிகள் பல ஈட்டுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்றவிழாவாகவும் அமைந்தது.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் விளையாட்டுத்துறைக்கு அரசு ஒதுக்கியுள்ள நிதி விவரத்தினையும், அதன் வளர்ச்சிக்காக வகுத்துள்ள திட்டங்களையும் விளக்கிப் பேசினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியதற்குப் பின் மாண்புமிகு முதல்வர் ஆக்கிக் குழுவினரையும், விருது பெற்ற விளையாட்டு வீரர்களையும் பாராட்டிப் பேசினார். அவர் பேசும்போது, ''உடல் வலிமையில்லாமல் கொண்ட கொள்கையில் உறுதி இல்லாமல், வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாமல், வாழ்ந்தால் அவர்கள் நாட்டுக்குப் பயன் உள்ளவர்களாக இருக்க முடியாது. உடற்பயிற்சியும் விளையாட்டுத் திறமையும் நன்கு வளர வேண்டும், அதனால் தான் விரைவில் விளையாட்டுத் துறைக்கென்று தனி இலாகா அமைக்கவும் —தனி அமைச்சர் நியமிக்கவும் உத்தேசித்துள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

''இந்தியா இழந்த புகழை தனது உழைப்பின் மூலம் உயர்த்தியவர்'' என்று ஆக்கிக் குழுவின் தலைவர் பாஸ்கரனைப் பாராட்டிய முதல்வர், தமிழக அரசின் சார்பில் தங்கப் பதக்கமும், ரூபாய் 15,000 ரொக்கப் பரிசும் வழங்கினார். மேலும், தமிழக அரசின் சார்பில் ரூ. 1 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்புள்ள வீடு திரு. பாஸ்கரனுக்கு வழங்கப்படும் என்றும், இதுபோன்று உலக விளையாட்டுகளில் கலந்து கொண்டு வெற்றியோடு திரும்பும் வீரர்களுக்கும் அரசின் சார்பில் வீடுகள் வழங்கப்படும்'' என்று மாண்புமிகு முதல்வர் உறுதி தந்தார்.

விளையாட்டுப் பயிற்சி, குழந்தைப் பருவத்திலேயே துவங்க வேண்டும் என்ற முதல்வரின் கருத்திற்கேற்ப பள்ளி மாணவ மாணவிகளின் உடற் பயிற்சி நிகழ்ச்சிகள் விழாவின் துவக்கத்தில் நடைபெற்றன. ''இன்றைய இளம் தளிர்கள் நாளைய நாட்டின் நாயகர்கள்'' மாணவர்கள் நடத்திக் காட்டிய விளையாட்டு நிகழ்ச்சிகளை மகிழ்ந்து பாராட்டினார் மாண்புமிகு முதல்வர். விழா முடிவில் விளையாட்டுத்துறை இயக்குநர் திரு யு. எஸ். நடராஜன் நன்றி கூறினார். பின்னர் பிரதேசப் படையைச் சேர்ந்த ஜவான்களையும், அவர்களது குடும்பத்தினரையும் சந்தித்து



முதல்வர் உரையாடினார். முதலமைச்சரை லெப்டினென்ட் கர்னல் மேத்தா வரவேற்றார்.

மாலையில் திருச்சி கொட்டப்பட்டு மண்டலதொழிற் பட்டறையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் விழா-கூடுதல் கூண்டுகட்டும்பணிமனைதிறப்பு,50-வது புதிய பேருந்தின் வெள்ளோட்டம், 5 வருடங்கள் விபத்தில்லாமல்பணியாற்றிய ஓட்டுநர்களுக்குப் பதக்கம் வழங்குதல், திருச்சி-சென்னை கூடுதல் சொகுசுப் பேருந்துகள் துவக்கம்— நான்கு விழாக்களும் ஒரே மேடையில் விழாவிற்குத் தலைவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். போக்குவரத்துத் துறையில் அண்மைக் காலங்களில் தமிழகம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் விவரித்த அமைச்சர் ''தொழிலாளர்களுக்கு பண்டிகை முன்டணமாக வழங்கப்படும் தொகை ரூ. 200லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தப்படும். கைத்தறித் து'ணிகளை கடனாக- வாங்குகிறவர்களின் கடன்தொகை நான்கு தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று இப்பொழுது இருப்பதை மாற்றி இனி எட்டுத் தவணையில் திருப்பிச் செலுத்தலாம் என்ற அறிவித்துள்ளோம்'' என்று தெரிவித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உரையாற்றியதற்குப் பின் மாண்புமிகு முதல்வர் சிறப்புரை நிகழ்த்தினார்.

''அரசியல்வாதிகளுக்கு கோபம் வந்தாலும், மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினாலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டாலும் அவர்களின் தாக்குதலுக்குரிய இலக்காக இருக்கின்ற ஒரே பொருள் அரசுப் பேருந்துதான்'' என்று சுட்டிக் காட்டிய மாண்புமிகு முதல்வர்,''பஸ்களை தாக்கி சேதப்படுத்தினால் அதனால் ஏற்படும் நஷ்டத்தை அவர்களிடமிருந்தோ அவர்களது குடும்பத்தினரிடமிருந்தோ வசூலிப்பதற்கு ஏதுவாக ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்'' என்று தெரிவித்தார்கள். தனது வாழ்க்கையை உதாரணமாக எடுத்துக் காட்டி தொழிலாளச் சகோதரர்கள் வாழ்வில் சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

''நம்முன்னே அமர்ந்திருக்கின்ற இந்தச் சிறுவர்களுக்கு உங்கள் வீட்டு இளம் செல்வங்களுக்கு அவர்களின் எதிர்கால வாழ்விற்கு என்ன செய்யப் போகின்றீர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்'' என்று முதல்வர் சொன்ன சொற்கள் அனைவரின் நெஞ்சையும் நெகிழச் செய்தது. ''அவரது பேருள்ளத்தின் ஒருபாதி எதிர்காலத்தை எண்ணி வாழ்ந்து கொண்டிருந்தது'' ( One Half of his Great Soul Lives in the Fluture ) என்று மாவீரர் லெனினைப் பற்றி புரட்சி எழுத்தாளன் மாக்சிம் கார்க்கி குறிப்பிட்டது நமது முதல்வருக்கும் பொருத்தமுடையது என்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தன, அந்தச்சொற்கள். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பொது மேலாளர் நன்றி நவில விழா நிறைவு பெற்றது.

முதல்நாள் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல் அமைந்தது காவல் துறையினர் நடத்திய விழா. அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அந்த விழா 123 ஆண்டுக்காலக் காவல் துறையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கதொரு சம்பவமாகும். நாட்டின் அமைதி காக்க தங்களின் உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்ற காவலர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டியது ஒரு நல்ல அரசின் கடமை ஆகும் என்பதை உணர்ந்து அந்தச் செயலுக்குதான் ஒரு முன் உதாரணம் என்று உலகிற்குப் பறைசாற்றுவதைப் போல இரண்டு மாபெரும் திட்டங்களைத் துவக்கி வைத்தார் முதல்வர். காவலர்களுக்கு இதுவரை அரசு செய்துள்ள நன்மைகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் அமைந்திருக்கின்றன அந்த இரண்டு திட்டங்கள். ஒன்று ''காவலர்கள் வீட்டு வசதி வாரியம்'', மற்றொன்று ''காவலர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்''. இத்திட்டங்களின் துவக்க விழாவிற்குத் தமிழக அரசு உள்துறைச்செயலாளர் திரு. கே. சொக்கலிங்கம் தலைமை ஏற்றார். காவல்துறை தலைமை இயக்குநர் திரு. அப்துல்லா அனைவரையும் வரவேற்

றார். சென்னை குற்றம் மற்றும் சட்டம், ஒழுங்கு காவல்துறைத் தலைவர் திரு. பொன். பரமகுரு அறிமுக உரை என்ற பெயரால் அறியதொரு சொற்பொழிவாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவரும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களும் உரையாற்றியதற்குப் பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்கள்; இல்லை - உணர்ச்சிப் பேருரை நிகழ்த்தினார்கள்.

''இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சியாகும். எனது முதல் மனைவியின் தமையன் ஒரு காவலர்; தற்பொழுது ஒய்வு பெற்றிருக்கிறவர். அவருக்கு எத்தனைக் குழந்தைகள்-எத்தனைக் குழந்தை என்று சொல்லும்போது உங்களால் புரிந்து கொள்ள முடியும். அவர் பணியில் இருக்கும்போது எவ்வளவு கஷ்டப்பட்டு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருந்தது என்பதை நான் உடனிருந்து அனுபவித்து உணர்ந்தவன் என்ற வகையில் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது என்னைவிட மனநிறைவு கொள்கிறவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது என்று சொல்வதில் யார் என்னிடம் கோபித்துக் கொண்டாலும் அதனைச் சொல்லியே தீருவேன்.

''காவல்துறையைச் சேர்ந்தவர்கள்மீது பழி சுமத்தப்படுகின்றது; குற்றம் சொல்லப்படுகின்றது. சில நேரங்களில் சிலர் அந்தத் தவறுகளுக்கு ஆளாகின்றார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். லஞ்சம் வாங்குவது என்பது காவல்துறையில் ஒரு மாமூலாகிவிட்டது என்று எங்கு பார்த்தாலும் பேசுகின்ற அளவுக்குச் சிலர் செய்கின்ற குற்றங்கள் பலர் தலையில் விடிகின்ற வகையில் ஒரு பட்டப் பெயரைச் சுமந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனை மாற்றியமைப்பதற்கு - அந்த கேவலமான கெட்ட பெயரிலிருந்து விடுதலை கிடைக்கச் செய்வதற்கு எந்தெந்த வகையில் முயற்சி செய்ய முடியுமோ அனைத்தையும் செய்ய வேண்டியது முதல் அமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற எனக்கும், என்னோடு இருக்கின்ற அமைச்சர்களுக்கும், என்னோடு ஒத்துழைக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற மாபெரும் பொறுப்பாகும் என்பதை உணர்ந்து நாங்கள் செயல்படுகின்றோம்.

''எந்தக் காலத்திலும் குற்றம் சாட்டப்படக்கூடிய நிலையில் பழி சுமத்தப்படக்கூடிய நிலையில் காவல்துறை இருக்கக்கூடாது என்பது என்னுடைய நிச்சயமான-உறுதியான கொள்கையாகும்.

''என்னுடைய தாயை நான் சந்தேகிப்பது எவ்வளவு அவமானகரமானதாக இருக்குமோ அதுபோல காவல்துறையினரைச் சந்தேகிப்பது அவ்வளவு கேவலம் என்ற நினைவு நமக்கு ஏற்படுகின்ற வேளை தமிழகத்தில் உருவாக வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

''நான் எங்கே வைத்து காவல் துறையினரைப் பேசுகிறேன் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு தாய்த் தன்மைக்கு ஈடாக என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு ஈடாக வைத்து எண்ணு

> ''தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி,
> மனக் கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம்
> இருக்கிறது.''
>
> —அண்ணல் காந்தியடிகள்.

கிறேன். இந்த நாட்டைக் காக்கின்றவர்கள், நாட்டின் பண்பைக் காக்கின்றவர்கள், பெண்மையைக் காப்பாற்றுகிறவர்கள், தன் மானத்தைக் காப்பாற்றுகின்றவர்கள், பொருளைக் காப்பாற்றுகின்றவர்கள், ஒழுக்கத்தைக் காப்பாற்றுகின்றவர்கள், ஒழுங்கை நிலைநாட்டுகின்றவர்கள், இந்த நாட்டின் ஆண்மையைக் காப்பாற்றுகின்றவர்கள் காவல் துறையினர். ஒரு தாய்த் தன்மைக்கு இலக்கணம் வேறு என்ன வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

விழா மேடைக்கு வரும்முன் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட முதல்வர், விழா முடிந்ததும் எழிலோடு நகர்ந்து வந்த அலங்கார வண்டிகளின் அணிவகுப்பினையும் காவலர்கள் நிகழ்த்திய கலை நிகழ்ச்சியினையும், வீரச் செயல்களையும் கண்டு ரசித்தார். காவலர்களுக்காக அரசு உருவாக்கியிருக்கும் இந்த இரண்டு திட்டங்களின் மூலம் ஏறத்தாழ 46,000 காவலர்கள் பயன் பெறுவார்கள் என்ற பெருமித உணர்ச்சியோடு மக்கள் கூட்டம் கலைந்து சென்றது. முதல்வரின் முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிதே முடிவுற்றன.

இரண்டாவது நாள் சுற்றுப் பயணத்தை முதல்வர் காலை ஒன்பது மணிக்குத் துவங்கினார்கள். முதல் நிகழ்ச்சி சமயபுரம் கண்ணனூரில் சோழன் போக்குவரத்துக் கழகம் சார்பில் சுமார் 2 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையம் திறப்பு விழா—புதிய சாலையின் திறப்பு விழா—ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்—ஆசிரியை குடியிருப்பு இல்லம் திறப்புவிழா இப்படி 18 திட்டங்களின் துவக்க விழாக்கள். விழாவிற்குப் போக்குவரத்துத்துறை அமைச்சர் தலைமை ஏற்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார். சட்ட மன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும் சிறப்புரையாற்றியதற்குப் பின்னர் திட்டங்களைத் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார் மாண்புமிகு முதல்வர். ''நீண்ட தூரம் செல்கின்ற அரசாங்கப் பேருந்துகளில் 'வயர்லெஸ்' கருவிகளை அமைக்க வேண்டும் என்பது எனது ஆசை, திட்டமும் கூட. நடுக்காட்டில் பஸ் நின்றுவிட்டால் உடனடியாக அந்தக் கருவியைப் பயன்படுத்தி அடுத்த பஸ் நிலையத்திற்கு அதன் மூலம் தகவல் கொடுக்க முடியும்.

''பினாமி நிலங்களைக் கைப்பற்றி நிலமில்லாத ஏழை மக்களுக்குக் கொடுத்தே தீருவோம். அதைத் தடுத்தால் தடுப்பவர்களைச் சட்டம் கொண்டு தடுப்போம்.'' என்று தனது பேச்சின்போது குறிப்பிட்டார் முதல்வர்.

அடுத்த நிகழ்ச்சி, துறையூரில்-தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கட்டப்படவிருக்கும்

பள்ளிக்கட்டடங்கள், தாய்சேய் நல விடுதிகள், ஊரக மருத்துவமனைகள், ஆகியவற்றிற்கு 'அடிக்கல் நாட்டுதல், தக்காவிக் கடன் ரத்து ஆணைகள் வழங்குதல், உடல் ஊனமுற்றோர்க்குப் பெட்டிக் கடைகள் வழங்குதல், கிராமப் புற வீடுகட்டும் திட்டத்தில் கடன் வழங்குதல் உட்பட 16 திட்டங்களைத் துவக்கி வைத்துப் பேசும்போது, ''அரிசன மக்களுக்கு அரசு வழங்குகின்ற பட்டாக்களை விற்கவோ, அடகு வைக்கவோ கூடாது. சிலர் தங்களது ஏராளமான நிலங்களை தான் பிறந்த மண் என்று சொந்தம் கொண்டாடி அதனைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கும்போது நீங்கள் கிடைப்பதை விட்டுவிடக் கூடாது'' என்று அறிவுரை பகன்றார் முதல்வர். ''விவசாயத் தொழிலாளியாக உள்ள ஏழை மக்கள் யாருக்கும் அடிமைகள் அல்ல. என்ற உணர்வை பெற்றாக வேண்டும்'' என்று உரிமை முழக்கம் இட்டார். ''பதவிக்கு வந்த பிறகு குற்றச் சாட்டுக்கு ஆளானால் அது நாட்டுக்குஆபத்து. நல்ல கொள்கைகளுக்கு ஆபத்து. அதிகாரிகள் தவறு செய்தால் பதவியிலிருப்பவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் என்னிடம் சொல்லுங்கள்'' என்று கூறியிருந்த மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

போக்குவரத்துதுத்துறை அமைச்சர் விழாவிற்குத் தலைமை ஏற்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். முசிறி உதவி ஆட்சித் தலைவரும் சட்ட மன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினார்கள். மாலையில் திருச்சியில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து விட்டு மத்திய நூலக மைதானத்தில் அரசின் சார்பில் நடத்தப்பட்ட அண்ணா விழாவில் கலந்து கொண்டார் மாண்புமிகு முதல்வர். இரண்டு நாள் சுற்றுப் பயணத்தின் இறுதி நிகழ்ச்சி இது.

அறிவியல் கண்ணோட்டமும், விஞ்ஞான மனப்பான்மையும், நாட்டில் வளர்ந்திட பகுத்தறிவாயுதம் ஏந்திப் பாடுபட்டவர் பேரறிஞர் அண்ணா. நாட்டில் அறிவுத்தீ பரவிட வீட்டுக்கொரு நூல் நிலையம் வேண்டுமென விழைந்தவர். ஏழைகளின் வாழ்வை மையமாக வைத்து திட்டங்களை அரசு தீட்ட வேண்டுமென எண்ணியவர்; ஆட்சியின் முதல்வராக இருந்தபோது அந்த விதத்தில் திட்டங்களை இயற்றியவர்.

அதனால்தான் 'அறிவியல் மையம்' 'நூலகக் கட்டடம்' ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் துவக்க விழாவும், இணைந்து அண்ணா பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமை வகித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவில் கலந்து கொண்டு பேசிய முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற கொள்கையினைக் கொண்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அரசின் சார்பில் விழா எடுப்பதன் மூலம் அண்ணாவின் தத்துவத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றார் நமது முதல்வர்'' என்று குறிப்பிட்டார்.

''முதல்வரின் இதயத்தில் தனக்கு எப்போதும் ஓர் இடம் உண்டு'' என்று குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், திருச்சியில் கட்டப்படவிருக்கும் நூலகக் கட்டடத்திற்கு அண்ணாவின் பெயரைச் சூட்டுமாறு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அனைத்துக்கட்சித்தலைவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் உரையாற்றியதற்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் சிறப்புரையாற்றினார்கள். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''நாட்டை வளர்த்தவர்கள், நாட்டு மக்களுக்காக உழைத்தவர்கள், அந்தந்தக் காலத்து சூழ்நிலைக்கேற்ப அந்தந்தக் காலத்து மக்களுக்காக மட்டும் பாடுபட்டார்கள் என்று சொல்ல முடியாது. தான் வாழ்ந்த காலத்தில் இருந்த மக்களுக்காக மட்டுமின்றி வருங்காலத் தலைமுறையினரின் வளர்ச்சிக்கும் அஸ்திவாரமிட்டுக் கருத்துக்களை வழங்கிய தலைவர்கள்தான் பேரறிஞர் அண்ணா போன்றவர்கள்.

''யாரும் சாதிக்க முடியாதவற்றைக் குறைந்த காலத்தில் நிறைவேற்றிக் காட்டி வெற்றி கண்டவர்தான் பேரறிஞர் அண்ணா. இன்னும் சில காலம் அவர் நம்மிடம் வாழ்ந்திருப்பாரேயானால் அவர் உலகத் தலைவராக உருவாகியிருப்பார்கள்.

''இருக்கின்ற காலம் வரை - நாம் எவ்வளவு காலத்துக்கு இருக்கின்றோமோ அது வரை, பிறருக்கு நன்மை தரக்கூடிய காரியங்களைச் செய்தோம் என்ற நிம்மதியோடு நமது வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று யாருடைய விழாவை இங்குக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோமோ அவர்—பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லித் தந்திருக்கின்றார்கள். அந்த உணர்வோடு நாம் செயல்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறேன்.

''சிறு விவசாயிகள் தரவேண்டிய கடன் நிலுவையை ரத்து செய்யக்கூடாது, மாறாக அந்தத் தொகையை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது என்றாலும், மாநில அரசு ரூபாய் 62 கோடி கடனையும் ரத்துச் செய்ய தனது சொந்த நிதியிலிருந்து ஏற்பாடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமைக்கப்படவிருக்கும் நூலகக் கட்டடத்திற்கு அமரர் அண்ணாவின் பெயர் சூட்டப்படும்.''

தமிழ்நாடு பொது நூலகத்துறை இயக்குநர் திரு. தில்லைநாயகம் நன்றி கூற செய்தித் துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அண்ணாவின் விழா சிறப்பாக நிறைவெய்தியது.

இரண்டு நாட்கள்—ஒன்பது நிகழ்ச்சிகள்—அறுபதிற்கும் மேற்பட்ட திட்டங்களின் துவக்கம்—இலட்சக்கணக்கான மக்களுக்குப் பயன்தரக்கூடிய வளர்ச்சிப் பணிகள்-அமைதிப் புரட்சிப் பாதையில் தமிழகம் நடந்து வந்திருக்கின்ற தூரத்தின்அளவை எடுத்துக்காட்டுவதாக அவை அமைந்திருந்தன!

## மாணவர் பக்கம்



# ரூபாய் நோட்டு

— பி.வி.கிரி

அந்தக் காலனி புதிதாக ஏற்படுத்தப்பட்டது. அது, நகருக்கு ஒதுக்குப் புறமாக இருந்தது. 'அம்மன் காலனி' என்பது அதற் பெயர். அதற்கேற்றாற்போல அந்தக் காலனிக்கு மத்தியில் ஒரு மாரியம்மன் கோயிலும் இருந்தது.

மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்துத் தெருவிலிருந்தது கடைசி வீடு. நீல வர்ணம் பூசப்பட்டிருந்த அந்த மொட்டை மாடி வீட்டுக்கு முன்னே, செடியும், கொடியுமாக இருந்தது.

செம்மண் சாலையோ குண்டும் குழியுமாக இருந்தது. அதனால் அந்த நீலநிற வீட்டின்மீது செம்மண் எப்போதும் லேசாகப் படிந்திருக்கும்.

ஒரு நாள் இரவு!

காற்று சில்லென்று வீசியது. அதனால் ஜன்னல்கள் படபடத்தன.

''யாரோ என்னவோ' என்று அலறி அடித்துக் கொண்டு உள்ளே இருந்து ஜன்னல்கள் வழியாக வெளியே பார்த்தார் ரங்கநாதன்.

காற்றில் ஜன்னல்தான் அடித்துக் கொள்கிறது என்று உணர்ந்த ரங்கநாதன், தன் மகன் கோபுவைப் பார்த்து ''ஏண்டா! குளிர்க் காற்று அடிக்குதே, ஜன்னலை மூடுன்னு சொன்னேனே மூடினியா?'' என்று சொல்லிக் கொண்டு கதவுகளை மூடிக் கொக்கிகளைப் போட்டார்.

''அப்பா! எனக்கு ஒரே பயமாக இருக்குப்பா!'' என்றான் மெல்லிய குரலில் கோபு.

''எதுக்கு, ஏன் பயப்படணும்? பேசாம படுத்துத் தூங்கு....'' என்று தைரியம் சொன்னார் அவன் அப்பா ரங்கநாதன்.

''எனக்குக்கூட....'' என்று இழுத்தாள் கோபுவின் தங்கை மீனா.

''சும்மா இருக்கமாட்டே? நாங்க இருக்கும்போது எதுக்குப் பயப்படணும்...?'' என்று அவள் அம்மா பங்கஜம் சொல்லிக் கொண்டிருந்தபோது அடுப்படியில் இருந்து 'டணால்' என்று சத்தம் கேட்டு அனைவரும் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தனர். ஒரு எலி மேலேயிருந்து எவர்சில்வர் பாத்திரத்தைக் கீழே தள்ளிவிட்டு தெருப்பக்கமாக ஓடியதைப் பார்த்ததும் 'அப்பாடா!' என்று அவர்களுக்கு நிம்மதி வந்தது!

மங்கலாக மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

கோபுவின் அப்பா குறட்டை விடுவதிலிருந்தே அவர் நன்றாகத் தூங்கிவிட்டார் என்பதைக் காட்டியது. அவன் அம்மாவும் தூங்கி நெடு நேரம் ஆகிவிட்டது. அலமாரியில் வைக்கப்பட்டிருந்த அலாரம் மட்டும் தூங்காமல் 'டக் டக்' கென்று தன் வேலையைச் செய்து கொண்டிருந்தது.

நள்ளிரவுக்குப் பின்—

அந்த வீட்டின் முன்னே யாரோ சிலர் 'கசமுச' வெனப் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு, ஒருவன் புழக்கடைப் பக்கமாக வந்து, எப்படியோ கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் நுழைந்தார்கள்.

ஒருவன் மரப் பீரோவைத் திறப்பதற்கு முயற்சிக்கையில், அருகில் இருந்த அலாரத்தின் மீது கைபடவே, அது கீழே விழுந்தது. விழுந்த சத்தம் கேட்டு பங்கஜம் கண்களைத் திறந்து பார்த்தாள். எதிரே நான்கைந்து பேர் முகமூடியுடன் நின்றிருந்தார்கள். பதறியடித்துக் கொண்டு எழுந்து 'திருடன் திருடன்' என்று கத்தினாள்.

''உஸ்.... கத்தாதே! சத்தம் போட்டே கொன்னுப்புடுவேன்!'' என்று மிரட்டினான் அவர்களுள் ஒருவன். அவன் கையில் கத்தி மின்னிக் கொண்டிருந்தது!

அடுத்த நிமிடம், ரங்கநாதன் கோபு, மீனா எல்லாரும் விழித்துக் கொண்டார்கள். கோபுவும், மீனாவும் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

''மரியாதையாகச் சாவியை இப்படிக் கொடுங்கள்..'' என்று ஒருவன் பயமுறுத்தினான்.

ரங்கநாதன் பயந்துகொண்டே சாவிக் கொத்தை இங்கும் அங்கும் தேடினார். அது எங்குமே இல்லை.

''உம்.... சீக்கிரம்..'' என்று அவசரப்படுத்தினான் ஒரு தடியன்.

''சாவியை இங்கேதானே வைச்சேன்... காணோமே...'' என்றாள் நா குழற பங்கஜம்.

''தம்பி! எங்களை விட்டுடு... பீரோவிலே பணமோ நகையோ எதுவும் கிடையாது'' என்று கெஞ்சினார் ரங்கநாதன். மீனா ஓவென அழுதாள். பங்கஜம் கை கால் ஓடாமல் அப்படியே மரம் போல் நின்றாள். கோபு இங்கேயும் அங்கேயும் ஓடினான்.

''டேய், எங்கேடா ஓடறே?'' என்று முதுகில் ஒரு அறை வைத்

தான் ஒரு முகமூடி.

'ஐயோ!' என்று அழுத கோபு, ''சார்! நாங்க ஏழைங்க.... எங்க கிட்டே எதுவுமில்லே.....'' என்று சொல்லிக் கொண்டே தன் புத்தகப்பையை எடுத்து வந்தான். அதிலுள்ள ஒரு புத்தகத்தில் மடித்து வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய ரூபாய் நோட்டுகளை அவர்களில் ஒருவனிடம் கொடுத்து ''இதில் 250 ரூபாய் இருக்கு. எனக்கு 'யூனிபார்ம்' தைக்கிறதுக்காகவும், சுற்றுலா போகறதுக்காகவும் எங்க மாமா தந்த பணம்...இதை வேணும்னா வச்சிக்கிட்டு எங்களையெல்லாம் விட்டுடுங்க..'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டே பரிதாபமாக அழுதான்.

அதைப் பார்த்த தடியன், மற்றவனைப் பார்த்து, ''டேய், அதைச் சீக்கிரம் வாங்கிக்கோடா. வந்த வரைக்கும் லாபம்!'' என்று சொன்னான்.

கோபு கொடுத்த ரூபாய் நோட்டுக்களை ஒருவன் 'லபக்'கென்று பிடுங்கிக் கொண்டான். அதில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் மற்றும் இரண்டு, ஐந்து, பத்து ரூபாய் நோட்டுகள் இருந்தன. அந்த மங்கலான வெளிச்சத்தில் அவற்றை அவசரமாக மடித்து கால்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டு வெளியே ஓடினான். அவனைத் தொடர்ந்து தடியன் உட்பட மற்றவர்களும் ஓடினார்கள்.

அப்போது கோபு தைரியமாக வெளியே வந்து 'திருடன்! திருடன்!' என்று உரக்கக் கத்தினான். இதைக் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் தூக்கத்திலிருந்து எழுந்து ஓடிவந்தார்கள்.

திருடர்கள், மாரியம்மன் கோயில் பக்கமாகப் போய் இருப்பார்கள். அப்போது தடியன் ஒரு பாறாங்கல் தடுக்கிக் கீழே 'தொப்'பென விழுந்தான். சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட மாரியம்மன் கோயில் சாமியார் ஓடிவந்து அவனை அப்படியே பிடித்துக் கொண்டார். அதற்குள் மற்றவர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு போய் கோயில் தூணில் கட்டினார்கள்.

உடனே, போலீசுக்குத் தகவல் கொடுத்தார்கள். போலீசார் விசாரித்ததில், அவர்கள்தான் பல நாட்களாகக் கொள்ளையடிக்கும் கும்பல் என்று தெரிய வந்தது!

இவர்கள் பிடிபடக் காரணமாயிருந்த கோபுவை எல்லாரும் பாராட்டினார்கள். அதுமட்டுமல்ல, பீரோவில் இருந்த நகையும் பணமும்கூட கோபுவின் தந்திரத்தால்தான் களவு போகாமல் காப்பாற்றப்பட்டது!

கோபு, திருடர்களிடம் கெஞ்சி அழுவது போல் நடித்து, தன் புத்தகப் பையிலிருந்து 250 ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தான் அல்லவா? அந்த நோட்டுகளெல்லாம் உண்மையான நோட்டுக்களே அல்ல? அவன் மாமா, விளையாடக் கொடுத்த, பொய் நோட்டுகளே அவை! ஆம் அவன் மாமா அந்த ஒவ்வொரு நோட்டையும் ஒரு கடையில் 5 காசுக்கு வாங்கினாராம்! அசல் நோட்டுக்களைப் போன்று அவை புத்தம் புதியதாய் இருந்ததால், அதை வாங்கினார். பிறகு அதைக் கோபுவிடம் கொடுத்தார்.

நல்ல சமயத்தில் கோபுவுக்கு அந்த யோசனை வந்தது. திருடர்களை ஏமாற்ற, உடனே அழுவது போல் நடித்து, அந்தப் பணத்தைக் கொடுத்தான். மங்கலான வெளிச்சத்தில் அது அசல் ரூபாய் நோட்டுகள் போலவே தென்பட்டதால், திருடர்கள் அதை வாங்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்!

கோபுவின் சமயோசித புத்தியைக் கண்டு பெற்றோர்கள் உட்பட எல்லாரும் மகிழ்ந்தார்கள்: பாராட்டினார்கள்.

## பொது அறிவுப் புதையல்

1. இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் யார்?
2. இந்தியாவுக்கு வந்த முதல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்?
3. சூயஸ் கால்வாயைக் கட்டியவர் யார்?
4. ஐரோப்பாவின் நோயாளி என்று கூறப்படும் நாடு எது?
5. உலகின் சர்க்கரைக் கிண்ணம் என்று குறிப்பிடப்படும் நாடு எது?
6. மிக அதிகமான காலம் வாழும் பறவை எது ?
7. லண்டனில் இந்திய ஹை கமிஷனராகப் பணி புரிந்த முதல் பெண்மணி யார்?

விடை : அடுத்த பக்கம்

## பத்துத் தத்துவங்கள் !

—ஏ .சாந்தி

ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்
ஒற்றுமை உணர்வே உயர்வாகும்

இரண்டும் ஒன்றும் மூன்றாகும்
இனிய பேச்சே உரமாகும்

மூன்றும் ஒன்றும் நான்காகும்
முத்துத் தமிழே மூச்சாகும்

நான்கும் ஒன்றும் ஐந்தாகும்
நாளும் கற்பது வளமாகும்

ஐந்தும் ஒன்றும் ஆறாகும்
அறிவை வளர்ப்பது நூலாகும்

ஆறும் ஒன்றும் ஏழாகும்
ஆத்திரம் அடைவது பாழாகும்

ஏழும் ஒன்றும் எட்டாகும்
ஏழைக் கிரங்குதல் நன்றாகும்

எட்டும் ஒன்றும் ஒன்பதாகும்
எளிமை வாழ்வே இன்பமாகும்

ஒன்பதும் ஒன்றும் பத்தாகும்
உண்மை உரைத்தல் சொத்தாகும்

பத்தும் ஒன்றும் பதினொன்றே
பகைவருக் கருளுதல் மிகநன்றே !

## குழந்தைகள் திரைப் படத்தின் பிறப்பிடம் எது ?



குழந்தைகளுக்காகத் திரைப் படம் எடுப்பது முதலில் சோவியத் யூனியனில் ஆரம்பமாயிற்று. குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான திரைப்படம் எடுப்பதிலேயே கவனம் செலுத்தி வரும் மாஸ்கோ கோர்க்கி ஸ்டுடியோ சுமார் 50 ஆண்டுக் காலமாகச் செயல்பட்டு வருகிறது. இது தவிர, சோவியத் யூனியனில் உள்ள ஒவ்வொரு ஸ்டுடியோவும் குழந்தைகளுக்கான திரைப் படங்கள் தயாரித்து வருகின்றன. ஆண்டுதோறும் குழந்தைகளுக்காகச் சுமார் 30 முழு நீள திரைப்படங்கள் தயாரித்து வருகின்றன.

இங்கு குழந்தைகளுக்கென 360 திரைப்பட அரங்குகள் உள்ளன. திரைப்படக் கலை நுட்பங்களைக் குழந்தைகள் புரிந்து கொள்ளும் படிச் செய்வதில் நிபுணர்களின் ஒரு பெருங் கூட்டமே ஈடுபட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு திரைப்படச் சங்கங்கள் அமெச்சூர் திரைப்பட ஸ்டுடியோக்கள் முதலியவை நடத்தப் படுகின்றன.

இங்கு, குழந்தைகளுக்கான திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரி கிடையாது. முதியோருக்கான ஒவ்வொரு திரைப்பட அரங்கிலும் குழந்தைகள் படங்கள் திரையிடப்படுகின்றன. இவற்றிற்கான கட்டணம், சாதாரண டிக்கட்டில் ஐந்தில் ஒரு பங்கு தான்.

இப்போது குழந்தைகளுக்கான திரைப்படங்கள் தயாரிக்கும் திறமை வாய்ந்த இயக்குநர்கள் பலர் தோன்றியுள்ளனர். இவர்கள் தயாரிக்கும் படங்களில் பொழுது போக்கு அம்சம் மட்டுமின்றிப் பண்பை வளர்க்கும் அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கான சிறந்த திரைப்படங்கள், சிறந்த மனிதப் பண்புகளை வலியுறுத்துகின்றன. அவை ஒருவன் தன் செயல்களுக்குத் தானே பொறுப்பு ஏற்பது, நட்பை வளர்ப்பது, எளியவர்களுக்கு உதவுவது, சமுதாய விவகாரங்களில் பங்கு கொள்வது—இவை போன்றவையாகும்.

இங்கு திரைப்படக் கலை, ஒரு நல்லாசிரியனின் பணியை நிறைவேற்ற முயல்கிறது. குழந்தைகளுக்கான கார்ட்டூன் படங்களும், விஞ்ஞானப் படங்களும், டாக்குமெண்டரிப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன.



### விடைகள்

1. சரோஜினி நாயுடு.
2. ஐசன் ஹோவர்.
3. பெர்னாண்-டி-லெச்சப்ஸ் என்ற பிரெஞ்சு நாட்டுப் பொறியாளர்.
4. துருக்கி.
5. கியூபா.
6. ஆந்தை.
7. விஜயலட்சுமி பண்டிட்.

தொகுப்பு :
நா. சுப்பிரமணியன்,
விருத்தாசலம்.



# முதுமலையில் ஒரு நாள்

மாமூலன்

உலகச் சுற்றுலா தேசப்படத்தில், சுற்றுலாப் பயணிகள் இந்திய நாட்டில் காண வேண்டிய இடமாகக் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஒன்று முதுமலை வன விலங்குகள் புகலிடம்.

முதுமலைக் காடுகள் நீலகிரி மாவட்டத்தில், கேரள மாநில எல்லையையும், கருநாடக மாநில எல்லையையும் ஒட்டிக்கொண்டு அமைந்துள்ளது. முதுமலை வன விலங்குப் புகலிடத்தை ஒட்டி கருநாடக மாநிலத்தில் பண்டிப்பூர் காடுகளும், கேரள மாநிலத்தின் வயநாடு காடுகளும் அமைந்துள்ளன.

கடல் மட்டத்துக்கு மேல் ஆயிரம் அடி மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. மொத்தம் 324 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன முதுமலைக் காடுகள்.

வானுயர்ந்த மரங்கள் மிக அடத்தியாக உள்ளன. தேக்கு, தோதகத்தி, ஈட்டி மரம், கருமருது போன்ற மரங்களும், சில இடங்களில் சந்தன மரங்களும் உள்ளன. பச்சைப் பசேலென்று எங்கும் புற்கள் மண்டிக்கிடக்கின்றன. பள்ளத்தாக்குப் பகுதிகளும், மலைச் சரிவுகளும், சிற்றாறுகளும் மோயாறும் அருவியும் இப்பகுதிக்கு எழிலூட்டுகின்றன.

முதுமலைக் காட்டில் யானைகளும், மான் கூட்டமும், சிறுத்தைகளும், காட்டெருமைகளும், காட்டுப் பன்றிகளும், சிங்கவால் குரங்குகளும், வரையாடுகளும் பல்வேறு வனவிலங்குகளும் உள்ளன.

உதகமண்டலத்திலிருந்து 64 கிலோ மீட்டர் தொலைவு சென்றால், முதுமலை வனவிலங்குப் புகலிடத்திலுள்ள கார்குடியை அடையலாம். மைசூரிலிருந்தும் உதகமண்டலம் செல்லும் பாதையில் சாலை வழியாகச் சென்றால் மைசூரிலிருந்து 95வது கிலோ மீட்டரில் கார்குடியை அடையலாம். அங்கிருந்து முதுமலைக் காட்டுக்குச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்குப் பல வசதிகள் உள்ளன.

முதுமலை வனவிலங்குப் புகலிடத்தைச் சுற்றுலாப் பயணிகள் காண சிறந்த பருவம், பிப்ரவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையும் ஆகும். ஏனைய மாதங்களிலும் சுற்றுலாப் பயணிகள்





முதுமலைப் பகுதிகளுக்கு வந்த வண்ணமிருக்கின்றனர்.

முதுமலைக்குச் செல்பவர்கள் அங்கே தங்க, கார்குடியிலும் தெப்பக்காட்டிலும் தங்கும் விடுதிகளும், 'அபயாரண்யா' என்ற விடுதியும் உள்ளன.

சென்னையிலிருந்து பத்திரிகையாளர்கள் வனவிலங்கு வார விழாவையொட்டி முதுமலைக்குச் சென்றார்கள். தெப்பக்காட்டில் செய்தியாளர்களை முதுமலை கானுயிர்க் காவலர் திரு வி. எம். நரசிம்மன் ஐ. எப். எஸ்., அவர்களும், கான்துறை ரேஞ்சர்களான தெப்பக்காடு திரு ஆர். ராமு, கார்குடி திரு டி. ராமச்சந்திரன், முதுமலை திரு எம். நடேசன், மசனக்குடி எம். மாரிமுத்து ஆகியோர் வரவேற்று முதுமலை வனவிலங்குப் புகலிடத்தின் சிறப்புக்களை விவரித்தனர்.

தெப்பக்காட்டில் உள்ள யானைகள் முகாம், மிகவும் புகழ் வாய்ந்தது ஆகும். இங்கு பழக்கப்படுத்தப்பட்ட 27 யானைகள் உள்ளன. காடுசளில் வெட்டப்படும் மரங்களை இழுத்துவரவும், மற்ற வேலைகள் செய்யவும் இவை பயன்படுத்தப்படுகின்றன. ஐந்து யானைகளில் சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து செல்லும் வகையில் இருக்கைகள் கட்டி விடப்பட்டுள்ளன. அவைகளில் சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து செல்கின்றனர்.

தெப்பக்காட்டிலுள்ள யானைகளுக்குத் தேவையான அளவு உணவுகளை அளிக்கின்றனர். இயற்கையான வகையில் உணவு உட்கொள்ள யானைகளை இரவில் அவிழ்த்து விட்டு விடுகிறார்கள். அந்த யாரனைகளை அடையாளம் தெரிந்து கொள்ள, காலில் ஒரு சங்கிலியைக் கட்டிவிட்டு விடுகின்றனர். யானைகள் அந்தச் சங்கிலியை இழுத்துச் செல்லும் அடையாளத்தை வைத்து காலையில் அந்த யானைகளைப் பிடித்து வருகின்றனர்.

தெப்பக்காட்டிலுள்ள யானைகள் முகாமில் உள்ள சிறிய யானைக்குட்டி அங்குள்ள விநாயகர் ஆலயத்தில் மணி அடிப்பதும், கோயிலைச் சுற்றி வந்து வ்ணங்குவதும் காண்போருக்குக் களிப்பூட்டும் காட்சியாகும்.

இங்குள்ள யானைகளுக்கு மருத்துவம் செய்ய கால்நடை மருத்துவர் ஒருவர் உள்ளார். முதுமலைக் காட்டின் சிறப்புகளைக் கானுயிர் காவலர் எடுத்துரைத்ததுடன் அவைகளைப் பார்வையிட பத்திரிகையாளர்களையும் அழைத்துச் சென்றார்கள்.

அன்றிரவு தெப்பக்காட்டிலுள்ள 'சிலிவன் லாட்ஜ்' என்ற வனத்துறையின் தங்கும் விடுதியில் பத்திரிகையாளர்கள் தங்கினார்கள்.

தெப்பக்காட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வனத்துறைக்குச் சொந்தமான ஜீப்புகளில் ஏறிச் செல்லலாம். கூடவே வழிகாட்டி ஒருவரும் வருவார். ஆறுபேருக்கு கிலோ மீட்டருக்கு 2 ரூபாய் என்று கட்டணம் வசூலிக்கிறார்கள். காலையிலும் மாலையிலும் யானைகள்மீது ஏறியும் காட்டுக்குள் சென்று வனவிலங்குகளைக் காணலாம்.

காலையில் பத்திரிகையாளர்கள் அனைவரும் ஒரு லாரியில் ஏறிக் கொண்டு நல்ல சாலையுள்ள பகுதிகளில் காட்டுக்குள் 24கிலோ மீட்டர் தொலைவு சென்றோம்.



எங்கும் அடர்ந்த காடுகள். இருள் சூழ்ந்த காட்சிகள். கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை தேக்கும், நூக்கும் வானுயர்ந்து நிற்கும்தோற்றம். தொலைவிலே கூட்டம் கூட்டமாக மேய்ந்து கொண்டிருக்கும் மான்கள், லாரியின் ஓசையினால் துள்ளி ஓடி மறையும் காட்சிகள்.

இரண்டு மணி நேரம் முதுமலைக் காட்டிற்குள் யானையில் ஏறிச் சென்று, தொலைவில் மேயும் யானைக் கூட்டத்தைக் கண்டோம்.

காட்டுப் பன்றிகளையும் சில இடத்தில் புலியின் காலடிச் சுவடி

யானைகளைப் பழக்கியுள்ள காட்டுநாயக்கர்களும், குறும்பர்களும் வனவிலங்குகளிடம் மிகவும்பிரியத்துடன் பழகுகிறார்கள். அவர்களிடம் பழகியுள்ள யானைகள் உரிமையோடு பழகும் விதம், காண்போரை மெய் சிலிர்க்கச் செய்கிறது.



'யானையைப்போல நாங்களும் பெருத்த உடலை உடையவர்கள் என்று காட்டுவது போல இருந்த காட்டெருமைக் கூட்டம் ஓடி மறையும். புதர்களை நோக்கி ஓடும் காட்டுப் பன்றிகள், மரங்களை முறித்தெறிந்தபடி செல்லும் யானைகள் முதலியவைகளைக் கண்டோம்.

தெப்பக்காட்டுக்குத் திரும்பியவுடன் யானைகள்மீது ஏறி மறுபடியும் காட்டுக்குள் சென்றோம். அடர்ந்த புதர்களுக்கிடையே - செங்குத்தான பாதைகளில் பெரிய பள்ளங்களைத் தாண்டி தாண்டிச் சென்றோம். காட்டுக்குரங்குகளின் இரைச்சல், மோயாற்றில் ஓடும் வெள்ளம் எழுப்பும் இனிய இசை-புள்ளினங்கள் எழுப்பும் இசை இவைகளை அனுபவித்தவாறு வீசும் குளிர்க்காற்றில் காட்டின் நடுவில் செல்லும் சுகம் அலாதியானது.

இந்தச் சுகத்தை அனுபவிக்கவோ என்னவோ ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் முதுமலைக்கு வருகின்றனர்.

களையும் கண்டோம். தண்ணீர் இல்லாதக் காலங்களில்தான் வனவிலங்குகள் தண்ணீரைத் தேடி இங்கும் அங்கும் அலையுமாம். அப்பொழுதுதான் அதிக அளவில் வனவிலங்குகளைச் சுற்றுலாப் பயணிகள் காணமுடியும் என்றார்கள்.

முதுமலைப் பகுதியில் காட்டு நாயக்கன் என்ற வகுப்பாரும், குறும்பர்கள் எனப்படும் பழங்குடி மக்களும் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் வனத்துறையிலேயே பணிபுரிகின்றனர்.

முதுமலை வனவிலங்குப் புகலிடங்களைச் சுற்றிப் பார்க்கும் யாரும், வனவளம் நாட்டின் பெரும் நலம் என்பதையும், வனவிலங்குகள் பேணிக் காக்க வேண்டிய பெருஞ்செல்வம் என்பதையும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இப்பொழுது நமது அரசு எடுத்து வரும் முயற்சியால், தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் காணத்தகுந்த சிறந்த இடமாக முதுமலை வனவிலங்குப் புகலிடம் வளர்ந்து வருகிறது.



# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# திருத்தணியில் ஒரு முன் மாதிரி




# மருத்துவ முகாம்

‘நோய்நாடி நோய் முதல்நாடி
அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்’
—என்பது திருக்குறள்.

நோயையும், அதன் காரணத்தையும், அதை நீக்கும் வழியையும் அறிந்து வைத்தியம் செய்கிறவனே .சரியான வைத்தியன்!

—என்பது அதன்பொருள்.

இவ்வாறான நுணுக்க அறிவோடு மருத்துவம் பார்க்கிறவர்கள் நகர்ப்புறங்களிலேதான் இருப்பார்கள் என்றொரு தவறான எண்ணம் கிராமப் புறங்களிலே பரவலாக இருக்கிறது. இது தவறு. வட்ட மருத்துவ மனைகளிலும் அதற்கான மருத்துவர்கள் - மருத்துவம் பார்ப்பதற்கான வசதிகள் இருக்கவே செய்கின்றன.

தவிரவும் - இப்படிப்பட்ட தவறான எண்ணத்தால் நகர்ப்புறத்தை நோக்கிப் படையெடுப்போர் தொகை அதிகமாகிற போது - நகரத்து மருத்துவ

பி.எல்.ஆர்

மனைகள் நிரம்பி வழிகின்றன. நோயாளிகள் படுக்கை வசதி போதாமல் வெறும் பாய்விரிப்பிலே கிடத்தப்படுகிறார்கள். கூட்டம் அதிகமாவதால் மருத்துவர்களின் கவனிப்பும் குறைவாகிறது. ஊர்விட்டு ஊர்சென்று சேர்வதால், உடன் செல்வோருக்கும் சேர்த்துச் செலவிட நோயாளிக்கு வசதி இருப்பதில்லை.....

இதுபோன்ற குறைபாடுகள் நீங்கிட புதியதோர் திட்டம் வகுத்துச் செயல் படுத்தத் தொடங்கியிருக்கிறது இந்த அரசு.

**புதுத்திட்டம்**

அதன்படி-ஒரு மருத்துவக் கல்லூரியினைத் தன்னகத்தே கொண்டுள்ள மருத்துவமனையானது, அந்த மாவட்டத்திலுள்ள ஏதேனும் மூன்று வட்ட மருத்துவமனைகளைத் தத்து எடுத்துக் கொள்ளும். நகர்ப்புற மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை டாக்டர்கள் கொண்ட குழு ஒன்று மாதம் இரண்டு மூன்று தடவை, குறித்தநாளில் அந்த மருத்துவ மனைக்குச் செல்லும். அந்தப் பகுதி மக்களின் மருத்துவக் குறைபாடுகளைத் தீர்க்கும்.

—இது திட்டம்.

இதனால் சிறந்த டாக்டர்கள் சென்னை மருத்துவமனையிலேதான் இருப்பார்கள். அங்கே போகலாம் என நோயாளிகள் யாரும் பயணப்படத் தேவையில்லை. சென்னையிலுள்ள சிறந்த டாக்டர்களே கிராமாந்தரங்களை நோக்கி வருகிறார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதி மக்கள் அந்தந்த வட்ட மருத்துவ மனையிலேயே சிகிச்சை பெறலாம்; சென்னை போன்ற பெரிய நகர மருத்துவமனைகளுக்குப் போய்க் கூட்டம் போட்டு 50 சதவிகித மக்கள் டாக்டர்களைத் தினற அடிப்பதையும் அந்தப் பகுதி மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு இடையூறு செய்வதையும் தவிர்க்கலாம்.

—இது அந்தத் திட்டத்தின் நோக்கம்.

எம்.டி. படித்த, எம்.எஸ். படித்த டாக்டர்கள் கிராமப் புறங்களுக்கு வருவதில்லை; அவர்களுடைய சேவை கிராமத்து மக்களுக்கு எட்டுவதில்லை என்கிற குறைபாடும் இதனால் ஓரளவுக்கு நீங்கும். ஏனென்றால் அப்படி வருகிற மருத்துவக்குழுவில் அவர்களும் இடம் பெறுகிறார்கள்.

அண்மையில் (15.10.80) அத்திட்டத்தின்படி சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவ மனையைச் சேர்ந்த அனுபவம் மிக்க டாக்டர்கள் எழுவர் திருத்தணியிலுள்ள அரசு மருத்துவ மனைக்குப் பயணம் செய்தார்கள்.

**டாக்டர்கள் குழு**

டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ் (M. S. General) அந்தக் குழு

**மருத்துவர் குழுத் தலைவரும் திருத்தணி மருத்துவ முகாமிற்குப் பேருதவிபுரிந்த திரு பி. எஸ் ரெட்டியும்**





வுக்குத் தலைமை ஏற்றார்.

டாக்டர்கள் குணசாகரன், ஷியாம் பிரசாத், ராஜேந்திரன், தீபக், குமார், துரைராஜ் ஆகியோரும் திருமதி ஜி.ஆர்.பிரதீபா என்கிற ஸ்டாஃப் நர்ஸும், இராதாகிருஷ்ணன் என்ற மருத்துவமனை உதவியாளரும் இருந்தார்கள் அக்குழுவில்.

அந்தத் திட்டம் பற்றி மக்களுக்கு உணர்த்துவதற்காக நாமும் அவர்களோடு செல்கிறோம். அரசினர் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையத்தைச் சேர்ந்த வேன் (டி.எம்.வி.4841) ஒன்று தான் இந்தப் பயணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒருபக்க இருக்கை வசதியுடைய அந்தச் சிறிய வண்டியிலேயே குழுத் தலைவரிலிருந்து அனைவரும் அடைத்துக் கொண்டு புறப்படுகிறார்கள்.

டாக்டர் நஞ்சுண்டராவ் சொல்கிறார்:

''கிராமப் புறங்களிலே போய் பணியாற்றுவதில் .எங்களுக்குத் துளிக்கூட்ச் சிரமம் இல்லை

ஆனால், போக்குவரத்துக்கு இப்படி வசதியில்லாத வண்டிகளை உபயோகிப்பது தான் கஷ்டமாயிருக்கு. அறுபது எழுபது மைல் இத்தனைப் பேரும் இதுல போகணும் வரணும். மருத்துவக் கருவிங்களையும் ஏத்திக்கணும்னா எப்படி?போன ஏப்ரல்ல,பூவிருந்தவல்லியில் நடந்த கூட்டத்துல கூட நான் இதைச் சொன்னேன். கிராமப்புற நடமாடும் மருத்துவமனை திட்டத்தை அங்கே கவர்னர் துவக்கிவச்சார். மொபைல் வண்டியைக் கிராமத்துக்கு அனுப்பறோம்-சரி. அதுல வேலை பார்க்க டாக்டர்களை எப்படி அனுப்பறது? அதுக்கும் வண்டி வசதி செய்து தரணும்னு கேட்டேன். இதுபத்தி அரசாங்கத்துக்கும் எழுதியிருக்கேன். ஹெல்த் மினிஸ்டரும் ஒரு டாக்டர்ங்கிறதால அவருக்கு இதோட கஷ்டம் புரியும்.''

அவருடைய கவனத்தைத் திட்டத்தின் பக்கம் திருப்புகிறோம் நாம். அவர் தொடர்கிறார்.

## நோக்கம் இதுதான்

''எங்களுக்கெல்லாம் எவ்வளவு தெரியும்னு காட்றதுக்காக நாங்க இப்படிப்பட்ட திட்டத்தின் மூலம் கிராமங்களுக்குப் போகலே. ஒரு தாலுகா ஹாஸ்பிடல்ல இருக்கிற எக்கியூப்மெண்ட்டை வெச்சி எவ்வளவு தூரம் சிகிச்சை பண்ண முடியும்னு செய்து காட்டவும், அப்படிப்பட்ட கேசுங்க அங்கேல்லாம் பெரும்பாலும் வராததால் அங்குள்ள டாக்டர்களுக்கும் அனுபவம் குறைச்சலா இருக்கும். அவங்களுக்கெல்லாம் தகுந்த முறையில பயிற்சி அளிக்கவும் தான் இந்தத் திட்டம். இது மெட்றாஸ் மெடிகல் காலேஜ் டூர். இதாட்டமே ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் செய்ய முன்வரணும். தமிழ் நாட்ல எட்டு மருத்துவக் கல்லூரிங்க இருக்கு; ஒரு கல்லூரி மூணு தாலூகா ஹாஸ்பிடலுங்களைப் பார்க்கிறதுன்னு ஆரம்பிச்சாலும் இருபத்திநாலு ஹாஸ்பிடலுங்க பயனடையுமே! நாங்ககூட திருத்தணிக்கப்புறம் திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி ஹாஸ்பிடலுங்களைக் கவனிக்கப் போறோம்! ''ஆர்வத்தோடும், முதிர்ந்த அனுபவ அறிவோடும் வழி நெடுகச் சொல்லிக்கொண்டு வருகிறார் டாக்டர் நஞ்சுண்டராவ்.

6.30 மணியளவில் நாங்கள் திருத்தணி சென்று சேரும்போது அரசு மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இவர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பது தெரிகிறது.

''எவ்வளவு ஆர்வத்தோட வெயிட் பண்றாங்க பார்த்தீங்களா? திருத்தணியில இது எங்களுக்கு நாலாவது கேம்ப்'' என்கிறார் டாக்டர் குணசாகரன்.

திருத்தணி அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவரான சீதாராம சர்மா, டாக்டர்கள் சி.ஆர். சீனிவாசலு, திருமதி மதியழகி, பிரபாகரன், திருமதி புவனேஸ்வரி ரகுராமன், திருமதி சுகுணா ராசேந்திரன் ஆகியோரும் ஸ்டாஃப் நர்சுகள் திருமதி டி. செல்வி, பி. பத்ம குமாரி ஆகியோரும் சென்னை மருத்துவக் குழுவைச் சிரித்த முகத்தோடு வரவேற்கிறார்கள்.

பயணக் களைப்பு நீங்கிட ஓய்வுகூட எடுத்துக்கொள்ளாமல் உடனே தமது பணியைத்துவக்குகிறார்கள் இவர்கள்.

திருத்தணி மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் சி.ஆர். சீனிவாசலுவைச் சில கேள்விகள் கேட்கிறோம். அவரளித்த பதில்களின் தொகுப்பு இது:

''நகரி, சித்தூர், திருப்பதியிலிருந்தெல்லாம் இங்கே நோயாளிகள் வருகிறார்கள். இங்கு 32 படுக்கைகள் உள்ளன. ஹிரண்யா, ஹைடிரசல், மூலம், பெப்டிக் அல்ஸர் போன்ற நோய்களே இந்தப் பக்கத்தில் அதிகம் காணப்படுகின்றன. சென்னை மருத்துவ மனையிலிருந்து பழம்பெரும் டாக்டர்கள் வந்து இங்கு சிகிச்சை செய்வதும், எங்களுக்குப் பயிற்சியளிப்பதும் ஒரு நல்ல ஏற்பாடாகும். எங்கள் மருந்துவமனை அத்திட்டத்தில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம்.''

அவசர சிகிச்சைப் பிரிவில் டாக்டர் நஞ்சுண்டராவ், நோயா

ளிகளின் நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாட முனைகிறார்.

''ஒம் பேரு என்னம்மா?''

''கஸ்தூரி.''

''வயசு?''

''முப்பத்ரெண்டுங்க.''

''என்ன ஒனக்கு?''

''இந்தக் கையைத் தூக்க இறக்க முடியலீங்க'' வலது கரத்தைக் காட்டுகிறாள் அந்த அம்மாள்.

டாக்டர் நஞ்சுண்டராவ் பரிசோதிக்கிறார். ''இங்கே வலி இருக்கா?... இங்கே?... இங்கே... இருக்கா?... துணியெ நனைச்சுப் பிழியறப்போ ரொம்ப வலிக்கிறதா? மார்ல ஏதாவது கட்டி இருக்கா? கழுத்து வலி இருக்கா? மாசத் தீட்டெல்லாம் சரியா இருக்கா?'' -இப்படி அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே வருகிறாள் அந்த அம்மாள். அந்தக் கரத்தை மெள்ள எடுத்து நீட்டி, மடக்கிப் பார்த்துவிட்டு உதவியாளருக்குச் சொல்கிறார். ''டென்னிஸ் எல்போ... அனால்ஜின்...யூரின் ஃபார் சுகர்... டேப்லட் ப்ரூஃபென்...''

டாக்டர் ராஜேந்திரன் அவர் சொல்லச் சொல்ல எழுதிக்கொள்கிறார்.

''இந்தாம்மா தினசரி ஆஸ்பத்திரிக்கு வந்துபோ மருந்து மாத்திரையெல்லாம் தருவாங்க. சாப்பிடு. ஆபரேஷனெல்லாம் வேணாம். சீக்கிரமேசரியாயிடும்!''

வெளியே வந்ததும் அந்த அம்மாள் மகிழ்வோடு சொல்கிறாள் ''அங்கே, கடத் தெருவுல ஒரு டாக்டர்கிட்ட காட்டினேன். ஆபரேஷன் பண்ணியே ஆகனும்னிட்டார். பட்டணத்து டாக்டர்ங்களே அது வேணாம்னுட்டப்புறம் எனக்கொண்ணும் பயமில்லே. அம்மாடி!''

நோயாளிகள் வரிசை தொடர்கிறது. சரியாக எட்டரைமணிக்கு முடிகிறது.

இரவு உணவுக்கு ஒரு வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகிறோம் நாங்கள். அதுபற்றி விசாரிக்கிறேன். டாக்டர் நஞ்சுண்டராவ் சொல்கிறார்- ''இது லயன்ஸ் கிளப் வைஸ் பிரஸிடெண்ட் மிஸ்டர் பி.எஸ்.ரெட்டி வீடு. இந்த கேம்ப்ல வர்ற எங்களுக்கெல்லாம் சாப்பாடு, தங்கற வசதி எல்லாத்தையும் திருத்தணி லயன்ஸ் கிளப்தான் செய்துதருது. எல்லா ஊர்லயும் இப்படியே செய்ய முடியாதுங்கிறதால இதுக்கும் ஒரு நல்ல ஏற்பாடு செய்து தரணும்னு அரசாங்கத்துக்கு எழுதீருக்கேன்.''

லயன்ஸ் கிளப் செயலாளர் திரு. கந்த கணேசன், மருத்துவக் குழுவினருக்கான உதவிகளைச் சுறுசுறுப்போடு செய்கிறார்.

## அறுவைச் சிகிச்சை

மறுநாள் (16-10-80) முந்தின நாளன்றே ஆபரேஷனுக்கு உரிய தெனத் தேர்வு செய்யப்பட்ட ஆபரேஷன்களுக்கான நாள்.

மருத்துவக் குழுவினரோடு நாமும்போய் திருத்தணி முருகனைத் தரிசித்துவிட்டு மருத்துவ மனைக்கு வருகிறோம். இதே குழுவினரின் முந்திய வருகையின் போது அறுவைச் சிகிச்சைசெய்து கொண்டவர்களான - ஓ.ஆர். சுரேஷ் என்ற சிறுவனிலிருந்து வி. சுதாகர், ஏ. செங்கல்வராயன் பி. அருணாசலம், ஏ.என்.சம்பத், பாலன், குப்பா நாயுடு ஆகியோரைப் பேட்டி காண்கிறோம். எல்லாரும் நல்லபடியாகவே சொல்கிறார்கள்.

திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். சண்முகம் வருகிறார். மருத்துவக்குழுத் தலைவர் டாக்டர் திரு நஞ்சுண்டராவுக்கு மாலையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறார். ''இந்த வகையில் இந்த அரசுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஹண்டே அவர்களுக்கும் திருத்தணி மக்கள் நன்றி தெரிவிக்கப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள்'' என்கிறார் அவர்.

அறுவைச் சிகிச்சை தொடங்குகிறது. நாமும் உள்ளே, தலையிலும் மூக்கிலும் துணிக்கவசம் போட்டுக்கொண்டு நுழைகிறோம்.

அன்றைய தினம் காலை 8.30 முதல் நடுப்பகல் 1 மணிவரை பத்துப் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்வதாக ஏற்பாடு. டாக்டர் ஷியாம் பிரசாத், கேஸ்களை முறைப் படுகதி ஒன்றன் பின் ஒன்றாக உள்ளே அனுப்புகிறார்.

## சிகிச்சையும் பயிற்சியும்

திருத்தணி மருத்துவமனைத் தலைமை டாக்டர் சர்மாவுக்கு- ஒரு ஹிரண்யா ஆபரேஷன் கேஸை நிமிஷத்துக்கு நிமிஷம் விளக்கிய படியே அறுவைச் சிகிச்சை செய்து காட்டி பயிற்சி தருகிறார் டாக்டர் நஞ்சுண்டராவ். அவர் கேட்கக் கேட்க அந்தந்தக் கருவிகளை உடனுக்குடன் எடுத்துக் கொடுத்து உதவுகிறார் நர்ஸ் கார்த்திகா.



அதே நேரத்தில் - அடுத்தாற போல இன்னொரு ஹைடிரஸல் கேஸை அறுவைச் சிகிச்சை செய்கிறார டாக்டர் சீனிவாசலு. அவருக்கு அதன் நுணுக்கங்களை அவ்வப்போது விளக்கி பயிற்சி தருகிறார் டாக்டர் குணசாகரன்.

''நாங்களே இங்கே வந்துடறதாலே, இதுமாதிரி சாதாரண கேஸெல்லாம் சென்னைக்கு வந்து தங்கி கன்னா பின்னான்னு செலவு பண்ணி கஷ்டப்பட வேண்டியதில்லே!'' - நமக்குச் சொல்கிறார் டாக்டர் நஞ்சுண்டராவ்.

கடைசி கேஸ் சரியாக நண்பகல் 12.30க்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

அத்தோடு சென்னை மருத்துவக்குழுவின் அன்றைய பணி திருத்தணி அரசு மருத்துவமனையில் முடிவடைகிறது. அடுத்து வரும் தேதியைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு விடை பெறுகிறார் அக்குழுத் தலைவரான டாக்டர் நஞ்சுண்டராவ்.

தொழுநோய் சிகிச்சை நிலையமும் இணைக்கப்பட்டு, மலைமேலுள்ள திருமுருகன் சந்நிதிக்கு நேர் கீழே சற்றுத் தொலைவில் அமைந்திருக்கும் அந்த மருத்துவமனையிலிருந்து நாமும் புறப்படுகிறோம்.

# சோடியம் ஆவி விளக்குகள்

தொகுப்பு: ஜி. ஆனந்தன்



சென்னை மாநகரில் முக்கிய சாலைகளில் சோடியம் ஆவி சாலை விளக்குகளை அமைக்கும் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட சாலைகளில் சென்னை மாநகராட்சி தனது வருவாயிலிருந்தும், பெருநகர் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிலிருந்தும் சுமார் ரூ. 11 இலட்சம் செலவிட்டு 400 சோடியம் ஆவி விளக்குகளை அமைத்துள்ளது.

1. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை.
2. அண்ணாசாலையில் அண்ணா மேம்பாலம் வரையில்.
3. அடையாறு திரு. வி. க. பாலத்திலிருந்து டாக்டர் முத்துலட்சுமி சாலை வரையில்.
4. பெரியார் ஈ. வெ. ரா. சாலை—சென்ட்ரல் நிலையம் அருகில் இருந்து ரிப்பன் மாளிகைவரையில்
5. ஆளுநர் மாளிகை அருகில்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை, உலக வங்கியின் உதவியுடன், அண்ணா சாலை மற்றும் பெரியார் ஈ.வெ.ரா. சாலை சந்திப்புகளில் பொருத்தமான அதிக ஒளி வழங்கும் சோடியம் ஆவி விளக்குகளை நிறுவ ரூ. 33 இலட்சம் சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது.

கீழ்க்கண்ட பகுதிகளில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் 10 மீட்டர் உயரமுள்ள கம்பங்களுக்குப் பதிலாக 11 மீட்டர் உயரமுள்ள கம்பங்களில், சாலையின் உட்பகுதிக்கும் ஒளி கிடைக்கும் வண்ணம் தகுந்த நீளத்தில் விளக்குப் பொருத்திகளை அமைத்தும், மின்இணைப்புக் கம்பிகள் (கேபிள்) போட்டும், 400 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்ணாசாலையின் சந்திப்புகள் :

1. பல்லவன் சாலை
2. ஆடம்ஸ் சாலை (பெரியார் சிலை)

'சோடியம் ஆவி' விளக்குகளை ஏற்றி வைக்கும் விழா, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் 15.10.80 அன்று சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ் இராகவானந்தம், குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு டி.கே.கபாலி, எம்.எல்.ஏ., தமிழக நெடுஞ்சாலை -ஊரகப் பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு க.ச. லோகவிநாயகம், திரு ஜேப்பியார் எம்.எல்.சி ஆகியோர் விழாவில் பங்கேற்று உரையாற்றினார்கள்.

மாநகராட்சி தனி அதிகாரி திரு ஓ. இராமச்சந்திரராவ் வரவேற்றார்.

சோடியம் - ஆவி விளக்குகளை ஏற்றி வைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில்

''சென்னை மாநகரில் முக்கியமான சாலையாக அமைந்துள்ள அண்ணாசாலையின் சந்திப்புகளில் ஒளி பொருந்திய சோடியம் ஆவி விளக்குகளை எரியவிடும் இந்தத் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் தமிழக அரசு செயற்படுவதாலும், இந்த ஒளி விளக்குகள் சேவைக்காக மட்டுமின்றி சிக்கனத்தையும் - அதிக பயனையும் தரக்கூடியதாக அமைகிறது.

''சோடியம் ஆவி விளக்குகள் பாதரச ஆவி (மெர்குரி) விளக்குகள் அமைக்க ஆகும் செலவை விட அதிகம் என்றாலும் தொடர் பராமரிப்பு மிகவும் குறைவானது. உதாரணமாக 400 வாட் மின் சக்தி கொண்ட பாதரச ஆவி விளக்கு 5,000 மணி நேரம் தொடர்ந்து எரிந்து 22,000 மின் ஒளித்திறன் கொடுக்கவல்லது.

''ஆனால், சோடியம் ஆவி விளக்கு 250 'வாட்' மின் சக்தியைக் கொண்டே 9,000 மணி நேரம் எரிந்து 24,000 மின் ஒளித் திறனைக் கொடுக்க வல்லது. சோடியம் ஆவி விளக்கின் ஆயுட்காலம், மெர்க்குரி விளக்கின் ஆயுட்காலத்தைவிட இரட்டிப்பானது. மின்சக்திக்கான செலவோ ஏறத்தாழ சரிபாதியாகிறது'' என்று குறிப்பிட்டார்.



# கொல்லங்குடி கருப்பாயி

சென்னை தொலைக்காட்சி நிலையத்தி லிருந்து ஒளிபரப்பாகிய அந்த நிகழ்ச்சி எல்லா ருடைய கவனத்தையும் கவர்ந்தது.

அந்த நிகழ்ச்சி-கொல்லங்குடி கருப்பாயியின் இசை நிகழ்ச்சி. வயலும் வாழ்வும் நிகழ்ச்சியில் மண்ணின் குரலாக ஒலித்தார் கொல்லங்குடி கருப்பாயி.

இராமநாதபுர மாவட்டம் சிவகங்கைச் சீமை கொல்லங்குடி கிராமத்தில் வாழும் அரிசன பெண் கருப்பாயி. விவசாயக் கூலியாக வேலை செய்பவர். வேலைச் சுமையை மறப்பதற்காக வயல் வெளியில் பெண்கள் பாடுவது இயல்பு. ஆனால், எல்லாப் பெண்களைப் போல் அல்லாது இவரிடம் மட்டும் மிக அபூர்வமாகக் காணப் படுபவை—

கற்பனை வளம்
கணீரென்ற குரல்
தாள ஞானம்

ஊரகப் பகுதிகளில் நீண்ட நெடுங்கால மாக வழங்கிவரும் பண்களில்—நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான பாடல்களை—புதிய சாகுபடி முறைகளை—குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை—கலப்பு மணத்தின் பெருமையைப் பாடலாக வழங்குகிறார். சுருக்கமாகச் சொன்னால் நாட்டுப்புறப் பாடல்களை மட்டுமல்ல நாட்டுக்குத் தேவையான கருத்துக்களையும் இவர் பாடுகிறார்.

கல்வியறிவு இல்லாத கொல்லங்குடி கருப்பாயி, புதிய புதிய செய்திகளை இலக்கிய நயத்தோடு பாடலாக்கிப் பாடுகிறார். அந்தப் பாடல்களுக்கு இசையமைப்பும் இவரே!

கொல்லங்குடி கருப்பாயியின் இசை ஞானத்தைப் பாராட்டி குன்றக்குடி அடிகளார் பாரி விழாவில் பதக்கத்தைப் பரிசாக வழங்கியுள்ளார்.

திருச்சி வானொலி நிலையத்தார் விவசாய நிகழ்ச்சி ஒலிபரப்புக்காகச் சென்றபொழுது இவரது ஆற்றலை அறிந்து கொண்டார்கள். ஆகவே, திருச்சி வானொலி கொல்லங்குடி கருப்பாயியின் நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.

சென்னை தொலைக்காட்சி நிலைய 'வயலும் வாழ்வும்' முதலிய ஊரக நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் தயாரிப்பாளர் எம். எஸ் பெருமாள் கொல்லங்குடி கருப்பாயியின் பாடல்களை ஒலிப் பதிவு செய்து வந்தார். அதைக் கேட்ட அனைவரும் பாராட்டவே—சென்னை டி. வி.யில் கொல்லங்குடி கருப்பாயியின் இசை நிகழ்ச்சியை தயாரித்து ஒளிபரப்பி எல்லாருடைய பாராட்டையும் பெற்று விட்டார்கள்.

—மாமூலன்.

### முதலாவது அட்டையில்

உலகம் முழுவதிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவர்ந்து நிற்கும் மாமல்லபுரத்துக் கடற்கரை கோயில், பின்னணியில், வான வெளியில் வானவில் தெரிய அழகோவியமாக காட்சி அளிக்கிறது.

### இரண்டாவது அட்டையில்

'சோடியம் ஆவி' விளக்குகளை ஏற்றி வைக்கும் விழா, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் 15.10.80 அன்று சிறப்பாக நடைபெற்றது.

வண்ணப்படங்கள் உதவி:
சுற்றுலாத் துறை,
தமிழ்நாடு அரசு.

### கடைசி அட்டையில்

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பறவைகள் சரணாலயமாகிய வேடந்தாங்கல் ஏரி.

குளிர்காலம் தொடங்கியவுடன் பன்னாட்டுப் பறவைகளும் இங்கு வந்து கூடிடும் காட்சி கண் கொள்ளாக் காட்சி.

# ஆசிரியருக்கு ஒரு முன்னோடித் திட்டம்

கல்வித்தர வளர்ச்சியில், பாடப்பொருள், பிற வசதிகள் யாவற்றிலும், முதன்மை இடம் பெறுவது ஆசிரியர்களின் தொண்டேயாகும். ஆசிரியர்களின் தரம் உயர, நாட்டின் கல்வித்தரம் உயரும், இதனை நன்குணர்ந்த தமிழக அரசு, தொடக்க நிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக்குதற்குரிய, அஞ்சல் மற்றும் நேர்பயிற்சி திட்டத்தை நல்கி இருக்கின்றது. இது இந்தியாவிலேயே தனிப் பெரும் முன்னோடித்திட்டம்.

**தொடக்கக் கல்வியின் சிறப்பிடம்:**

கல்வி நிலைகளில் தொடக்கக் கல்வியே எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. அடித்தளமாவது. தொடக்கக் கல்வியின் தரம், இடைநிலை மற்றும் கல்லூரிக் கல்வி நிலைகளிலும் பிரதிபலிக்கும். எனவே தான், தொடக்கக்கல்வி வளர்ச்சிக்காகப் பல புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றோம். தொடக்கக் கல்வியின் தரம், இந்நிலையில் தொண்டாற்றிவரும் ஆசிரியப் பெருமக்களைச் சார்ந்ததே. தொடர்ந்து பல்லாண்டுகள் பணியாற்றியும், நிலை வளர்ச்சியில்லை என்னும்போது நெஞ்சு நிறைவு கொள்வதில்லை. தொடக்கநிலை ஆசிரியர்களும், இளநிலை ஆசிரியர்களும் மேற்கொண்டு முன்னேறுவதற்கு வாய்ப்பினை துடிப்புடன் எதிர்நோக்கி உள்ளனர். தொடக்கநிலை ஆசிரியர்கள் முன்னேற வாய்ப்பளித்து, தமிழகத்தின் கல்வித் தர வளர்ச்சிக்கும், வழி வகுப்பதே தமிழ்நாட்டுக் கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் மேற்கொண்டுள்ள அஞ்சல் மற்றும் நேர்பயிற்சியின் தலையாய நோக்கமாகும்.

**திட்டத்தின் கண்ணோட்டம்:**

தமிழகத்தில் சுமார் 71,802 தொடக்கநிலை — இளநிலை ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களுக்கு படிப்படியாக 5 திங்களுக்கு அஞ்சல் நேர்பயிற்சி அளிக்கும் திட்டத்தினை இந்த ஆண்டு அரசு ஆரம்பித்துள்ளது. இத் திட்டத்தால் ஆண்டு தோறும் 5,000 ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.



பயிற்சி காலம் 5 திங்கள் ஆகும். *1980-81* செப்டம்பர் முதல் ஜனவரி, *81* வரை வரும் ஆண்டுகளில் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையும் அக்டோபர் முதல் பிப்ரவரி வரையும் இரு கட்டங்களில் நடைபெறும்.

ஒரே நேரத்தில் எல்லா ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளித்தால் தனிக்கவனம் பெறும் வாய்ப்பு குறைந்து, தரம் பாதிக்கப்படலாம் என்பதால் படிப்படியாக 5,000 ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் பயிற்சி அளிக்க திட்டம் இட்டிருக்கிறோம். இப்படித் தெரிந்தெடுப்பதற்கு, எல்லா மேலாண்மையிலும் பெற்ற பணிமூப்பு, அடிப்படையாகக் கொண்டுள்ள அரசுப் பள்ளி, தனியார் பள்ளி, ஒன்றியப் பள்ளி எனும் பல்வகைப் பள்ளிகளிலும் பணியாற்றும் யாவருக்கும் உரிய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக, அந்தந்த மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை விகிதப்படி இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அஞ்சல் பயிற்சியில் 6 பாடங்கள் இடம்பெறும். (1) தமிழ், (2) ஆங்கிலம் (3) கணிதம் (4) அறிவியல் (5) வரலாறு-புவியியல் (6) கல்வி அடிப்படைத் தத்துவம். பாடங்கள் ஆசிரியர்களின் உளநூல் தேவைகளையும் கல்வி நலன்களையும் கருத்தில் கொண்டு வல்லுநர்களைக் கொண்டு எளிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

மொழிப் பாடங்களில் குறிப்பாக ஆங்கிலத்தில் உச்சரிப்பு பேச்சுமுறை ஆகியவற்றில் பயிற்சி பெறவும், அறிவியல் ஆய்வுகள் எப்படி நடத்துவது என்பதிலும் திறன் பெறவும் நேர்பயிற்சி அளிக்கப்படும். மிகுந்த நன்மை அளிக்கக் கூடிய இப்பயிற்சி, அஞ்சல் பயிற்சியின் இறுதியில், குறுகிய காலத்திலேயே மிகுந்த பயன் தருமாறு அமைக்கப் பெறும்.

முன்னோடித் திட்டமாக, இந்தியாவிலேயே முதன்மைத் திட்டமாகத் திகழும் இப் பயிற்சியின் மூலம் தொடக்க நிலை ஆசிரியர்கள், நிறைந்த பயன் பெற்று, தமிழகக் கல்வித் தர வளர்ச்சியில் புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்துவார்கள் என்பது திண்ணம். ஆசிரியர் முன்னேற்றத்திற்கு வழிகோலும் இவ்வரும்பெரும் திட்டமானது, ஆசிரியர் திருநாளில் தொடங்கப் பெற்றது சாலச் சிறந்ததன்றோ!

## மாவட்ட வளர்ச்சிப் பணிகள் :

# இராமநாதபுர மாவட்டம்



100 குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம்

நூறு குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மானாமதுரையில் இரண்டு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இயந்திரப் பிரிவிற்காக ஓர் அலுவலகமும், கட்டடப் பிரிவிற்காக ஓர் அலுவலகமும் இயங்கி வருகின்றது. சென்ற ஆண்டு முதல் இவ்வாண்டு ஆகஸ்ட் 80 மாதம் முடிய இயந்திரப் பிரிவில் 58 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் திருப்புவனம், கமுதி, கடலாடி, அருப்புக்கோட்டை, பரமக்குடி, முதுகுளத்தூர் மற்றும் மானாமதுரை ஒன்றியத்தில் உள்ளோர் பயனடைந்து வருகின்றார்கள். இவ்வாண்டு, ஓர் புதிய அலுவலகம் சமுதாயக் கிணறு அபிவிருத்திக்கென திருப்புவனம் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி இவ்வாண்டு 49 கிணறுகள் தோண்டவும் 6 கிணறுகள் ஆழப்படுத்தவும், 5 ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டவும் ரூ. 23.38 இலட்சம் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு மற்றும் மாநில அரசினரால் இலட்சக் கணக்கான ரூபாய் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு, ஏழை எளியமக்களின் பாசன வசதியை பெருக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை மற்றும் திருவில்லிப்புத்தூரில் இரண்டு மண் வளப்பாதுகாப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பயனற்ற நிலங்களை சாகுபடிக்கேற்ற நிலமாக மானாவாரி நிலத்திட்டத்தின் கீழ் மண்வளப் பாதுகாப்பு அலுவலகம் ஒன்று, ரூ. 17.45 இலட்ச மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை தலைமையிடமாகக் கொண்டு, இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அருப்புக்கோட்டை, திருவில்லிபுத் தூர், சாத்தூர் தாலூகாவில் கரிசல் மண் பகுதி அதிகமாக உள்ளதால், அங்குள்ள மக்கள் பருத்தி மிளகாய், மற்றும் பயறு வகைகள் சாகுபடி செய்து, இத்திட்டத்தின் கீழ் பயனடைய வாய்ப்புள்ளது.

**திருப்புவனத்தில் ஓர் புதிய கோட்ட அலுவலகம்.**

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ் தற்பொழுது கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், சிவகங்கை,
2. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், திருவில்லிப்புத்தூர்
3. மண் மற்றும் நீர் பராமரிப்புத்திட்டம், திருப்புவனம்.
4. மானாவாரி நிலப் பண்ணைத் திட்டம், சிவகாசி.
5. 100 ஆழ்குழாய்த்திட்டம் (இயந்திரம்) மானாமதுரை.
6. 100 ஆழ்குழாய்த்திட்டம் (கட்டடம்) மானாமதுரை.
7. 100 ஆழ் குழாய்த்திட்டம் (ஆய்வு) மானாமதுரை
8. சமுதாய நலக்கிணறு திட்டம், திருப்புவனம்.
9. மானாவாரி நிலப்பண்ணைத்திட்டத்தின் கீழ் மண்வளப் பாதுகாப்புத் திட்டம், அருப்புக் கோட்டை.
10. மண் வளப் பாதுகாப்புத் திட்டம், சாயல்குடி.
11. இணை நீர் பராமரிப்புத் திட்டம், மருப்புவனம்.
12. இணை மானாவாரி நிலப் பண்ணைத்திட்டம், சாத்தூர்.

மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் தவிர்த்து, இராமநாதபுரம் மாவட்ட இயந்திரப் பிரிவின் தலைமை அலுவலகம் ஒன்று சிவகங்கையில் செயல்பட்டு வருகின்றது. பதின்மூன்று அலுவலகங்களையும் ஓர் செயற் பொறியாளரால், கண்காணிக்க கடினமாகயிருப்பதால், ரூ. 59.55 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் புதிய செயற் பொறியாளர் அலுவலகம் அண்மையில் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது. இக்கோட்ட அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், இம்மாவட்டத்தில் உள்ள 13 அலுவலகங்களும் இரண்டு செயற் பொறியாளர்களுக்குப் பிரிக்கப்பட்டு, வேளாண்மை அபிவிருத்தியை அதிகரிக்கவும், இலக்கினை முழுதும் அடையவும், வறட்சியைப் போக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**— இர. அண்ணாதுரை,**
மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (செய்தி-மக்கள் தொடர்பு) இராமநாதபுரம் மாவட்டம்.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

- **கிராம ஏற்புத் திட்டம்:**

  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

# உலகெலாம் தமிழ்பரப்பும் ஒப்பற்ற நிறுவனம்

அமைதியின் இருப்பிடம் என்று அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பெறும் அடையாறு, தொழில் கல்வி நிலையங்களின் வளாகம். அதன் அருகே காட்சி தரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் உள்ளே செல்கிறோம்; நுழையும் போதே நிறுவன வெளியீடுகள் கண்ணாடிப்பேழையின் உள்ளிருந்தவாறே நம்மை வரவேற்கின்றன.

நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களின் அறைக்குள் நுழைகிறோம். அவரது இருக்கைக்கு எதிரே சுவரில் மாட்டப் பெற்றுள்ள பலகையில் காணப்பெறும் 'என் கடன் தமிழ்ப்பணிசெய்து கிடப்பதே' என்னும் வாசகம் நம்மைக் கவர்கிறது.

தூய வெள்ளைக் கதராடையுடன் அகத்திலும் முகத்திலும் தமிழ்ப் பண்பு மலர்ச்சிதரும் தோற்றத்தில் காட்சி தருகிறார் இயக்குநர். அவரது இலக்கணம் வழுவாத் தமிழ்ப் பேச்சு—அழுத்தம் திருத்தமான உச்சரிப்பு ஆகியவற்றைக் கேட்கும்போது தமிழே அறியாதவர்களுக்குக் கூட, 'தமிழ்க் காதல்' ஏற்பட்டுவிடும். தடங்கலின்றி அவர் அளிக்கும் விளக்கங்கள் தமது துறையில் அவருக்கிருக்கும் நுண்ணறிவையும் பெருந்திறமையையும் நமக்கு எடுத்துரைக்கின்றன. காற்றில் ஒலித்த அவரது விளக்க உரைகளை 'தமிழரசு' வாசகர்களுக்கு வரிவடிவமாக்கித் தருகிறோம்.

**உலகத்தில் எந்தெந்த நாடுகளில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது?**

அமெரிக்காவில் சிகாகோ, வாஷிங்டன், பென்சில்வேனியா பல்கலைக் கழகங்களிலும் ஜெர்மனியில் கோலன், ஹைடல்பர்க் போன்ற பல்கலைக் கழகங்களிலும், லண்டனில் ஸ்கூல் ஆப் ஓரியண்டல் மற்றும் ஆப்ரிக்கன் ஸ்டடிஸ் என்ற நிறுவனத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. அந்தப் பல்கலைக் கழகங்களில் நமது நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்களும் அந்நாடுகளைச் சார்ந்த பேராசிரியர்களும் தமிழைக் கற்பிக்கின்றனர்.

**உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் - எப்போது, ஏன், எவ்வாறு துவக்கம் செய்யப் பெற்றது?**

சென்னை மாநகரில் 1968ல் நடைபெற்ற 2வது உலகத்தமிழ் மாநாட்டிற்குத் தலைமை ஏற்ற அந்நாளைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'உலகிற்குத் தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தவும், உலகத் தமிழர்களுக்குத் தமிழ் இலக்கியம் பற்றி அறிவுறுத்தவும் ஒரு நிறுவனம் தமிழகத்தில் அமைக்கப் பெறவேண்டும் என்று குறிப்பிட்டதற்கிணங்க 1970ஆம் ஆண்டு ,ஆகஸ்ட் திங்களில் அந்நாளைய கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைத் தலைவராகவும் டாக்டர் மு.வ. அவர்களை இயக்குநராகவும் கொண்டு இந்நிறுவனம் அமைக்கப் பெற்றது. தற்போது மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் இந் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்கள்.

**இந்நிறுவனத்தின் நோக்கங்கள் யாவை?**

உலகிலுள்ள தமிழ் அறிஞர்களை ஒன்றாக இணைத்துத் தமிழ் ஆய்வினை வளரச்

## உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர். ச. வே. சுப்பிரமணியன் அவர்களுடன் சிறப்புப்பேட்டி



செய்தல் - உலக அறிஞர்களுக்குத் தமிழ் மொழி, இலக்கியம் கலை, பண்பாடு போன்றவற்றை உணர்த்துதல் - வெளிநாட்டார், வெளிமாநிலத்தார் ஆகியோருக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

**இந்நோக்கங்கள் எவ்வாறு செயலாக்கப் பெறுகின்றன?**

பேரறிஞர்களை அவ்வப்போது அழைத்துக் கருத்தரங்குகள் நடத்தி, எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கிறோம். வெளிநாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்து ஆய்வு நடத்துகின்ற அறிஞர்களுக்குத் தேவைப்படும் உதவி

பேட்டி: புலவர் தமிழ்ப்பித்தன்



## தமிழ் மொழிப் பயிற்சி நடைபெறுகிறது

கள செய்து அவர்களுக்கு வழிகாட்டுகிறோம். அமெரிக்கர் ஒருவர் இங்கு வந்து 'தமிழ் நாட்டில் 17ஆம் நூற்றாண்டுப் பாளையக் காரர்களின் ஆட்சி' என்னும் தலைப்பில் ஆய்வு செய்தார். அதற்குரிய ஆவணங்கள் அவருக்குக் கிடைப்பதற்கு உதவி செய்தோம். ஜப்பானைச் சேர்ந்த இருவர் தமிழிலக்கியத் தில் பௌத்த சமயம்' குறித்து நடத்திய ஆய் வுக்காக, மணிமேகலை போன்ற நூல்களைப் படிப்பித்துக் கொடுத்தோம்.

**கருத்தரங்குகள் எந்த அடிப்படையில் நடத்தப் பெறுகின்றன?**

நிறுவன ஆய்வாளர்களுக்கென ஒவ் வொரு வாரத்திலும் வெள்ளிக் கிழமையில் நடைபெறும் வாரக் கருத்தரங்கு, மாதந் தோறும் 3ஆம் திங்கட்கிழமையன்று மத்திய நூலகக் கட்டடத்தில் இலக்கியக் கொள்கை குறித்து நடைபெறும் மாதக் கருத்தரங்கு, தமிழரின் பண்பாட்டு மரபுச் செல்வம் குறித்து ஆண்டு தோறும் நடத்தப்பெறும் ஆண்டுக் கருத்தரங்கு என மூன்று வகைகளில், கருத் தரங்குகள் நடத்தப் பெறுகின்றன.

நிறுவன அமைப்பில் நடைபெறும் வாரக் கருத்தரங்குகளுக்கு மொழி இயல்-இலக்கணம் ஊர்ப்பெயர், சுவடி இயல் ஆகியனவை ஆய்வுக் குத்தரப்படுகின்றன. ஆய்வாளர்கள் இவை குறித்துத் தமது ஆய்வுத்தாளைப் படிப்பர்.

**இதுவரை நடைபெற்றுள்ள கருத்தரங்கு களின் எண்ணிக்கை யாது?**

கடந்த 8 ஆண்டுகளில் இதுவரை நிறு வன அளவுக் கருத்தரங்குகள் 290 நடைபெற் றுள்ளன. மாதக் கருத்தரங்குகள் 73 நடை பெற்றிருக்கின்றன. ஆண்டுக் கருத்தரங்குகள் 6 நடைபெற்றுள்ளன.

**கருத்தரங்குகள் எந்த மொழியில் நடத் தப்பெறுகின்றன?**

வாரக் கருத்தரங்கு, தமிழிலும் ஆங்கி லத்திலும் நடத்தப் பெறுகிறது. மாதக் கருத் தரங்கு தமிழில் நடைபெறுகின்றது. ஆண்டுக் கருத்தரங்குகள் ஆங்கிலத்தில் மட்டுமே நடை பெறுகின்றன. உலக மக்களுக்குத் தமிழின் பெருமையை - சிறப்பை எடுத்துச் சொல்ல வேண்டியிருப்பதால் ஆண்டுக் கருத்தரங்கு களை ஆங்கிலத்தில்தான் நடத்தவேண்டி யுள்ளது.

**வெளிநாடுகளில் தமிழ்குறித்து நடை பெறும் கருத்தரங்குகளில் இந்நிறுவனம் பங்கு பெறுகிறதா?**

ஆம்! இந்நிறுவனம், தனது இயக்குநர், பேராசிரியர்கள் ஆகியோரை அனுப்பிப் பங்கு கொள்ளச் செய்கிறது. அண்மையில் மொரீ ஷியஸ் தீவில் நடைபெற்ற உலகப் பண்பாட்டு மாநாட்டில் இந்நிறுவன இயக்குநர் என்ற முறையில் நான் கலந்துகொண்டேன். இந்திய நாட்டளவில் தமிழ் மொழி -பண்பாடு ஆகி யவை குறித்து அவ்வப்போது நடைபெறும் கருத்தரங்குகளிலும் இந்நிறுவனம் பங்கு கொள்கிறது.

**வெளிநாட்டார், வெளிமாநிலத்தார் ஆகி யோருக்கு இங்நிறுவனத்தில் தமிழ் எவ்வாறு கற்றுத்தரப்படுகிறது?**

தமிழ் மொழியின் பெருமையினை உணர்ந்து உலகின் பல நாடுகளில் பல பல் கலைக் கழகங்கள் தமிழ் கற்பித்து வருகின் றன. அங்குக் கற்றவர்கள் தங்கள் கல்வியைத் தமிழகத்திற்கு வந்து வளர்ச்சிபெறச் செய் வதற்கு இந்நிறுவனம் பல வகைகளிலும் உதவுகின்றது. தமிழ் பேச்சு மொழியைக் கற் பதற்கும் இலக்கிய மொழியை அறிவதற்கும், இலக்கியங்களைத் தெரிந்து கொள்வதற்கும் இந் நிறுவனத்தை நாடி வருகின்ற அயல் நாட்டவர்க்கு முறையான தமிழ்க் கல்வியை இந்நிறுவனம் அளிக்கிறது. அதற்காக, அமெ ரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ள ஒலிப்பதிவு நாடா முறையிலான மொழிப் பயிற்சிக்கூடம் (Language Laboratory) பயன்படுத்தப்பெறு கிறது.

**இதுவரை வெளிநாட்டவர் எத்தனை பேர் இந்த மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியால் தமிழ் கற்றிருக்கிறார்கள்?**

கடந்த 7 ஆண்டுகளில் ஜப்பான், ஜெர் மனி, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளைச் சார்ந்த ஏறத்தாழ 120 பேர், தமிழ்மொழிப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். தற்சமயம், ஆப்பிரிக்கா, மொரீஷியஸ் ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்கள் பயில்கின்றனர்.

**பயிற்சி வகுப்பு எப்போது நடைபெறுகிறது?**

ஒரு நாளுக்கு இரண்டுமணிநேரம் வீதம், வாரத்தில் மூன்று நாட்கள் பயிற்சி, மூன்று மாத காலத்திற்கு அளிக்கப்படுகின்றது. பின்னர் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆறுமாதகால டிப்ளமா வகுப்பும், ஓர் ஆண்டுக்கால உயர்நிலைப் படிப்பும் இங்கு உள்ளது.

**பிறமாநிலத்தவரும் பிறநாட்டினரும் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கு மூன்று மாதப் பயிற்சி போதுமானதா?**

போதுமானதுதான்! 'முப்பது நாட்களில் இந்தி', 'முப்பது நாட்களில் மலையாளம்' என்றெல்லாம் தமிழகத்தில் வெளிவந்துள்ள நூல்களைப் படித்தே அம்மொழிகளில் சிலர் தேர்ச்சிபெறுகின்றனர் என்று சொல்லப்படும் போது, மூன்று மாதங்களில் பிறநாட்டார் தமிழைக் கற்பது எளிதானதுதான். இந்த உண்மையை நாங்கள் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கிறோம்.

**இந் நிறுவனத்தில் தமிழ்மொழிப் பயிற்சி நடைபெறுகிறது என்பதை நீங்கள் விளம்பரம் செய்வதில்லை. அவ்வாறிருக்க, பிற மாநிலத்தவர்களும் பிறநாட்டவரும் எவ்வாறு அறிந்து கொள்கிறார்கள்?**

மைய அரசின் கல்வித்துறையால் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளது இந்நிறுவனம். இதில் தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்னும் செய்தி மைய அரசுக்குத் தெரியும். அதனால் இந்நிறுவனத்தின் சார்பில் நாங்கள் விளம்பரம் எதுவும் செய்யாவிட்டாலும், பிறநாட்டவர்கள், மைய அரசின் கல்வித்துறையின் வாயிலாகத் தகவல் அறிந்து இங்கு வருகின்றனர்.

**இந்நிறுவனத்தில் வேறு சிறப்புகள் ஏதும் உண்டா?**

சென்னைப் பல்கலைக் கழகம் இந்நிறுவனத்தை ஆய்வு நிறுவனமாக ஏற்றுக்கொண்டுள்ளது; ஏறக் குறைய 50 மாணவர்கள் இங்கு பிஎச்டி பட்டத்திற்குரிய ஆய்வை மேற்கொண்டுள்ளனர். ஏற்கெனவே நான்கு பேர் ஆய்வுப் பட்டம் பெற்றுள்ளனர்.

உலகத்தில் இதுவரை தமிழ்மொழி குறித்து என்னென்ன ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன என்பது குறித்து ஒரு நூல் வெளியிட எண்ணியுள்ளோம். இதுவரை உலகில் உள்ள பலநாடுகளில் மொத்தம் 1238 ஆய்வு நூல்கள், தமிழ் குறித்து வெளிவந்துள்ளன.

**ஆய்வுத் துறையில் இந்நிறுவனம் ஆற்றும் பணிகள் யாவை?**

இங்கு ஆய்வுகள் தமிழரின் பண்பாட்டு அடிப்படையில் தான் பெரும்பாலும் நிகழ்த்தப்பெறுகின்றன. ஆய்வாளர்களுக்கு ஆய்வுக்குரிய பொருள்களைத் தேர்ந்தெடுத்துச் சொல்கிறோம்; தமிழரின் ஆடைகள் - தமிழரின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் - தமிழர் கண்ட மனம் - தமிழ் இலக்கியங்களுடன் ஏனைய மொழி இலக்கியங்களின் ஒப்புநோக்கு போன்ற தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அவ்வப் பொருளில் ஆய்வு நடத்துமாறு ஆய்வாளர்களுக்குக் கருத்துக்கள் கூறுகிறோம்.

**பதிப்புத் துறையிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறதே!**

ஆம்! இந்நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பெறும் கருத்தரங்கக் கட்டுரைகள் செம்மையாக்கப்பட்டு, நூல் வடிவில் வெளியிடப்படுகின்றன. தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தலைப்பில் தமிழ் இலக்கியத்தின் சிறப்பை 10 தொகுதிகளாக வெளியிட முடிவு செய்து, இதுவரை 5 தொகுதிகளை வெளியிட்டுள்ளோம்.

இந்நிறுவனத்தின் உதவியுடன் ஆய்வு நடத்தும் ஆய்வாளர்களின் நூல்களையும் வெளியிட்டு வருகிறோம் இதுவரை 5 ஆய்வு நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

உலகில் அச்சில் வெளிவராத ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் ஓலைச் சுவடிகளாகவும் கையெழுத்துப் படிவங்களாகவும் தனியாரிடமும் நூலகங்களிலும் இருக்கின்றன. அவற்றை வெளியிட முயன்று வரும் தமிழக அரசின் குறிக்கோள் நிறைவேறுவதற்கு இந்நிறுவனம் உறுதுணையாக இருக்கிறது. இதுவரை வெளிவராத ஓலைச் சுவடிகளைத் தேர்ந்தெடுத்து அச்சு நூல்களாக்கி வெளியிடுகிறோம். சின்ன மகிபன் குளுவ நாடகம், பணம் விடுதூது, திருக்குருகூர் திருவேங்கடம் பிள்ளைத்தமிழ் என 3 நூல்களை வெளியிட்டிருக்கிறோம். 5வது உலகத் தமிழ்மாநாட்டிற்கு முன்னதாக, மேலும் 3 நூல்களை வெளியிட முயற்சி செய்துவருகிறோம். மொத்தத்தில் இதுவரை 20 நூல்களுக்குமேல் இந்நிறுவனத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. ஜனவரித் திங்களில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு முன்பு இன்னும் 10 நூல்கள் வெளியிடப்பெறும்.

தமிழியல் ( JOURNAL OF TAMIL STUDIES ) என்னும் இதழை ஆண்டுக்கு இருமுறை இந்நிறுவனம் வெளியிடுகிறது. உலக அறிஞர்கள் பலராலும் எழுதப்பெறும் ஆங்கிலமொழி, தமிழ் மொழிக் கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெறுகின்றன. இந்த இதழ் உலக முழுதும் அனுப்பப்படுகிறது. இதுவரை 20 தொகுதிகள் வெளிவந்துள்ளன. 200 ரூபாய் செலுத்தி ஆயுள் உறுப்பினர் ஆகின்றவர்களுக்கு முன் இதழ்கள் அனைத்தும் வழங்கப்பெறுகின்றன.

**ஏட்டுச் சுவடிகள் குறித்து இந்த நிறுவனம் ஆற்றும் பணி எத்தகையது?**

உலகம் முழுதும் ஏறத்தாழ 1 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் ஓலைச் சுவடிகள் இருக்கும் என்று கருதப்படுகிறது. கேரளப்



பல்கலைக் கழகத்தில் 3281 சுவடிகள் உள்ளன. பாரிஸில் உள்ள தேசிய நூலகத்தில் 578 ஓலைச் சுவடிகள் இருக்கின்றன. லண்டனில் உள்ள பிரிட்டிஷ் அரும்பொருட்காட்சியக நூலகத்தில் 200க்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகள் உள்ளன. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் 100க்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகள் உள்ளன.

ஆகவே உலக முழுதும் உள்ள தமிழ் ஓலைச் சுவடிகளைக் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்ச் சுவடிகளின் அடைவு ஒன்றினை உருவாக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது இந் நிறுவனம். 'உலகில் தமிழ்ச் சுவடி' என்ற தலைப்பில் இந் நூலை ஓர் ஆண்டுக்குள் வெளியிட முயன்று வருகிறோம்.

**இந்நிறுவனம் பதிப்பித்த நூல்களில் குறிப்பிடத் தக்கவை யாவை?**

எல்லா நூல்களும் குறிப்பிடத்தக்கவை தான். என்றாலும் உலகில் தமிழர் எங்கெங்கு வாழ்கின்றனர், எங்கெல்லாம் தமிழ்க் கல்வி நடைபெறுகிறது என்பதைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் 'உலகில் தமிழும் தமிழரும்' என்னும் நூலும், நிறுவனத்தின் முதல் இயக்குநர் டாக்டர் மு.வ. அவர்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு நூலும், 'உலகத்தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?' என்னும் நூலும் குறிப்பிடத்தக்கவை.

**சுவடி இயல் கல்வி இங்குக் கற்பிக்கப்பெறுவதாகச் சொல்கிறார்களே சேர்வதற்குரிய தகுதிகள் யாவை?**

கடந்த பள்ளி ஆண்டு முதல்(1978-79ல், இங்கு சுவடி இயல் டிப்ளமா வகுப்பு நடைபெற்று வருகிறது. இந்தியா முழுவதும் சுவடி இயல் கல்வி தரும் நிறுவனம் இது ஒன்று தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டம் அல்லது புலவர் பட்டம் அல்லது பி.லிட் பட்டம் பெற்ற ஆடவர், பெண்டிர் இருவரும் இந்த வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பெறுகிறார்கள்.

**சுவடி இயல் டிப்ளமா வேலை வாய்ப்பை உருவாக்குமா?**

எந்தக் கல்வியைக் கற்றாலும் உடனடியாக ஒருவருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்து விடும் என்று கூறமுடியாது; அது போலத் தான் சுவடி இயல் டிப்ளமாவும். என்றாலும் இதன் வாயிலாக ஒருவருக்குச் சில நன்மைகள் ஏற்படக்கூடும். சுவடிகளை நூலாகப் பதிப்பிக்கும் பணியில் பயிற்சி ஏற்படுவதுடன் தமிழர்களின் பெருமையை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**வேறு டிப்ளமா வகுப்பு ஏதேனும் இங்கு உள்ளதா?**

மொழிபெயர்ப்பு இயல் டிப்ளமா வகுப்பும் இங்கு நடத்தப்பெறுகிறது. இதில் சேருவதற்கு விரும்புவோர் பட்டதாரியாகவும் தமிழ் மொழியில் நல்ல தேர்ச்சியும் ஈடுபாடும் உடையவராகவும் இருக்க வேண்டும்.

**மொழி பெயர்ப்பு இயல் டிப்ளமா நடத்தப்பெறுவதன் நோக்கம் என்ன?**

உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் காணப்பெறும் உயர்ந்த கருத்துக்களைத் தமிழின் வாயிலாகத் தமிழர்க்குத் தருவது-அதே போல் தமிழ்மொழியில் உள்ள உயர்ந்த தத்துவங்களை உலக மொழிகளில் தருவது-ஆகியவையே இதன் நோக்கங்கள். தற்சமயம் ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

ஓராண்டுப் பயிற்சிக் காலம் கொண்ட இந்த டிப்ளமா வகுப்பு ஒவ்வொன்றிற்கும் படிப்புக் கட்டணம் 150 ரூபாய், அனுமதிக் கட்டணம் 10 ரூபாய், நூலக பிணைத்தொகை 15 ரூபாய் என மொத்தம் 175 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

**இந்நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் யாவை?**

தமிழ்ப்பணி செய்துவரும் இந்நிறுவனம் தமிழைப் பரப்பும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள ஊர்களின் பெயர்களைப் பற்றிய ஆய்வு நடத்துதல்.

தமிழில் வட்டாரமொழிகள் பற்றிய ஆய்வு நடத்துதல்.

தமிழில் நாட்டுப்புற இயல் குறித்து ஆய்வு நடத்துதல்.

தமிழ் இலக்கியங்களைப் பிற நாட்டவர் தக்க வகையில் அறிந்து கொள்ள உதவும் விதத்தில் தமிழ் இலக்கியத் துணைவன் உருவாக்குதல்.

தமிழ் இலக்கியக் கலைச்சொற்கள் குறித்து அகராதி ஒன்று தயாரித்தல்.

தமிழ்-வடமொழி - பாலி -பிராகிருதம் ஆகிய நான்கு மொழிகளுக்கும் உள்ள தொடர்பை ஆய்வு செய்து ஓர் அகராதி உருவாக்குதல்.

தமிழில் அறநூல்கள், நவீனங்கள், நாடகங்கள் ஆகியவை குறித்து ஆய்வு நடத்துதல். —இவை எங்களின் எதிர்காலத் திட்டங்கள் ஆகும்.

**இந்த நிறுவனம் பொது மக்களின் தொடர்பு இல்லாத பகுதியில் அமைந்திருப்பது சரியல்ல என்று பலர் கருதுகிறார்களே, அது குறித்து தங்களின் எண்ணம் யாது?**

ஒரு வகையில் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நகரின் மையப் பகுதியில் இந்நிறுவனம் அமைந்தால், வெளிநாட்டவரும் வெளி மாநிலத்தவரும் மிக எளிதில் நிறுவனத்துக்கு வருகை புரிந்து, தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற முடியும்.

அண்ணா சாலையில் அரசினர் தோட்டத்தில் இந்நிறுவனத்துக்கு பலமாடிக் கட்டடம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கருத்து ஒன்று உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் இந்தக் கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். எனவே விரைவில் நகரின் மையப் பகுதியில் இந்நிறுவனம் இயங்கலாம் என்ற நம்பிக்கை வேரூன்றியுள்ளது; முயற்சி திருவினை யாக்கும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்களுக்கு குளுமையூட்டும்
பருத்தி, மற்றும் பருத்தியில் அச்சிட்ட
சேலைகள்; கோடைக் காலத்திலும்
குளிர்காலத்தைக்காட்டும் பல
வண்ணச் சேலைகள். நீடித்து
உழைப்பவை.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

Licence No. TN/MS(C)/PP-23

பதிவு எண். M. 8676

